
# கேணிப்பித்தன் கதைகள்

3623



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேணிப்பித்தன் கதைகள்

Acc. No. 3623
Class. No. க
120/2
2004/2/26

## சிறுகதைத் தொகுப்பு

ச. அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்


| | |
|---|---|
| நூலின் பெயர் | : கேணிப்பித்தன் கதைகள் |
| நூலின் வகை | : சிறுகதைகள் |
| நூலாசிரியர் | : ச. அருளானந்தம் |
| அட்டைப்படம் | : ச.அ.அருள்பாஸ்கரன் |
| படங்கள் | : ச.அ.அருள்பாஸ்கரன் |
| முதற் பதிப்பு | : 06-10-2003 |
| வெளியீடு | : அருள் வெளியீடு<br>37/7, மத்திய வீதி, உவர்மலை,<br>திருக்கோணமலை.<br>026-2221507 |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கு |
| பக்கங்கள் | : 90 |
| பதிப்பகம் | : றெயின்போ மினிலாப்<br>361பி, நீதிமன்ற வீதி<br>திருக்கோணமலை.<br>026-2223454, 0777-303938 |
| விலை | : ரூபா. 120.00 |
| ISBN | : 955-98211-4-8 |

**கிடைக்குமிடம்:-**

லங்கா புத்தகசாலை
F.L.1.1.4. டயஸ்பிளேஸ்
குணசிங்கபுர. கொழும்பு - 12




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | அந்த ஒரு நாள் | - | 09 |
| 2. | திருப்பம் | - | 19 |
| 3. | இதனை இதனால் | - | 23 |
| 4. | விபுலாநந்த அலை | - | 31 |
| 5. | இராவணன் கண்ணீர் | - | 36 |
| 6. | தாங்குவேர்கள் | - | 40 |
| 7. | இது இலத்திரனியல் யுகம் | - | 49 |
| 8. | இரக்கமில்லாதவர்கள் | - | 58 |
| 9. | தவித்த முயலடிப்போர் | - | 67 |
| 10. | சூரன்போர் | - | 77 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஏணியாக இருந்து எல்லோரையும்
ஏற்றிவிட்டு என்றும் ஆழமான
கடலதுபோல் அமைதியாக இருந்து
அரும்பணியாற்றும் ஆற்றிய அனைத்து
ஆசிரியர்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

'அந்த ஆவணி ஆறு' 'வம்மிப்பூ' ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டு வைத்தேன். இந்நூல் எனது மூன்றாவது சிறுகதைத் தொகுதியாகும். சிறுகதைகள் நிறையவே எழுதினேன். நமது தேசியப் பத்திரிகைகள் உதவுகரம் நீட்டிப் பிரசுரித்து உற்சாகம் ஊட்டின. எனது கதைகள் சமூகத்தில் மலிந்து கிடக்கும் ஊழல்களைத் தொட்டுக் காட்டுவன. அரசியல் வாதிகளாலும் அரசாங்க அதிகாரிகளாலும் மக்கள் ஏமாற்றப்படுவதைப் படம் பிடித்துக் காட்டுவன. எனது கதைகளைப் படித்த எனது அபிமானிகள் திட்டினார்கள். சிலர் நீதிமன்றங்கள் வரை சென்றார்கள். நான் மனிதத்தை தேடுகின்றேன். அதனால் மனிதன் தனது கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும். நல்லன செய்யவேண்டும் என்பதற்காக எழுதுகிறேன். தனிப்பட்ட எந்த மனிதர்மேலும் எனக்குக் கோபம் கிடையாது. செய்வதைத் திருந்தச் செய்யும் படி கேட்கின்றேன்.

அரசசேவையில் கடமையாற்றிய அனுபவங்கள், நேரடியாக நான் அனுபவித்த கொடுரங்கள், மனிதப் போக்குகள், சந்தர்ப்ப வாதங்கள், சுரண்டல்கள் நமக்குள்ளும் சதிகள், அசம்பாவிதங்கள் ஆகியன எனது கதைகளின் கருவூலங்களாகும். பக்கத்து வீட்டுச் சிறுவன் பசித்திருக்கும் போது தாம்மட்டும் வயிறார உண்ணுதல் பாவம். மண்ணுக்காகப் போராடும் பிள்ளைகளையிட்டுத் துளிகூடச் சிந்திக்காத நம்மவர் 'எவர் எப்படிப்போனாலும் நமக்கென்ன' என்ற போக்கு, இன்னும் நம்மிடையே அன்றும் இன்றும் உண்டு.எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்க வழிகாட்டுதல் அல்லது அதற்குத் துணைபோதல் அறத்தில் மிக உயர்ந்த அறம் என்பது எனது நம்பிக்கை.

நான் வாழ்ந்து கொண்டிருக்கும் திருக்கோணமலை மாவட்ட மண் ஆக்கிரமிப்புக்காரர்களால் திட்டமிட்டுப் பறிபோய்க் கொண்டிருப் பதைத் தெரிந்தும் தெரியாதது போல் இருக்கிறார்கள். ஆக்கிரமிப்புக் காரர்களின் அடிவருடிகள் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார் கள். மக்களைத் தூண்டிவிட்டுக் கதிரைகளில் குளிர்காய்ந்தவர்களால் திருகோணமலை மாவட்ட தமிழர்களின் தாயகமண் பறிபோனது. 1964ல் இராவணன் கண்ணீர் கதையை எழுதினேன். சுதந்திரன் பத்திரிகை பிரசுரித்தது. 'இராவணன் கண்ணீரை இளைஞர்கள் துடைக்கத்தான் போகின்றார்கள்' என்று எழுதியதை இன்று எண்ணிப் பார்க்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இளைஞர் படை தமிழ்த்தேசியத் தலைவனின் தலைமையில் போராடப் புறப்பட்டு விட்டதை எண்ணி புளகாங்கிதம் அடைகிறேன். அந்த யுகத்தில் வாழ்கிறேன் என்பதில் எனக்கொரு பெருமிதம்.

இன்று இல்லாவிடினும் என்றாவது ஒரு நாள் எனது கதைகளைத் தமிழர்கள் அனைவரும் படிக்கத்தான் போகிறார்கள். எனது கதைகள் பலருக்குக் குத்தீட்டிகள். விமர்சனங்களும் மிரட்டல்களும் வழக்கறிஞர்களிடம் இருந்து வந்த 'சமன்ஸ்'களும் எனது கதைகளுக்குக் கிடைத்த வெற்றிகள்.

'இதுதான் சிறுகதையின் இலக்கணம்'. 'இப்படி இருப்பதே சிறுகதை' என்று இதுவரை எவரும் வரையறை செய்யவில்லை. சிறுகதை வாழ்க்கையில் நிகழும் ஒரு நிகழ்வு அல்லது ஒரு உணர்ச்சியை மையமாகக் கொண்டு பின்னப்படுகிறது. அதன் பயனும் குறிக்கோளும் ஒன்றாகும். சிறுகதை வளர்ந்து வரும் இலக்கியமாகும். ஒரு வாசகனின் உள்ளத்தில் உடனே மறந்துபோகாமல் ஒரு கிளர்ச்சியை ஒரு சில நிமிடங்களுக்காகவேனும் ஒரு சிறுகதை ஏற்படுத்துமாயின் அது அவனுக்குச் சிறந்த கதையாகிறது. ஒரு கதை எல்லா வாசகரையும் திருப்திப்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் ஒருவரையாவது அது திருப்திப்படுத்தும்.

நமது திறனாய்வாளர்கள் மேல்நாட்டுக் கதாசிரியர்கள் போல் கதைகள் எழுதவேண்டும். அவைதான் கதைகள். மற்றவைகள் கதைகளே அல்ல என அடித்துக் கூறுவார்கள். இவர்களது கூற்றுக்களை என்னால் ஏற்கமுடியாது. 'போல' இருப்பதைவிடச் சுயமாக இருக்கவே விரும்புகிறேன். புதுமைப்பித்தன் ஒரு காலத்தில் வாழ்ந்து ஒரு கட்டமைப்பை அறிமுகம் செய்தார். அதையே நாம் இன்னும் பின்பற்ற வேண்டிய அவசியம் ஏன்? இலங்கை எரிந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இன்னும் எத்தனை நாட்களுக்குப் 'போல' இருந்து பொறுப்பது. இந்த கட்டுமானங்களைத் தகர்த்து எறியவேண்டும். ஈழத்தமிழர்களுக்கு என்று ஒரு நடைமுறை இலக்கியம் படைக்கப் படவேண்டும். சுயங்கள் வெளிவர வேண்டும்.

இன்றைய ஈழத்தின் எழுத்தாளர்களிடம் சிறப்பாக வடக்குக் கிழக்கு மாநில எழுத்தாளர்களிடம் உணர்ச்சி பொங்கும் கருவூலங்கள் பிரவாகிக்கின்றன. இந்த ஊற்றுக்கண் அடைபடாதிருக்க வேண்டும். திறனாய்வாளர்கள் பழைய பஞ்சாங்கங்களைப் புரட்டிப் பார்ப்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்துப் புதுமைகளையும் ஈழத்தவரின் இதயத் துடிப்புக்களையும் நாடிபிடித்துபார்க்கவேண்டும். எல்லாவற்றையும் தொலைத்து விட்டு நிதம் செத்துக் கொண்டிருக்கும் உள்ளங்களில் கொழுந்து விட்டெரியும் உணர்ச்சிப் பிளம்புகளைத் தமதாக்கிக் கொள்ளவேண்டும்.

கவிதைகளிலும் கதைகளிலும் இந்த அவலங்களைச் சித்தரித்துக் காட்ட முனையும் எழுத்தாளர்களைக் கட்டியணைத்துக் கூட்டிச் செல்ல வேண்டும். திட்டமிட்ட 'குடியேற்றம்' 'சிங்களம் மட்டும்' சட்டங்கள் ஊடாக அடக்கு முறைகளை விதைத்துவிட்டு அறுவடை காணத்துடிக்கும் விதிகளைத் தகர்த்தெறியக் கிளர்ந்து எழுந்ததன் விளைவாக உருவாகிய அனர்த்தங்களினால் நெருக்குவாரங்களின் பிடியில் சிக்கிய இனத்தின் குமுறல்களை ஏற்றேயாக வேண்டும். இது காலத்தின் தேவைகருதிய கட்டாய நிபந்தனையுமாகும். கதிரைகளும் கட்சிகளும் இந்த மண்ணில் உருவாக்கும் சட்டங்களையும் மாற்ற வேண்டும்.

ஈழத்து எழுத்தாளனின் ஒவ்வொரு ஆக்கத்தினுள்ளும் பற்றாத புதிய தீக்குச்சு உண்டு. அதை எடுத்து வாசிப்பவனின் உள்ளத்தில் அது பற்றும். பற்றவேண்டும். ஈழத்து எழுத்தாளர்களது ஆக்கங்களுக்கு மதிப்புக் கொடுத்து ஆதரிக்க வேண்டும். ஈழத்து எழுத்தாளர்கள் தமது சொந்தப் பணத்தில் நூல்களை வெளியிடுகின்றார்கள். தாம் வாழும் சமூகத்தின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு அவற்றைப் பதிவு செய்கிறார்கள். அவற்றை வாங்கிப்படித்து ஆதரவு தருபவர்கள் எண்ணிக்கையில் வெகு சிலரே உள்ளனர். பாரதியைப்போல் நானும் செத்த பின்னும் எனது கருத்துக்களும், எண்ணங்களும் வாழும் என நினைக்கிறேன். ஈழத்தமிழரின் இன்னல்களைப் பதிவு செய்கிறேன். அதனாலேயே எது வந்தாலும் இருக்கும் வரையும் எழுதிக்கொண்டிருப்பேன். எழுதுகிறேன். எனது பணி தொடரும்.

எனது முயற்சிக்கு உந்து சக்திகளாக இருப்போர் பலர். அவர்களுள் வாசகர்களாகிய நீங்கள் முக்கிய இடத்தில் இருக்கிறீர்கள். சுதந்திரன் பத்திரிகையைத் தேடிய போது யாழ் பல்கலைக்கழகத்தில் இருப்பதை எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய எழுத்தாளர் செங்கை ஆழியான் அவர்கள் அறிவித்தார். எனது அன்புக்குரிய மாணவன் செல்வன் த.விக்னேஸ்வரானந்தன் போட்டோப் பிரதி எடுத்து அனுப்பி வைத்தார். எனது எழுத்துக்களுக்கு உயிர்கொடுக்கும் ஓவியங்களை வரைந்தும் நூலாக்கப் பணியில் ஈடுபட்டு உழைத்தும் வருபவர் எனது மூத்த மகன் ச.அ.அருள்பாஸ்கரன், கதைகளைப் படித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதித்து ஆக்கபூர்வமாக நெறிப்படுத்தும் எனது இளைய மகன் டாக்டர் அ.அருள்முரளி, நல்ல முறையில் அச்சிட்டுத் தரும் றெயின்போ பிரின்டேர்ஸ் மனேஜிங் டிரெக்டர் திரு. எஸ். சிவபாலன், அவர்களும் அவரது உதவியாளர்களும், எனது நூல்களைச் சந்தைப்படுத்தலில் ஆர்வம் காட்டிச் செயற்படும் கொழும்பு லங்கா புத்தகசாலை நிறுவனர் திரு.கை.சதீஸ், அவர்களும், அவரது உதவியாளர்களும், எனது கதைகளைத் தங்கள் பத்திரிகைகளில் பிரசுரித்து ஊக்குவிக்கும் அதேவேளை, அக் கதைகளை இந்நூலில் வெளியிட அனுமதியளித்த ஆசிரிய பீடத்தார் அனைவரும் என் இதயத்தில் இருப்பவர்கள் அனைவருக்கும் என்னிதய நன்றி.

ஆலங்கேணி<br>கிண்ணியா

ச.அருளானந்தம்<br>(கேணிப்பித்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஒரு நாள்



வழமைக்கு மாறாக அந்தத் திணைக்களம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. சிற்றூழியர் முதல் பலரும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டனர். சிலர் வழமைபோல் இருந்தாலும் அவர்களிடமும் ஒரு அவசரம் தென்பட்டது. நிர்வாக அலுவலர் மூர்த்தியின் முகம் கடுகடுப்பாகக் கனன்று கொண்டிருந்தது. பிரதம எழுதுநர் காதர் ஏனையவர்களை விரட்டிக் கொண்டிருந்தார்.

பிரதம எழுதுநரின் மேசைத் தொலைபேசி அலறியது. ரிசீவரைக் கையிலெடுத்தார், குரல் கொடுத்தார்.

"ஹலோ.... சீ...சீ...பேசுறேன்"

"ஹலோ சீ... சீ... வாகனத்துக்கு அனுமதி வந்திற்றுதோ..." தொலைபேசியில் நிர்வாக அலுவலர் மூர்த்தி குரல் கடுகடுப்பாக ஒலித்தது.

"அனுமதி பெறத்தான் சோமன் பிரதம செயலகம் போயிருக்கின்றான்" பிரதம எழுதுநரின் தொனி மறுமுனையில் ஒலித்தது.

"என்ன விளையாடுறீங்களா...? அங்க இருந்து என்ன செய்யிறியள்.... பெரியவர் இன்டைக்குக் கொழும்பு போறதெண்டு சொன்னனான்தானே...? " மூர்த்தியின் குரல் ஓங்கி ஒலித்தது. மூர்த்தி கடந்த எட்டு ஆண்டுகளாக அந்தத் திணைக்களத்தில் குந்தியிருக்கின்றார்.

"எத்தனை மணிக்குப் பெரியவர் போறார்" காதரின் அடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி புறப்பட்டது.

"பதினொரு மணிக்கு என்று எத்தனைதரம் சொல்லிப்போட்டேன்... கொண்டு போற கோவைகள் ரெடியா....?

கோவைப்பட்டியல் தொலைபேசியில் நீண்டது. பிரதம எழுதுநர் காதர் பெரிய விண்ணன். எத்தனை கோவைகள், எங்கு பெரியவர் கொண்டு போனாலும் அதில் அவரே 'பிளீஸ் ஸ்பீக்' என்று குறிப்பு எழுத அதன் கீழ் நிர்வாக அலுவலர் மூர்த்தியும் 'பிளீஸ் ஸ்பீக்' என்று குறிப்பு போட்டு திருப்பி அனுப்புவதைக் கண்ட அனுபவசாலி.

"ஓம்... ஓம்..." எல்லாம் ரெடி... அனுப்பிவிடுறன்" தொலைபேசி இன்ரகொம் வைக்கப்பட்ட ஒலி கேட்டது. பரமன் தூரத்தில் நின்றான். அவனைக் கை காட்டி அழைத்தார். அவன் ஓடி வந்தான்.

"டேய்... பரமன்... றைவர் சோமன்... எங்கடா... தேடிப் பிடித்துக் கூட்டிவா..."

பிரதம எழுதுநர் காதர் பரமனை விரட்டிக் கொண்டிருந்தார்

பரமன் பதறிப்போய் வெளியில் ஓடினான். கன்ரீன் களேபரமாய் இருந்தது. திணைக்களத்தின் பலதரத்து ஊழியரும் அங்கு காணப்பட்டனர். எவரெவர் எந்த எந்த இடத்தில் கூடியிருப்பார்கள் என்று பரமனுக்குத் தெரியும். இனம் இனத்தோடுதான் சேரும் என்பது பரமனின் தத்துவம்

ஊழியர்கள் தங்கள் தரத்தின் அடிப்படையிலேயே கன்ரீனில் இடம் பிடித்து இருந்தனர்.

கிளாக்மார் ஒருபுறம், றைவர்கள் ஒருபுறம், சிற்றூழியர் மறுபுறம், பதவிநிலை அலுவலர்கள் இன்னோர் புறம் என நீக்கமற நிறைந்திருந்தனர்.

"இண்டைக்கு ஒரு சந்தோசமான செய்தி" எனக் கூறி இடையில் நிறுத்தி கதிரையை இழுத்துப் போட்டுச் சாசுவதமாக இருந்து தேநீருக்கு ஓடர் பண்ணினார் கிளாக்கர் தருமர்.

சந்தோஷமான செய்தியென்றதும் மயான அமைதி நிலவியது. அனைத்துக் காதுகளும் செய்தியைக் கேட்க விரைந்து கூர்மையாக்கிக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேநீரை உறிஞ்சி இழுத்து ஒரு மிடர் இறங்கியதும், "இண்டைக்குப் பெரியவர் கொழும்புக்குப் போகிறார் " என்று இழுத்து முடித்தார்.

ஒரு பயங்கர அமைதி நிலவியது. உண்மை அறிய ஆவல்.

"சீ... ய். உண்மையா...?" அதிசயமாகக் கேட்டார் கிளாக்கர் சந்திரன்.

உண்மையாக இருக்க வேண்டுமென அவர் மனம் தெய்வங்களை வேண்டிக் கொண்டது. கன்ரீன் சுவர்களில் செய்தி பரவி எதிரொலித்தது. அனைவரது செவிகளிலும் தேன் வந்து பாய்ந்த இன்பம்.

"அது சரி... எப்போது பெரிசு திரும்புமாம்...?" ஆவல் ததும்ப கிளாக்கர் மணியத்தார் ஒரு கெம்பலோடு விசாரித்தார்.

கன்ரீன் தகவல் ஒலிபரப்பு நிலையமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது. ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒவ்வொரு திட்டம் ரெடியாகிக் கொண்டிருந்தது. பெரியவர் வருவதற்கிடையில் முடிக்கவேண்டிய திட்டங்கள் படமாக மனத்திரையில் விரிந்தது. சாரதிகள் ஒருபுறம் சல்லாபித்துக் கொண்டிருந்தனர்.

"டேய் சரவணா... நீ இன்னும் கொழும்புக்குப் போய் வந்த கிளைம் போடவில்லையா?" கனகன் தேநீரை உறிஞ்சி, சிகரட்டையும் இழுத்து ஊதிவிட்டுக் கேட்டான்.

"இல்ல மச்சான்... என்னத்துக்கு இந்த கிளைம் காணப்போகுது... கிளைம் போட்டாலும் இந்த எக்கவுண்ட் பகுதி உடனே தரவாபோகுது? ஆள்மாறி ஆள் லீவு போடுவாங்க. தவமிருக்கவேணும்" சரவணன் யதார்த்த நிலையை பெருமூச்சோடு வெளிப்படுத்தினான்.

"மச்சான் ரைவர்மார்களுக்கு இருபது மணித்தியாலம் தான் ஓவர்ரைமாம். என்ன அநியாயம்?" வெந்து கொண்டிருந்தான் பண்டா.

"இந்த கிளாக்மார் சுற்றித்திரிந்து போட்டு, குந்தியிருந்து ஓவரைம் எடுக்கிறார்கள் நாங்க உடம்ப முறிச்சி உழைத்துக் கேட்டாலும் தரமாட்டாங்கள்" பண்டா நொந்து கூறினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமன் கன்ரீனுள் எட்டிப்பார்த்தான் அவனது கழுகுக்கண்கள் சோமனைக் கண்டு கொண்டன. வெளியில் நின்றவாறு கைகாட்டி அழைத்தான்.

"பொறு இதைக் குடிச்சிட்டு வாறன்" சைகையால் விளக்கினான் சோமன். சிற்றூழியர் பக்கம் பரமன் செவிகள் மேய்ந்தன. அங்கே பாராளுமன்ற விவாதம் நடந்து கொண்டிருந்தது.

"டேய் சுந்தர், 'கசுவல்' சிற்றூழியர்கள் நிரந்தரமாக்க ஏதும் நடக்குதோ... நீதான் பெரியவரின் வலது கை" கிரேசியன் கேட்டான்.

"காடர் இல்லையாம். கசுவல் காரர்களை நிப்பாட்டக் கதை நடக்குது" தனக்குத் தெரிந்ததை ஒப்புவித்தான் சுந்தர்.

" இந்தக் காடரத் தீர்மானிப்பது யார்டா...?" கிரேசியன் கொஞ்சம் விஷயம் தெரிந்தவன். நாட்டு நடப்புப் புரிந்தவன் தேர்தல் காலங்களில் வாக்கு வேட்டைக்கு கிரேசியன் பயன்படுத்தப்படுபவன்.

"நாட்டின் சனத்தொகைக்கு ஏற்றவாறு ஆளணி தேவைப்படும். நமது தேவையை நாமதானே தீர்மானிக்க வேண்டும். இதுகளைத் தெரியாதவர்கள் திணைக்களத் தலைவர்களாக பொறுக்கிப் போடுறாங்க. அவங்களும் சம்பளத்தில் கண்ணாயிருக்காங்க" கிரேசியன் பெரிய லெக்சர் செய்து கொண்டிருந்தான்.

"இவங்க மேற்பார்வையெண்டு சுற்றியடிச்சுப் போட்டு சுளையா கிளைம் எடுத்துக் கொண்டு இருக்கிறாங்க" கிரேசியனின் கதை பிடிக்காத பதவிநிலை அலுவலர்களின் கண்க்ள் அக்கினி பூத்தன. வாய்கள் முணுமுணுத்துக் கொண்டன.

"இந்தத் தேர்தல் வரட்டும் காட்டுறம். ஒரு வேலை" கிரேசியன் சத்தம் பரவியது.

"இவங்கட வாயை அடக்க வேணும்". சங்கரர் கூறிக்கொண்டு எழும்பினார்.

"நாலு வருசத்துக்கு மேல் வேலை செய்பிறவங்களை இங்கிருந்து மாற்றவேணும்" நல்லதம்பியர் கடுமையாகச் சொன்னார். அவரே தொடர்ந்து பத்து வருடங்களாக இந்த திணைக்களத்தைத் தூங்க வைப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதை இண்டைக்கே பெரியவரிடம் சொல்லி முடிவுகட்ட வேணும்" திடமாக ஆமோதித்தார் சங்கரர்.

அவர்கள் சென்றபின் அப்பகுதி ஓய்ந்து போய்க்கிடந்தது. பொறுமையை இழந்த பரமன் விறுவிறு என்று கன்ரினுள் நுழைந்தான். சாரதி குழாமுக்குள் புகுந்தான். "ஓவரைம் குறைச்சுப் போட்டாங்கள். இதுக்கு ஒரு முடிவு கட்ட வேணும்" பண்டாவின் குரல் ஓங்கி ஒலித்தது.

"இதுக்கெல்லாம் காரணம் பெரியவரை ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரு சில பழசுகள்தான்" சரவணன் குறிப்பிட்டான்.

"ஓம் மச்சான் நான் இங்க வந்த காலத்தில இருந்து இவங்க இந்த திணைக்களத்திலதான் இருக்கிறார்கள். இதுக்கெல்லாம் ஒரு வழி, இஞ்சருந்து இவர்கள மாத்துறதுதான்" கனகன் அடித்துச் சொன்னான்.

பரமன் றைவர் சோமனின் கையைப் பிடித்து,

"முதல்ல உன்னை மாத்த போறாங்க" சொல்லி இழுத்துக்கொண்டு வெளியேறினான்.

"ஏன்டா"

"பெரியவர் கொழும்புக்குப் போறாராம். வாகன அனுமதி எடுக்க வேண்டும். சீசீ.... கெம்பிக்கொண்டிருக்கிறார். கெதியா வா...." பரமன் பதட்டத்தோடு கூறி நடந்தான்.

"இஞ்சபார் பரமன்... இவர்களுக்கு விசர். எல்லாம் ரெடி" வாகன அனுமதியை சோமன் காட்டினான். பரமனுக்கு பரம சந்தோசம். இமயமலை உச்சிக்கு ஏறிய பெருமிதம்.

சோமனை விட்டுப்போட்டுப் பறந்தான். பிரதம எழுதுநர் முகத்தில் கச்சான் வறுக்கலாம். பரமனைக் கண்டதும் அவர் உதடுகள் துடித்தன. "எங்கடா சோமன்?"

"வாகன அனுமதி வந்தாச்சே.. சேர்"

பரமனின் குரல் பிரதம எழுதுநரைப் பனி நீரால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிப்பாட்டிவிட்டது. நிம்மதிப்பெருமூச்சு மெதுவாக பறந்தது.

"இவன் தொலைவான்... வந்தவுடனேயே சொல்லி யிருக்கலாமே மடையன்" புறுபுறுத்துக் கொண்டார். இன்ரக்கொம் இரைந்தது, நிர்வாக அலுவலர் குரல் ஒலித்தது.

"சீசீ... பெரியவர் கூப்பிடுறார் வாங்க..."

ஆவணங்களை பொறுக்கிக் கட்டாகக் கையில் எடுத்தார். மேல் மாடியிலுள்ள பெரியவர் அறைக்குள் நுழைந்தார்.

மனேஜிங் டிரக்டர் பெருவழுதி சுழல் கதிரையில் சக்கர வர்த்தியாகக் காட்சி தந்து கொண்டிருந்தார். அவரை சூழப் பரிவாரங்களாக எடுபிடிகள். வட்ட மேசையில் திணைக்கள உயர் அதிகாரிகள் குறிப்புப் புத்தகங்களோடு சுற்றிவரக் காத்திருந்தனர். நிர்வாக அலுவலர் மூர்த்தி எல்லோர் வருகையையும் பயபக்தியாக ஒப்புவித்தார்.

மனேஜிங் டிரக்டர் பெருவழுதி வட்ட மேசை இருக்கையை நிறைத்தார். சந்தனப் பொட்டு நெற்றியில் பெரிதாய் பிரகாசித்தது. வழமைக்கு மாறாக குளிர்ந்திருந்தார். அவரோடு பழகியவர்களுக்குத்தான் அவரின் குணாதிசயங்கள் நன்கு புரியும். எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்தில் வலிந்து வந்த முறுவல் குந்திக் கொண்டது. எல்லோருக்கும் அதிசயம். நெருப்பாகக் கொதிக்கும் இவர் எப்படி இப்படியானார். அவர் சுழல்வதற்கேற்ப சுழல் கதிரையும் சுழன்றது. கண்களால் ஒவ்வொருவராக நோட்டம் விட்டார். நிமிர்ந்து இருந்து கொண்டார்.

"இந்தத் திணைக்களத்தில் தான் நிறைய 'அரியஸ்' வேலைகிடக்கு. நான் கொழும்பு போய்வாறதுக்கிடையில் முடித்திட வேணும்" தொடரும் போது தொலைபேசி அலறியது. றிசீவரை கையிலெடுத்தார்.

"ஹலோ... ஓம்... பதினொரு மணிக்கு.. போய் விடலாம்.... ஓம் ஓம்" றிசீவர் வைக்கப்பட்டது. நிர்வாக அலுவலர் மூர்த்திக்கு மட்டும் பெருவழுதியின் திட்டம் புரிந்திருந்தது.

"ஏ...ஓ...காடருக்கு யார் பொறுப்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மிஸ்ரர் நமசிவாயம்... சேர்"

"அவர்... எங்க வரல்லையோ"

"இல்லை சேர்.... லீவு"

"எத்தனை நாளாய் இந்தக் காடரை செய்யிறியள். நான் முதல் இருந்த திணைக்களத்தில் ஒரு நாளில் முடிச்சுப் போட்டன்" கூறிக்கொண்டு எல்லோர் முகத்தையும் பார்த்தார்.

அவர் முதல் இருந்த திணைக்களம் மிகச் சிறியது. ஆளணி பத்து பேர் மட்டும். பெயருக்கு திணைக்களமாக இருந்தது.

"சரி சரி... ஆளணித் தேவையை உடனே முடிக்க வேணாம். இந்த திணைக்களத்தில் தேவையில்லாமல் யுனிற்றுக்களை வைத்திருக்கிறியள்" இறுக்கிக் கொண்டு வந்தார்.

"அது.. முதல் இருந்தவர் செய்தது" என பதில் அளித்தார் மூர்த்தி.

"ஆர் இதுக்கு அனுமதி கொடுத்தது. இதெல்லாம் தேவையில்லாத வேலை... மிஸ்ரர் நவசிவாயம் வந்ததும் இந்த யுனிற் எல்லாம் மூடி இருக்கிற ஆட்களை இடமாற்றம் செய்ய லிஸ்ற் தயாரிக்கச் சொல்லுங்க" பெருவழுதி எழும்ப ஆயத்தமானார்.

"சேர்.... இங்க.... நாலு வருசத்துக்கு மேலிருக்கும் சிற்றூழியர்ளை இடமாற்றம் செய்யவேணும்."

இவங்களால பெரிய தொல்லையாச்சு..." சங்கரர் மெதுவாகச் சொன்னார்.

"அதுக்கென்ன... 'றெக்கமண்ட்' பண்ணுங்க மாற்றம் செய்வம்" பெருவழுதி கதைத்தவாறே தனக்கு முன்னாலிருந்த கோவைகளைப் பார்த்து "பிளீஸ்.... ஸ்பீக்" என எழுதியிருந்ததற்கு கீழ் கையெழுத்திட்டுக் கொண்டிருந்தார். இவர்களை எல்லாம் கடித்துக் குதறவேண்டும் போல் ஆத்திரம் சுந்தருக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘முதலைகள் மாதிரி ஆறேழு வருசமா இந்தத் திணைக்களத்தைத் தங்கள் தூங்கு மடமாக்கிக் கொண்டு சிற்றூழியர்களையும், சாரதிகளையும் இடமாற்றம் செய்யச் சிபாரிசு செய்கிறார்கள்.’’ உள்ளம் கொதித்தது. அவனுக்கு.

“வேறென்ன... எனக்கு நேரமாச்சு... எல்லா வேலைகளையும் முடிக்க வேணும்’’ எழுந்து படிகளில் இறங்கி நடந்தார். அவரின் பின்னால் கைகட்டி, வாய்புதைத்து, கோவைக்கட்டுகளோடு பயபக்தியாய் பரிவாரம் பின் தொடர்ந்து சென்றது. அவருக்குப் பெருமையாயிருந்தது. இம்மதிப்பை மனைவிக்கு காட்ட வேணும் என்றிருந்தார். கீழே சொகுசுக்கார் நின்றிருந்தது.

ஏ..ஓக்கு மட்டும்தான் பெருவழுதியின் திட்டம் தெரிந்தது. வெளிநாடு போக இருக்கும் மகனின் விசா, கடவுச்சீட்டு வெளிநாட்டிலிருந்து வந்த சம்பந்திகளின் சந்திப்பு என்று நிறையவே அப்பொய்ன்மென்ற்களை வைத்துக் கொண்டு ஒரு “டியூட்டியும்’ போட்டுக் கொண்டு, ஆடி வேல் திருவிழாவையும் ஒருக்கால் பார்த்துவர புறப்பட்டிருந்தார்.

பரமன் கார் கதவை திறந்து விட்டான். சரவணன் திணைக்களத்தின் வெளிக்கேற்றை திறந்து ‘சலூற்’ அடித்தபடி நின்றான். காருக்குள் மனைவி, பிள்ளைகள் சகிதம் காட்சியாகிக் கொண்டிருந்தார்.

ஏ.ஓ.வைத் தொடர்ந்து பதவி நிலை அலுவலர்கள், எழுதுனர், சிற்றூழியர் அனைவரும், திரண்டிருந்தனர். அவசர அவசரமாக வங்கியிலிருந்து ஓடி வந்த கணக்காளர் காசோலை மாற்றிய பணத்தையும் கொடுத்து வவுச்சர்களில் கையெழுத்தையும் பெற்றுக் கொண்டார்.

இராமனைக் காட்டுக்கு அனுப்பிய அயோத்தி மக்களின் முகங்களாய் அத்தனை அலுவலர்களது முகங்களும் ஒரு சோகத்தினை ஓடவிட்டு நடித்துக் கொண்டிருந்தன.

“பாவங்கள்... நீங்க போறது கவலைபோல கிடக்குது. முகத்தை தொங்கபோட்டுக் கிடக்குதுகள்’’ பெருவழுதியின் மனைவி கவலையோடு கூறினாள்.

பெருவழுதிக்கு தன் பெருமையை மனைவிக்குக் காட்ட வேண்டும் போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏ. ஓ..." பெருவழுதி கையைக் காட்டினார். பதறியடித்து ஏ.ஓ. மூர்த்தி முன்னே நின்றார்.

"ஆளணித் தேவையை முடித்த லிஸ்ற் தயாராயிருக்க வேணும் தெரியுமா...?"

"ஓம் சேர்... நாளைக்கு..." இழுத்தார் ஏ.ஓ.

"நாளைக்கு என்ன?"

"புதன் கிழமை பப்ளிக்டே."

பெருவழுதியின் முகம் இறுகியது. அவர் சுயரூபம் வெளிப்பட்டுவிட்டது. கண்கள் சிவந்து உதடுகள் துடித்தன. சொற்கள் தடுமாறின.

"எல்லாவற்றையும் கவனிக்கத்தான் நீங்க இருக்கிறீங்கள். அனுபவசாலியான உங்களை ஏன் வைத்திருக்கின்றன்" கடுகடுப்போடு பெருவழுதி படபடத்தார். கேட்டுக் கொண்டிருந்த குறிப்பிட்டவர்களுக்கு உச்சி குளிர்ந்தது. பலருக்கு வயிற்றில் புளி கரைத்தது போல இருந்தது.

"ஏ.... ஓ.... நியமனங்கள் எல்லாத்தையும் பொதுச்சேவை ஆணைக்குழுவிடம் தள்ளி விடுங்க. வாறவங்களுக்குப் பதில் சொல்லி அனுப்பி விடுங்க... சரி தானே?"

இப்போது சற்று கோபம் இறங்கியிருந்தது.

"சரி.. வேறென்ன? நேரமாகுது..."

றைவர் காரை இயக்கினார். கார் புறப்படத் தயாரானது. சரவணன் கார் போனதும் கேற்றை மூடினான். கார் வீதிக்குப் போனது.

"நல்ல அனுபவசாலிகள்.... அப்பாவிகள் போல் தெரியுது" மனைவி அனுதாபத்தோடு கூறினார்.

"இவர்கள் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. வெருட்டி வைக்காட்டி தலைக்குமேல் போய்விடுவாங்கள்" பெருவழுதி சொல்லிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்.

"கார் போயிற்றோ" எட்டிப் பார்த்து இளையதம்பி கிளாக்கர் வந்தார். கார் இடப்பக்கமாகத் திரும்பி சந்தியால் மறைந்தது. கேற்றையும் தாண்டிக் கூட்டம் வந்து பார்த்தது. கார் மறைந்ததை ஊர்ஜிதம் செய்தவர்களின் முகங்களின் அளவற்ற சந்தோஷம். நிம்மதிப் பெருமூச்சு....!

"அப்பாடா பெரிசு ஒரு படியாகப் போய்விட்டது. இன்னும் பத்து நாட்களுக்குக் கொண்டாட்டம் தான்" அவர்கள் சந்தோசித்தனர். சைக்கிள் வைக்கும் இடத்தில் சைக்கிள்களைக் காணவில்லை. கன்ரீன் களையிழந்து விட்டது. அனைவரும் சென்றுவிட்டனர்.

திணைக்களம் வெறிச்சோடிப் போய்க்கிடந்தது. ஈ, காக்காய்கூட திணைக்களத்தில் இல்லை பொதுசனம் தங்களது அவசர வேலைகளை முடிப்பதற்காகத் திணைக்களத்தில் கால் கடுக்க, மணிக்கணக்கில் நிற்க வேண்டியிருந்தது....!

வீரகேசரி - 29.10.2000

சாதாரண மனிதனின் பார்வைக்கும், ஒரு எழுத்தாளனின் பார்வைக்கும் இடையில் பெரும் வேறுபாடு உண்டு. ஒரு நிகழ்வு எவ்வாறு ஒரு மனிதனைப் பாதிக்கிறது? அந்நிகழ்வால் அவன் அடையும் நடத்தை மாற்றம் என்ன? என்பவற்றை எழுத்தாளன் தனது அனுபவமாக்கிக் கொள்கிறான். அந்த அனுபவத்துக்கு ஒரு வடிவம் அமைத்துப் பிறர் உள்ளத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவும், ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் எழுதிவிடுகிறான். அந்த வடிவம் வாசிப்பவர்களது உள்ளங்களில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தி விடுகிறது. அந்த வடிவங்களில் ஒன்றுதான் சிறுகதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பம்



சில்லென்று வீசியகாற்று உடலுக்கு இதமாகவிருந்தது. இந்த புழுக்கத்தை விரட்டும் சக்தி இந்தக் காற்றுக்கு எங்கிருந்து வந்தது. விரிந்து கிடந்த கடற்கரை மணலில் மோதி உடைந்த அலை நுரை தள்ளிப் பின்வாங்குகின்றது. மீண்டும் எழுந்து வந்து மோதுகிறது. காய்ந்து வரண்ட மணல் கடல்நீரை உறிஞ்சிக் கொள்ளும் ஒலி காற்றில் இசையாகிறது.

கடலைப் பார்த்தவாறு கைகளைப் பின்புறமாக ஊன்றி இருந்த முரளியின் கண்கள் யாரையோ தேடுகின்றன, இப்போது கடற்கரை கூட்டத்துள் மறைந்து விடுகிறது. எங்கும் சனக்கூட்டம் தொட்டந் தொட்டமாய் இருந்தும், நின்றும், சல்லாபம். இன்று காலைப் பூசையின்போது அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளாரது பிரசங்கம் முரளியின் உள்ளத்தில் ஊன்றியிருந்தது. மீண்டும் மீண்டும் அக்கருத்துக்கள் வந்து மனதுள் மோதிச் சென்றன.

"மற்றவருக்கு உதவுவது தான் மனிதரது மகத்தான சேவை. நம்மைச் சூழ ஆயிரமாயிரம் ஏழைகள் இருக்கிறார்கள். போர்க்காலச் சூழலில் அநாதை ஆக்கப்பட்ட இளம் சிறார்கள் தவிக்கிறார்கள். இளம் விதவைகள் வாடுகிறார்கள். நாம் இவற்றை பார்த்துக் கொண்டு இருப்பது முறையாகாது. ஏழைச்சிறார்களை ஆதரிக்க வேண்டும். அவர்களைத் தீயசக்திகளில் இருந்து காப்பாற்ற முன்வர வேண்டும். உண்டியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைவிடமும் கொடுத்து, தேடுகல்வியை ஊட்டவேண்டும் நாம் அனைவரும் திடசங்கற்பம் பூண்டு உழைக்கவேண்டும். நாம் ஒவ்வொருவரும் அவர்களுக்கு உதவுகரம் நீட்ட வேண்டும். ஏழைகளின் கண்ணீரில் இறைவன் காட்சியாகின்றான்.'' அடிகளாரது அறைகூவல் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

நம் கண்முன்னேயே எவ்வளவு கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. கண்மூடி மௌனியாய் வாழ்ந்து கொண்டிருக்கிறோமே. முரளியின் மனம் அலுத்துக் கொண்டது. இன்று காலை குழந்தை யேசு கோவிலுக்குப் போகும் வரை இவ்வாறான எண்ணங்கள் மனதைக் குழப்பவில்லை. ஞாயிறு அதிகாலைப் பூசைக்கு அரிதாகவே செல்வான். திருகோண மலையில் உவர்மலை உட்துறை முகம் நோக்கி வாழைப்பழ வடிவில் உயர்ந்து கிடக்கிறது. இதன்முனையை 'பிளான்டன் பொயின்ற்' என்றே அழைப்பார்கள். மலைநாட்டின் அமைப்புப்போல் காட்சிதரும் உவர்மலையில், மத்திய வீதியில் குழந்தை யேசுகோவில் பளிச்சிடுகிறது.

இரவு நேரத்தில் செவ்வொளி பரப்பும் அந்தச்சிலுவை ஒரு அர்த்தபுஷ்டியோடு, நம்பிக்கை ஊட்டிக்கொண்டிருக்கும். அந்த வெளிச்சத்தில் தன்னை மறந்து பல நாட்கள் முரளி நெக்குருகி இருக்கிறான்.. ஆனால் இன்றுதான் தன்னை உணரத் தலைப்பட்டுள்ளான்.

நாளாந்தம் காலையில் புறப்பட்டு திருகோணமலைக் கச்சேரியில் கடமை பார்ப்பது. மாலை வீடு திரும்பியதும் சைக்கிளில் நண்பர்களோடு லூட்டி அடிப்பது வழக்கமாகியிருந்தது. இன்று அவன் உள்ளத்தில் ஒரு சலனம். ஒரு துடிப்பான நோக்கம் முளைவிடத் தொடங்கியது.

முரளியின் கண்களில் பல சிறுவர்கள் தென்படுகின்றனர். ஒவ்வொருவரும் கச்சான், கடலை என விற்று வருபவர்கள். அவர்களது முகங்களைக் கவனியாது கச்சான் சுருளை வாங்கிக் கொறிக்கும் முரளி ஒரு சிறுவனை அழைத்தான். கச்சான் சுருளைப் பெற்றுக்கொண்டான். கொறித்துக்கொண்டே கதை கொடுத்தான்.

"தம்பி உங்கள் பெயரென்ன?"

"சுந்தரன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"படிக்கிறீங்களா, எந்தஸ்கூல்"

"நாலாம் வகுப்பு படிக்கிறன் ஆனந்தா வித்தியாலயம்"

"அம்மா அப்பா எங்கே இருக்கிறார்கள்"

கேள்வி முடியவில்லை. சுந்தரன் அங்கில்லை. விரைவாக எழுந்து விறுவிறு என்று சென்று மறைந்து விட்டான். முரளிக்கு ஒரே அதிர்ச்சி. சிறுவனைப் பற்றி அறிய ஆவல். மெதுவாக எழுந்து அவனைப் பின் தொடர்ந்தான். தூரத்தே அவன் கச்சான் சுருள்களை விற்றுக் கொண்டிருந்தான். தனக்கெதிரே வந்த குமரனைக்கூட அவன் கண்கள் காணவில்லை.

"என்ன முரளி காணாதவன் போல்" குமரன் அவன் தோளில் தட்டிக்கேட்டபோதுதான் சுயநினைவுக்கு வந்தான். தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்.

"மன்னிச்சுக்கோ மச்சான், நான் கவனிக்கல்ல இந்தா கச்சான்" இருவரும் அந்த கடற்கரை மணலில் அமர்ந்து கச்சானைக் கொறித்துக் கொண்டனர். கடலை விற்கும் சிறுவர்களைப் பற்றிய கதை தொடர்ந்தது.

"முரளி நமக்கு ஒரு தொழில் இருக்கிறது. மாதா மாதம் ஏதோ சம்பளம் என்று வருகிறது. அதை விட திருகோணமலை நகரில் வாழ்கின்றோம். சற்றுப் பாதுகாப்பும் கிடைக்கின்றது. இந்தப் பிள்ளைகளின் வாழ்க்கை சோகம் நிறைந்தது. அதிகமாக இந்தப் பிள்ளைகள் தந்தையை இழந்தவர்கள்தான். நமது மாவட்ட கிராமத்து பிள்ளைகள். அடக்கு முறையால் அனாதையாக்கப்பட்டவர்கள். ஏதோ வாழ்வதற்காக வாழுகிறார்கள். அதோ போகிறானே சிறுவன் அவனுக்குத் தாயுமில்லை தகப்பனுமில்லை. ஒரு நாள் அவனிடம் விசாரித்து அறிந்தேன்" குமரன் கூறி முடித்தான். முரளி அதிர்ந்து போனான். அங்கு போய்க் கொண்டிருந்தவன் சுந்தரன்தான். அவன் கண்கள் பனித்தன. அடிமனதிலிருந்து விசும்பல் ஒலி புறப்பட்டது. மௌனமாகப் புறப்பட்டனர். பெரியகடை மாதா கோவில் மணி ஒலித்தது. சைக்கிளை, கோவில் மதிலில் சாய்த்து விட்டு உள்ளே சென்றான்.

முழங்காலில் மண்டியிட்டான் அவன் மனத்திரையில் சுந்தரன் முகம் வந்து வந்து போனது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா அப்பாவைப் பற்றிக் கேட்கின்றாயே அவர்கள் என் கண் முன்னே கொல்லப்பட்டார்கள். நான் அனாதை. என்னைப் போல் ஈழமண்ணில் எத்தனையோ அனாதைகள் உள்ளார்கள். உன்னால் என்ன செய்ய முடியும் கேள்வி மட்டும் கேட்கிறீர்களே? ஏதாவது செய்ய மனம் இருக்கிறதா? முடியுமா உங்களால்" சுந்தரன் கேள்வியால் மனதில் வேள்வி நடத்திக் கொண்டிருந்தான். முரளியின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. கணப்பொழுதில் அவன் ஒடிந்து போனான். "இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும்" எங்கிருந்தோ ஒலி பிறந்து முரளியின் உள்ளத்தை ஆட்கொள்கிறது. உறுதியோடு முரளி எழுந்து செல்கிறான்.

இலங்கை வானொலி, தொண்டன்,
மித்திரன் - 2000

---

இலங்கைத் திருநாடு நீலக் கடலில் குளித்துக் கிடக்கிறது. மத்தியில் உயர்ந்த மலைமுடிகள். அதில் ஒன்று உலகம் புகழும் சிவனொளி பாதமலை. மலை உச்சியில் இரண்டு பெரிய பாதங்களின் அடையாளங்கள் காணப்படுகின்றன. அவை சிவனின் திருப்பாதங்கள் என்று இந்துக்களும், போதிமாதவன் புத்த பகவானின் திருப்பாதங்கள் என்று பௌத்தர்களும், அல்லாவின் திருப்பாதங்கள் என்று இஸ்லாமியரும், ஆதாமின் திருப்பாதங்கள் என்று கிறிஸ்த்தவர்களும் கூறுவர். அனைவராலும் போற்றப் படும் சமனலகந்த எனும் சிவனொளிபாத மலை சிறப்பு மிக்கது. இலங்கையின் எழிலை இரசித்துப் போற்ற வேண்டுமாயின் மலைநாடு சென்று பார்த்து இரசித்து அனுபவிக்க வேண்டும். மனம் சந்தோசத்தில் துள்ளும். மனதைக் குடையும் துயரங்களெல்லாம் எமைவிட்டு ஓடிவிடும். இந்த உன்னதமான நாட்டில் இருக்கும் நாம், நம்மிடையே ஒற்றுமையின்றி இருந்தோம். அந்நியர்களின் அடிமைகளாக ஆகினோம். நம் நாட்டின் சுதந்திரத்தை இழந்தோம். அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பின்னரும் பிரிவினை பேசி நம்மை நாம் விலங்கிட்டு அழிகிறோம். இதனை நம்நாட்டு மக்கள் புரிந்து கொள்ளாத வரை நாம் அடிமைப் பிடியிலிருந்தும் அழிவிலிருந்தும் விடுதலை அடையப் போவதில்லை. மனிதனை மனிதன் மதித்து நடக்கும் நாள் என்று வருமோ அன்றுதான் நமக்குப் பெருநாள். அன்றுதான் நமக்குச் சுதந்திர நாளாகும். அது என்று வரும்?

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதனை இதனால......

மத்திய மலைநாடு மதாளித்து, பருவ மங்கையென பச்சைத் தாவணியணிந்து மல்லாக்கப் படுத்துக் கிடக்கிறது. மார்பகங்களாய் உயர்ந்த மலைத் தொடர்களுக்கிடையில், சூல் கொண்ட மேகத்தைக் கலைத்து விளையாடிக் கொண்டிருக்கிறது காற்று. மலையிடுக்குகளில் ஒளிந்தும், குவிந்தும், கலைந்து மறைந்தும் கண்ணா மூச்சி காட்டுகிறது மேகக் கூட்டம்.

அழகிய கண்டி நகரிலிருந்து கலஹா நோக்கிப் பேருந்து புறப்படுகின்றது. அவசரமாகப் புகுந்து ஆனந்தர் ஏறிக்கொண்டார். ஒரு சீற் 'உனக்காக' எனக் காத்திருந்தது. அமர்ந்து கொண்டார். பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தினூடகச் செல்லும் பாதையால் பேருந்து போய்க்கொண்டிருந்தது. அந்த வளாகம் இளசுகளின் இந்திரலோகம். வண்ணப்பூக்களாய், வண்டுகளாய், சாலை இருமருங்கிலும் சாரிசாரியாய், கலகலப்பும், கும்மாளமுமாய் மாணவக் கும்பல். ஒரு காலத்தில் தானும் இந்த வளாகத்தில் அனுபவித்தவைகளை எண்ணிப் பார்த்துக் கொண்டார். 'இது ஒரு இன்ப உலகம்' உள்ளத்தில் வார்த்தைகள் உதிர்ந்தன.

வளாகத்தைத் தாண்டி வளைந்து நெளிந்து ஓடும் வீதியால் மலைத்தொடர்களில் சுற்றிச் சுற்றி இரைந்து பேருந்து விரைந்து கொண்டிருந்தது. மலையிடுக்குகளில் வகிடு எடுத்து வழிந்தோடும் சிற்றாறுகளின் துள்ளல், சாரதியின் சாமர்த்தியத்தால் விரைந்து ஏறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கும் பேருந்துகள், சாரதி சற்றுத் தடுமாறினால் அதலபாதாளத்தில் பச்சைக் கூட்டோடு கைலாயம். பேருந்தின் யன்னல் கண்ணாடி ஊடாக ஆனந்தரின் பார்வை செல்கிறது. குளிர்ந்த மேகக் கூட்டம் யன்னலால் புகுந்து முகத்தில் அறைகிறது. யன்னல் கண்ணாடியைச் சட்டென மூடிவிடுகின்றார்.

ஆனந்தர் அதிபராகக் கலஹா தமிழ் வித்தியாலயத்தில் கடமையேற்று வந்ததும், வரவேற்றது அச்சிறிய கட்டிடத்தில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களே. முத்துசாமிப்பிள்ளை அச்சிறு கட்டிடத்தையும் காணித்துண்டையும் அன்பளிப்பு செய்திருந்தார். பெற்றோரின் முயற்சியினால் இரு சிறிய தகரக் கொட்டில்கள். அரசு கொடுத்த அறுபதடி நீளமான கட்டிடம். இருநூறு மாணவர்களுக்குமட்டுமே போதுமான கட்டிடத்தில் ஐநூறு மாணவர்கள். காலையில் சிலவகுப்புக்களும், மாலையில் சில வகுப்புக்களுமாக இருநேரப் பாடசாலையாக இயங்கிக் கொண்டிருந்தது. பிள்ளைகள் காலையில் வந்து மாலையே வீடுகளுக்குத் திரும்புவதையும், மழை நேரத்தில் நனைந்தும், பாடசாலைத் தாழ்வாரத்தில், ஒதுங்கியும், வெயிலில் உலர்ந்தும் பசியால் மயங்கி வீழ்ந்தும், இப்படி அவலநிலையைக் கண்டு வெந்து வெதும்பினார்.

கலஹா இயற்கை அழகு கொஞ்சும் சிறியநகர். மலைத் தொடர்ச் சரிவில் குந்தியிருந்து குளிர்காய்ந்து கொண்டிருந்தது. நகரிலிருந்தும், தோட்ட லயங்களிலிருந்தும் பிள்ளைகள் பாடசாலைக்கு வந்து கொண்டிருந்தனர். உயர்கல்வி வசதியும் உரிய கல்வி வசதியும் இல்லாது குரோட்டன் செடிகளாக, கொழுந்து கிள்ளப்படும் தேயிலைச் செடிகளாக தவிக்கும் ஆற்றலுள்ள இளம் பிள்ளைகளின் நிலை ஆனந்தரின் உள்ளத்தை வாட்டியெடுத்தன. அவரின் ஆற்றலை பரீட்சிக்கும் களமாக, அவலம் நிறைந்ததாக இப்பாடசாலை சவால் விட்டுக்கொண்டிருந்தது. மாணவர்களையும் ஆசிரியர்களையும் மனதில் மாறிமாறி எண்ணிப்பார்த்துக் கொண்டார்.

ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்கவும், உயர் வகுப்புக்கள் வைப்பதற்கும் உதவ கல்விப்பணிமனை முன் வந்தது. ஆனால் பௌதிகவளம் அரசியல் தலைவர்களிடம் சிக்கிக்கொண்டது. இது ஆனந்தரின் பத்தாவது முயற்சி, தெரிந்த சிங்களத்தில் அத்தலைவரிடம் முறையிட்டுக் கெஞ்சுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேர்... அப்பே ஸ்கூலட்ட சுட்டக் உதவு கறண்ட"

மூக்குக் கண்ணாடியைப் பதித்து அந்த அரசியல் தலைவர் பார்த்த பார்வையும், சொன்ன பதிலும்

"மே ஸ்கூல் மாத்தயா...! அற ஸ்கூலட்ட கொடநகில்ல அத்தி... தென்ட சல்லி நஹ... ஒக்கொம கீவாநே... யன்ட... கறதறகறண்ட எப்பா..."

தலைவர் கூறியதும் ஆனந்தர் வெளியில் வந்து விட்டார். அவரது இரத்தம் கொதித்தது. மனம் கனத்தது; மாற்றான் தாய் மனப்போக்கை இட்டு வருந்தினார். அவரது உள்ளத்திற்கு உதவ அவர் கற்ற நூல்கள் ஒவ்வொன்றாக வந்து வந்து போயின, வள்ளுவர் குறள் ஒன்று வந்தது. மீண்டும் மீண்டும் அதனை அசை போட்டார். முகத்தில் சற்று மலர்ச்சி. பேருந்து குலுக்கியபடி நின்றபோது பேருந்தில் தான் அமர்ந்திருப்பதை உணர்ந்தார். மீண்டும் பயணத்தைத் தொடங்கியது. ஆனந்தரின் மனதில் திட்டம் விரியத் தொடங்கியது.

ஆசிரியர்கள் ஒவ்வொருவராக அதிபர் மனக்கண்முன் நின்றனர். அவர்களது ஆற்றலை, குண இயல்புகளை எடைபோட்டு-அவர்களுக்குரிய கடமைகளை தீர்மானித்துக் கொண்டார். தனராஜ் தோட்டலயனில் முளைத்து வந்த முழுநிலவு. வறுமைக்கோடு வர்க்கபேதத்தை ஒடித்துத், தலைநீட்டிய புத்திஜீவி. லயன்களில் பரிதவிக்கும் ஜீவன்களின் ஆத்மராகம். மாணவரைக் கவர்ந்திழுக்கும் நல்லாசிரியன். மௌலானா, லீலாரத்தினம், மனோகரி, ருக்கு, ராணி, பூமணி, றொட்றிக்கஸ், கபிரியேல், ஆசிரிய குழாத்தின் ஆற்றலையும், தியாக சிந்தனைகளையும், விலகி தூரத்தே ஒட்டாமல் நிற்கும் தயாளன், அன்வர் குழுவினரையும் எடைபோட்டுக் கொண்டார். ஆசிரியர் பலர் கண்டி நகரிலிருந்தே பாடசாலைக்குத் தினம் வருவதையும் சிந்தித்தார்.

உயர் அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் கண்டு அலுத்தாகிவிட்டது. ஆனந்தர் தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய இக்கெட்டான கட்டம். உள்ளகக் கட்டமைப்பை சீராக்கி விடவும், அதன் மூலம் அபிவிருத்தியையும் காண முடிவெடுத்து விட்டார். பேருந்து இரைந்து நெளிந்து விரைந்துகொண்டிருந்தது. யன்னலூடாக எட்டிப் பார்த்தார்.

மலைத் தொடரின் வீதி இருமருங்கிலும் தேயிலைத் தோட்டங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடிகளைத் தேயிலைச் செடிகளின்மேல் மட்டத்திற்கு வைத்து கொழுந்து பறிக்கும் தொழிலாளர் கூட்டம். தூரத்தே ஆங்காங்கே லயன்கள். உயரத் தனித்துத் தெரியும் தேயிலைத் தொழிற்சாலைகள். ஓங்கி உயர்ந்த இரு மலைத் தொடர்களைக் கிழித்து பள்ளத்தாக்குப் பாதையூடாக பாயும் சிற்றாறு சலசலத்து ஓடிக்கொண்டிருக்கிறது. வளைந்து வளைந்து சென்ற பேருந்து நில்லம்பேயைத் தாண்டி நிமிர்ந்தபோது சிற்றாறுக்கப்பால் கலஹநகர் பனித்தூறலில் சிலிர்த்துக் கொண்டிருந்தது.

பேருந்து முழங்கை முடக்காகத் திரும்பி சிற்றாறைப் பாலத்தால் கடந்து செல்லும் போது பக்கத்து தொழிற்சாலையில் இருந்து தேயிலையின் நறுமணம் காற்றில் பரவி புளகாங்கிதம் ஏற்படச் செய்தது. இன்னும் அரைக்கிலோ மீற்றர் தூரத்தில் பாடசாலை. பேருந்து நிலையத்தின் முன்னால் பாடசாலை. பேருந்தில் இருந்து இறங்கி காலடி எடுத்து வைத்தால் பாடசாலையின் இரும்புக்கேற். படலையின் முகப்பில் "நான்தான் தமிழ் வித்தியாலயம்" எனப் பறைசாற்றும் பெயர்ப் பலகை. பாடசாலைக்கு முகம் காட்டி நாலு பேருந்துகள் தரித்து நிற்கலாம். பேருந்து இரண்டடி பின்னோக்கி நகர்ந்தால் உருண்டு அதலபாதாளத்தில் சுக்குநூறாகும். பேருந்து நிலையத்தின் விளிம்பில் ஐந்து தேனீர்க் கடைகள். அதிபர் கேற்றில் காலடி வைக்க வசதியாகப் பேருந்தை நிறுத்தி அதிபர் இறங்கிக் கொண்டதும் திரும்பி வெட்டி எடுத்து, பின் நகர்த்தி சாரதி சண்முகம் பேருந்தை நிறுத்தினார். கேற்றைத் திறந்து ஆனந்தர் உள்ளே நுழைந்தார்.

ஆசிரியர்கள் அனைவரும் கூடியிருந்தனர். உள்ளகக் கட்டமைப்பினையும் நிர்வாகப் பன்முகப்படுத்தலின் அவசியத்தையும், மாணவர்களும், மக்களும் படும் துயரங்களுக்கு முடிவு காண வேண்டியதையும் உருக்கமாக, ஆனால் ஆணித்தரமாக ஆசிரியர்கள் உள்ளங்களில் வேரூன்றவைத்து - அதிகாரப் பரவலாக்கத்தை ஆசிரியர்களது விருப்பிற்கேற்றபடி ஒப்படைத்து விட்டது ஆனந்தருக்குக் கிடைத்த பெருவெற்றியாகும்.

பாடசாலை விழித்துக் கொண்டது. ஆசிரியர்களிடையே தத்தம் பிரிவுகள் மேலோங்கவேண்டுமென்ற ஆர்வம் துளிர்விடத் தொடங்கியது. ஆசிரியர்கள் பாடசாலையிலும், அண்மையிலும் தங்குமிடவசதி கிடைத்ததால் பாடசாலையில் முழுக்கவனமும் செலுத்தினர். பழைய மாணவரும், பாடசாலைப் பக்கம் வராத பெற்றோரும், மற்றோரும் மாலை நேரங்களில் வந்து போகலாயினர். பல சங்கங்களும் பாடசாலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடின. இந்து இளைஞர் சங்கம், பிள்ளைகளுக்குப் பாதணிகளையும், தளபாட வசதிகளையும் வழங்கியது. வெளியூர்களிலிருந்து கடமையின் நிமித்தம் வந்திருந்த ஊழியர்களும் கடை முதலாளிமார்களும் பாடசாலை வளர்ச்சியில் பங்கு கொண்டனர். மாலை நேரங்களில் அதிபர் தலைமையில் ஆசிரியர்களும் மாணவர்களும், தோட்ட நிர்வாகிகளையும் மக்களையும் கண்டு தங்கள் திட்டங்களையும் விளக்கி அவர்களது கவனங்களை ஈர்த்து விட்டிருந்தனர்.

பெற்றார் ஆசிரியர் சங்கத்தில் ஆர்வமுள்ள உறுப்பினர்கள் தாமாகவே செயற்பட முன்வந்தனர்.. எதை, எவ்வாறு, எப்போது செய்ய வேண்டும் என்று பல திட்டங்களை முன்கூட்டியே ஆசிரியர்களிடமும், பழைய மாணவர்களிடமும் விளக்கி முன்மொழியும் படி அதிபர் அறிவுறுத்தியிருந்தார். 'நமது பிள்ளைகளின் துயரை துடைக்க நாமே முயல்வோம். கட்டிடம் அமைக்கும் நடவடிக்கையை மேற்கொள்வோம்' என ஏகமனதாக பெற்றார் ஆசிரியர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியது. எல்லோரினது கவனமும் பாடசாலையை நோக்கியதாகவே அமைந்து விட்டது.

பாடசாலையின் எதிர்ப்புறமாக, பேருந்து நிலையத்துடன் பின்புறமாகவுள்ள சரிவில் சமநிலம் பேணி அந்த அறுபதடி அளவான கட்டிடத்தை அரசு அளித்திருந்தது. அதிபரின் அலுவலகத்திலிருந்து பேருந்து நிலையத்தைத் தாண்டி கொஞ்ச தூரம் நடந்து இடப்பக்கம் திரும்பி படிகளில் இறங்கி நாற்பது அடிப் பள்ளத்தில் உள்ள அக் கட்டிடத்தை அடைய வேண்டும்.

புதிய கட்டிடம் அமைப்பதற்குச் சமநிலம் இல்லை; சரிவு நிலம் இயந்திரம் போட்டு வெட்டிச் சமப்படுத்த நிதிப் பற்றாக்குறை. அதிபரின் உள்ளத்தில் சிரமதான திட்டம் உருவாயிற்று. செய்ய வேண்டியவற்றை ஆசிரியர்களிடம் கூறி அவர்களது விருப்பினைப் பெற்று விட்டார். தயாளன் எதற்கும் எதிர்ப்புத் தெரிவிப்பது வழக்கமாகி விட்டதால் அவர் பெரிது படுத்தவில்லை. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்.

மாலை நேரத்தின் மஞ்சள் வெயிலில் கலஹா தனிப் பொலிவு காட்டும். அதிபரைச் சூழ ஒரு கூட்டம் இருக்கும். பெற்றார் ஆசிரியர் சங்கச் செயலாளர் முருகேசு மெல்லப் பேச்சைத் தொடங்குகிறார். சுகாதாரப் பரிசோதகர் பத்மநாதன் கொடுப்புக்குள் சிரிக்கிறார். சோமு எல்லோருக்கும் பேருந்து நிலையத்தில் உள்ள 'ஆரி' கடையிலெடுத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனீரைப் பரிமாறுகிறார். தர்மலிங்கம், நுகுமான், நடராசா, கணேசன், சுந்தர்சிங் ஆசிரியர்கள் ஒன்று கூடியிருக்கின்றனர்.

"சேர் தோட்டத்துப் பிள்ளைகள் நிறையப்பேர் பாடசாலைக்கு வாராங்க. சோதனை எடுத்த பிள்ளைகள் பாஸ் பண்ணியிருக்காங்க. ஏ. எல் படிக்கிறாங்க.... எங்களுக்குச் சந்தோசமாயிருக்கு"

"இடமில்லாததால் சங்கடமாகவும் இருக்கு" பத்மநாதன் சொன்னார்.

"சேர் கலஹா ரவுன்ல எல்லாரிடமும் ஒரு தொகை கேப்போம் அப்புறம்... நம்ம பழையமாணவர் நிறையப்பேர் கொழும்பு, கண்டி, எங்கெல்லாமோ இருக்காங்க, போய் கேப்போம்" கணேசன் சங்கப் பொருளாளர் ஐடியாக் கூறினார்.

"சேர் நம்ம பெரிய முதலாளியிடம் ஒரு ஐயாயிரம் கறந்திங்கன்னா நாங்க... ஐந்து மடங்கு சேர்த்துத் தருவோம்" தர்மலிங்கம் சவால் விட்டார். பெரிய திட்டத்தைத் தன்முன் வைத்திருந்த அதிபர், தனராஜ் ஏலவே தயாரித்து வைத்திருந்த பட்டியலோடு வந்ததும் "எழும்புங்கள்... புறப்படலாம்" என எழுந்தார். என்ன நடக்கப்போகின்றது என்பது புரியாது கூட்டம் பின் தொடர்ந்தது.

பேருந்து நிலையத்திலிருந்து ஒரு பாம்பு நெளிவாக, வீதி கலஹா நகரூடாகச் செல்கிறது. இருமருங்கிலும் பல்விதமான கடைகள். அதிபர் குழுவை அதிசயத்தோடு அனைவரும் பார்த்தனர். முக்கிய பிரமுகர் எனக் கருதப்பட்டவர்களது கடைகளுக்கு மட்டும் குழு நுழைந்தது. வரவேற்று உபசரித்து அங்குசம்பட்ட யானைகளாக, மகுடிகண்ட நாகங்களாக, பட்டியலில் பெயரையெழுதி அதிபர் கையுள் பணத்தைத் திணித்தபோது, அவரையே நம்பமுடியாது ஒருமுறை தன்னையே கிள்ளிப் பார்த்துக்கொண்டார். அந்த இருமணி நேரத்துள் தர்மலிங்கம் சொன்னதைவிட ஏழுமடங்கு நிதி சேர்ந்து விட்டது.

ஆனந்தர் சுறுசுறுப்பாகி விட்டார். தனியாகவும் குழுவாகவும் பலரைப் பல இடங்களில் சந்தித்தார். தயாளன் குழுவினரைப் பயன்படுத்த வியூகம் அமைத்துவிட்டார்.

அந்த ஞாயிறு கலஹாநகர் மக்களால் நிறைந்து வழிந்தது. தோட்டத் தொழிலாளர்கள் பெற்றோர், நலன் விரும்பிகள், மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குழுமினர். பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மாணவர்களும் மக்களோடு சேர்ந்து கொண்டனர். ஆசிரியைகளும், மாணவியரும் உபசரிப்பில் ஈடுபட்டனர். உபசரிப்புக்கு வேண்டியவற்றை வர்த்தக சங்கங்கள் வழங்கின. காலை தொடங்கிய சிரமதானம் நண்பகலோடு, சரிவு நிலத்தில் சமநிலம் கண்டு விட்டிருந்தது. பயன் தராத வீண்வேலை என்று விலகி எதிர்ப்பிரசாரம் செய்த தயாளன் குழுவே தலைமையேற்று சிரமதானப்பணியைச் செய்துமுடித்தது அதிபருக்கு ஆனந்தத்தை ஊட்டியது, தயாளனைத் தட்டிக் கொடுத்து நன்றி கூறினார்.

அண்ணார்ந்து பார்க்கும் உயரத்தில் லொறி வந்து நின்றதும் ஒவ்வொரு படி தூரத்தில் வரிசையாக மாணவர்கள் நின்று செங்கற்களை இறக்கிக் கொண்டிருந்தனர். லீலாரத்தினமும், கபிரியேலும் பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டிருந்தனர். பத்ம நாதன் தலைமையில் கட்டிடப் பொருட்ககள் வந்து குவிந்தன, சமநிலம் செய்யும் போது எட்டிப்பார்த்த பாறைகள் உடைக்கப்பட்டு அத்திவாரக்கற்களாயின.

ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் அடிக்கல் நடுவதற்காகக் கூடியிருந்தனர். அதிபர் பெரிய முதலாளியை அன்போடு வரவேற்றார். மாணவர்கள் மாலையணிவித்தனர். பெரிய முதலாளி முதலாவது கல்லை வைத்து நிமிர்ந்தபோது, சேர்ந்த பணத்தினைப் பொருளாளரிடமிருந்து பெற்று பெரிய முதலாளியின் கையில் திணித்து "இந்தக் கல்விக் கூடம் கட்டி முடிப்பதை பெரிய முதலாளியின் கைகளில் ஒப்படைக்கின்றேன்." என முடித்தார். அதிபர் கண்கள் பனித்திருந்தன. பெரிய முதலாளி "இது எனது பணி" என, கண்ணீர் மல்க கூறினார் அது எல்லோர் உள்ளங்களையும் தொட்டது.

கலஹாநகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. மாவிலை தோரணம், மரகதக் கும்பங்கள். புதிய கட்டிடத்திறப்பு விழாவுக்காக அரசியல் தலைவர்கள், கல்விப் பணிப்பாளர்கள், பிரமுகர்கள் எனக் கூடியிருந்தனர்.

பாடசாலையின் வளர்ச்சிப் படிகளை ஆசிரியர் தன்ராஜ் விளக்கி "சாதாரண" பாடசாலையாக இருந்த கல்விக் கூடம் மனித வளத்தின் சங்கமத்தினால் உயர்தரப் பாடசாலையாக உயர்ந்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகள் பல்கலைக்கழகம் போகும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்" என உணர்ச்சியோடு கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலையில் வந்து இடமில்லாது வாடி வதங்கி கஸ்டப்பட்ட எங்கள் பிள்ளைகள் பிரபல கல்லூரி மாணவர்கள் போல், நல்ல கல்வி வசதி பெறுவதைக் காண பெருமிதமாகவுள்ளது" எனச் சங்க செயலாளர் முருகேசு முடித்தார்.

பெரிய முதலாளி மெல்ல எழுந்து "நான் படித்த இந்தப் பாடசாலைக்கு என்னாலான சின்ன உதவியை செய்தேன். செய்ய என்னைத் தூண்டியவர் இந்த அதிபர்தான்" எனக் கூறி இருந்தார்.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைப்பதுபோல் அதிபர் ஆனந்தர் "மாணவரது பரிதாபநிலை, பெற்றோர்களின் தவிப்பு அரசியல் தலைவர்களது அக்கறையின்மை கல்வி அலுவலர்களது கையாலாகாத நிலை ஆகியவை என்மனதை உறுத்தின. இதற்கு முடிவு காண வள்ளுவர் எனக்கு வழி சொன்னார். அவ்வழியைப் பரீட்சிக்க முனைந்தேன். எனது ஆசிரியர் குழாம், நலன் விரும்பிகள், பெற்றோர் பழைய மாணவர்கள். இந்து இளைஞர் மன்றத்தார் பக்கபலமாக இருந்தனர். என் செயலாவது ஒன்றுமில்லை. நன்றிக்குரியவர்கள், நீங்களே. இப் பாடசாலையை தந்தை தொடக்கி வைத்தார். அவர் மகன் இந்தப் பெரிய கட்டிடத்தை முடித்துத் தந்தார்." என பெரிய முதலாளியைப் பார்த்தும் கூறிக் கரங்கூப்பினார்.

விழா முடிவுற்றதும் மக்கள் அதிபரிடம் விடை பெற்றுப் போய்க் கொண்டிருந்தனர். அதிபர் பக்கம் முருகேசு வந்து "சேர் வள்ளுவர் வழி காட்டினார் என்கிறீர்களே எப்படி" என்று மெதுவாகக் கேட்டு "ஒன்றுக்கும் மசியாத தயாளன் ஆசிரியரை எப்படி சேர் வசியப்படுத்தினீர்கள்" என்றார்.

அதிபர் ஆனந்தர் உதடுகளில் ஒரு புன்னகை நெளிந்ததை, முருகேசு கவனித்தார். "முருகேசு 'இதனை இதனால் இவன் முடிப்பன் என ஆய்ந்து அதனை அவன் கண் விடல்' என்று வள்ளுவர் கூறிவைத்துள்ளார். அதனைச் செய்து பார்த்தேன் அவ்வளவுதான்" என்று கூறி நடந்தார், "ஒண்ணும் புரியலையே சேர்" என முருகேசு பின் தொடர்ந்து "சேர் நீங்கள்கூடக் கேள்விப்பட்டிருப்பீர்களே ஆடுற மாட்டை ஆடிக்கறக்கணும், பாடுற மாட்டைப் பாடிக்கறக்கணும் என்று... அதேமாதிரித்தானே..." ஆவலோடு சொன்னார். "ஆ... அதேதான்," என்று கூறி அதிபர் நடந்தார். அதிபர் போவதைப்பார்த்துக் கொண்டு முருகேசு சிலையாக நின்றார்.

- புது ஊற்று -2000 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விபுலானந்த அலை

**"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது."**

அந்தச் சமாதியில் படிந்த கவிதையைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்து, படித்து கண்களில் நீரமல்க சமாதியில் மலர் தூவிச் செல்கின்றனர். விரிந்து அலைமோதும் பெருங்கடலின் உப்புக்காற்று தாழை மடல் தழுவி, தென்னஞ் சோலைகளுட் புகுந்து, சமாதியைத் தரிசித்து, அலையலையாய்ச் செல்லும் மக்களைத் தழுவி அவர்களது மனத்துயரைச் சற்று ஆற்றுதற்காய் வீசிக்கொண்டிருக்கிறது.

மட்டக்களப்பு மானிலம் அழுது வடிந்து கொண்டிருக் கிறது. அந்த மண்ணில் காரைதீவில் பிறந்து, மண்ணளைந்து, காலடி பதித்து, நடந்து பயின்று, தன்னையுணர்ந்து, சமுதாய நலனைப்புரிந்து, தமிழுக்கும் சமயத்திற்கும் கல்விக்கும் பெரும் பணியாற்றிய மயில் வாகனப் பண்டிதன் - வித்தகத் துறவி விபுலானந்தன் சமாதியுள் தன்னை மறைத்துக் கொண்ட துயர், - வெள்ளமாக - பெரும் புயலாக வீசிக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு நகருக்கு அப்பால் வெண்மணற் பரப்பை நீவி வகிடு எடுத்து நீண்டு கிடக்கும் மட்டு- கல்முனை வீதி, மக்கட் பூக்களால் நிரம்பி வழிந்து கொண்டு கிடக்கிறது. கல்லடி உப்போடை இராமகிருஸ்ண சதுக்கம் சோகமே உருவெடுத்து அழுது கொண்டிருக்கிறது. ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒவ்வொரு நிலையில் வித்தகன் விபலானந்தன் செயல் வீறு கொண்டெழுகிறது.

தெளிந்த காற்று வீசிக் கொண்டிருக்கிறது. கண்ணம்மையார் பார்த்து மகிழ, சாமித்தம்பி தன் மகன் மயில்வாகனனை திரு. நல்லரெத்தினம் அவர்களிடம் வித்தியாரம்பம் செய்விக்கின்றார். காரைதீவினிலே குஞ்சுத்தம்பி ஆசிரியர், வசந்தராசபிள்ளை, வைத்திலிங்கத் தேசிகர், மயில்வாகனனின் அறிவுப்பசிக்கு விருந்தளிக்கின்றனர். கல்முனை மெதடிஸ்தமிஷன் பாடசாலை ஆங்கிலக் கல்விக்கு அடிகோலுகிறது. தொடர் கல்வியை அர்ச். மிக்கேல் கல்லூரி வழங்குகிறது. ஆசிரியர்களின் அன்பிற்கும் மதிப்புக்கும் உள்ளாகி 'கேம்பிரிட்ச்' தேர்வில் சிறப்பான சித்தியைத் தட்டிக்கொள்ள, அப்பாடசாலையிலேயே ஆசிரிய நியமனம் பெறுகிறான்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவந்து - சான்றோனாக்கிய தாயின் மறைவு மயில்வாகனனைப் பெரிதும் வாட்டுகிறது. தன் துயர் மறக்க கல்முனை கத்தோலிக்க மிசன் பாடசாலையில் ஆசிரியராகி, பின் மகரகம ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பயிற்சிக்காக நுழைந்து ஆங்கில ஆசிரிய பயிற்சியைத் தொடர்கிறான். கொழும்பில் தமிழறிஞர்களான பண்டிதர் தென்கோவை கந்தையாபிள்ளை, தாமோதரம்பிள்ளை போன்றோர் சங்க இலக்கியப் பயிற்சியையும் அளிக்கின்றனர்.

பயிற்சியின் பின் மூன்று ஆண்டுகள் அர்ச். மிக்கேல் கல்லூரியின் ஆசிரியராகி, பொறியியற் கல்லூரியில் சேர்ந்து 'டிப்ளோமா' பட்டம் பெற்று மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பண்டித பரீட்சைக்குத் தோற்றி பண்டிதர் ஆகிறான். பொறியியற் கல்லூரியின் ஆசிரியராகி பின் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியராகிறான்.

கற்றல் கற்பித்தலில் வழிகாட்டி, மாணவர்களைத் திறம்பட ஈர்த்த பண்டிதர் மயில்வாகனன். லண்டன் பல்கலைக் கழகம் நடத்தும் பீ. எஸ். சீ. தேர்வில் தேறி பட்டதாரியாகிறான்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி இருகரம் நீட்டி அழைக்க -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராகி - அளப்பரிய சேவைகள் செய்கின்றான். பல பண்டிதர்களை உருவாக்கி தமிழை அலங்கரிக்க யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் அவனது முயற்சியால் மலர்கிறது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்ற பண்டித, பட்டதாரி மயில்வாகனன் பல நூல்களை நன்கு கற்றுச்சுவைத்து, தான் சுவைத்தவற்றை தமிழினம் சுவைக்கவும், எழுதவும் செய்கிறான். உலகப் புகழ்பெற்ற ஆங்கிலக்கவிஞர்களின் பாடல்களை மொழிமாற்றம் செய்தலிலும் ஈடுபடுகின்றான். தெனிசனின் 'உலீசன்' எனும் செய்யுளில் வரும் "சாதல் எய்துமுன் மேதகவுடைய செயல் சில புரிகுவம்" என்ற அடியின் பொருளை தன் மனத்திருத்தி, தன்னை கல்விக்கும், மொழிக்கும், சமயத்துக்கும், நாட்டுமக்களினது நல்வாழ்விற்கும் அர்ப்பணிக்க துறவு பூண்டு தூய வாழ்க்கை வாழ்ந்து பணிசெய்யச் சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ண மடாலயத்தில் சேர்ந்து பிரபோத சைதன்யர் என்ற பிரம்மச்சரியப் பெயரைப் பெறுகின்றான்.

பிரபோத சைதன்யர் ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் திங்கள் தமிழ் இதழுக்கும், வேதாந்தகேசரி ஆங்கில இதழுக்கும் ஆசிரியராகி தலைசிறந்த கட்டுரைகளை எழுதுகின்றார். மக்களின் மனவிருளையகற்றும் ஞானநூல்களைக் கற்றும், மொழிபெயர்த்தும் அளப்பரிய சேவையில் தன்னை ஆழ்த்திக் கொள்கிறார். சித்திரை முழுமதி தண்ணொளி பரப்பிக் கொண்டிருக்கிறது. உலகம் உவப்ப, உணர்வுகள் பொங்க- பிரபோத சைதன்யர்-சுவாமி சிவானந்தாவின் ஞான உபதேசம் பெற்று சுவாமி விபுலானந்தா எனும் துறவுப்பெயரைப் பெறுகிறார்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் ஈடுபாடு கொண்டு, தனஞ்செயரின் தசரூபத்தை மூலக்கருவாகக் கொண்டு சிலப்பதிகாரத்தின் நாடக முடிவுகளை விளக்க மதங்க சூளாமணியை எழுதி முடிக்கிறார். பண்டிதர் மயில்வாகனனாகச் சென்னை சென்றவர் விபுலானந்தராக இலங்கை மீண்டு, ஸ்ரீ இராமகிருஷண மிசன் பாடசாலைகளின் முகாமைத்துவத்தை ஏற்று, பல பாடசாலைகளைத் திறந்து கல்விப்பணியில் தன்னை அர்ப்பணிக்கிறார். காரை தீவு சாரதா வித்தியாலயம், கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி போன்றவை விபுலானந்தரின் புகழ் பரப்பும் சான்றுகளாக விளங்குகின்றன.

சிதம்பரம் - அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்பேராசிரியராகி - பழந்தமிழரின் இசைக்கருவிகளையிட்டு ஆராய்வதற்குப் பதவி துறந்து இமயமலைச் சாரல் செல்கிறார். இலங்கைப் பல்கலைக்கழகம் தமிழ் பேராசிரியர் பதவி கொடுத்து அணைத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கிறது. இசையாராச்சி தொடர்கிறது. மறைந்தொழிந்த யாழ்க் கருவிகளை மீட்டெடுக்கும் முயற்சியில் தன்னை முழுமையாக ஆழ்த்துகிறார்.

வங்காள விரிகுடாக் கடல் மட்டக்களப்பு நிலத் திணிவுக்குள் தன் நீர் நாக்கை நீட்டிச் சுவைத்துக் கொண்டிருக்கிறது. நீர் நாக்கின் மேலாக நிலத்திணிவுகளை இணைத்து நிற்கும் பாலம் கம்பீரமாக எழுந்து நிற்கிறது. தெங்கும், இளநீரும், தேமதுர முந்திரியும், எங்கும் மணம் பரவ வீசும் இளம் காற்று இருளில் கலந்து வீசுகிறது. சித்திரை முழு நிலவு வானவீதியில் ஊர்ந்து செல்கிறது.

உலகத்துக் குதூகலங்கள் முடிவுற்று மக்கள் உறங்குகின்ற நேரம். நீர் நிலை மேல் படகு தவழ்ந்து வருகிறது. படகோட்டி மெதுவாகத் தன் துடுப்பை நீரின் ஓசை எழாது இயக்குகிறான். விண்மீன்கள் முழுமதியை வட்டமிட்டு கண்சிமிட்டுகின்றன. பனி கலந்த காற்று தென்னோலைகளை அசைக்க எழும் ஒலியலை எங்கும் பரவிப் பரவசப்படுத்துகின்றது. தங்க நிலவின் ஒளி நீரில் பட்டுத் தெறிக்கிறது. படகின் மறுமுனையில் விபுலானந்தர். அவரது செவிகளிலே தெய்வீக...... ராகம் வாவியின் நீரின் அடித்தளத்திலிருந்து....... மெலிதாய்..... சரிகமபதநி....... மிக மெலிதாய்... எழுந்து..... செவிகளில் மோதி, காற்றில் கரைந்து செல்கிறது. உற்றுக் கேட்கிறார். அவரது கண்கள் மலர்கின்றன. உள்ளம் உவகை கொள்கிறது. “ஐந்தாம் நரம்பின் அமைதியினை நானறிந்தேன்.” மகிழ்ச்சியில் வாய் முணுமுணுக்கிறது. யாழ்நூல் உருவாகிறது. தான் கண்டுணர்ந்த யாழ்க்கருவிகள் உருவாகின்றன.

அதோ திருக்கொள்ளம் புத்தூர் கோயில் கண்கொள்ளாக் காட்சியாகத் தன்னை அலங்கரித்து நிற்கிறது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் சுறுசுறுப்பாகின்றனர். யாழ்நூல், யாழ்க் கருவிகளைச் சுமந்து ஊர்வலம் வருகின்றது. அறிஞர்கள், பண்டிதர்கள் புடைசூழ நடுவில் விபுலானந்தர். கற்றோரும், மற்றோரும் ஊர்வலமாக...... மாவிலை, தோரணம், மரகதக் கும்பங்கள், வாழ்த்தொலிகள் விண்முட்டுகின்றன. ஊர்வலம் கோயிலை அடைகிறது.

மேடையில் தேவார இன்னிசை பண்கள் முழங்க.... யாழ்நூல் அரங்கேற்றம். யாழ்நூலை விளக்க விபுலானந்தர் எழுந்து நிற்கிறார். மக்கள் மகிழ்ந்து ஆரவாரம் செய்கின்றனர். மலர் மாலைகள் அவரது கழுத்தை அலங்கரிக்கின்றன. மனம் கசிந்து அன்பில் திளைத்து யாழ்நூலுக்கு விளக்கம் அளிக்கிறார். அவரது மனத்திரையில் மட்டுநகர்வாவியின் அந்த இசை ஆரவாரிக்கிறது. பலர் பாராட்டிச் சிறப்புரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குகின்றார்கள் மூன்று நாட்கள் விழா தொடர்ந்து நடைபெறுகிறது. வீணை வித்தகர் சிவானந்தம்பிள்ளை விபுலானந்தர் கண்டுணர்ந்த யாழ்களை மீட்டியும், யாழ்நூலில் கண்ட கணிப்பின்படி அமைந்த சுருதி வீணையில் ஏழ் பெரும் பாலைகளைக் கிரக சுவரம் மாற்றி இசைத்து, அவையினோரை ஆனந்தப் படுத்துகிறார். விழா முடிகிறது.

உடல் நலம் குன்றிய விபுலானந்தர் கொழும்பு மருத்துவ விடுதியில் ஓய்வெடுக்கிறார். அவரது உடல் களைப்புற்றுக் கிடக்கிறது. உள்ளம், உயிர் எங்கோ...... வெகு தூரத்தில் மட்டக்களப்பு வாவியினடியில் எழும் அந்த இசையை நாடிச் செல்கிறது. அவரது காதுகளில் ச.ரி.க.ம.ப.த.நி...அதோ இசை....... பரவுகிறது.

**நீல வானிலே நிலவு வீசவே**
**மாலை வேளையே மலைவு தீருவோம்**
**சால நாடியே சலதி நிருளே**
**பாலை பாடியே பலரொடாடுவோம்.....**

அந்த இசையோடு... இசையாகி உயிர் பிரிகிறது.

தமிழ்த்தாய் கண்ணீர் வடிக்கிறாள். தமிழ் பேசும் மக்கள் ஆறாத்துயரால் அலைமோதுகின்றனர். மட்டக்களப்புப் புகைவண்டி நிலையத்திலிருந்து புறப்பட்ட ஊனுடம்புப் பேழை ஊர்வலமாக வருகிறது. மெதுவாக, வெகு மெதுவாகக் கொண்டுவரப்பட்டு, ஸ்ரீ இராமகிருஷ்ண சதுக்கத்தை அடைந்து வெண் மணற்பரப்பில் கிளையோச்சியிருக்கும் ஆலை நிழலில் சமாதியடைகிறது. சாரி சாரியாக மக்கள் கூட்டம் அஞ்சலி செலுத்திய வண்ணம் சிலம்பு தந்த இளங்கோவன் போல் யாழ்நூல் தந்த விபுலன் எனப் போற்றியும்.... மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. அவர்களது உள்ளங்களில் 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற பாடல் நிறைந்து ஒரு உந்து சக்தியாக மாறுகிறது.

'உள்ளக்கமலம்'
வவுனியா விபுலானந்தர் நூற்றாண்டு விழா மலர்
1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணன் கண்ணீர்



மார்கழி மாதத்தின் பூமாரி போன்று, எங்கும் மழை பெய்துகொண்டிருக்கின்றது. வானம் கார்வண்ணனின் தோற்றத்தைக் காட்டிய வண்ணம் இருக்கின்றது. திருக்கோணமலை புதுப்பொலிவு பூண்டு காட்சி தருகின்றது. மழையினால் எங்கும் பசுமை. மரங்களிடையே வண்ண வண்ண மலர்கள். என் விழிகள் கடற்கரையை நோக்குகின்றன. வானும், கடலும் ஒன்றுடன் ஒன்று கலந்த வண்ணம், வேறுபடுத்த முடியாத காட்சி. என் கால்கள் நடக்கின்றன.

பெரிய முற்றவெளி பரந்து பசுமையேறிக் கிடக்கிறது. கரிய 'தார்' போட்ட சாலை. இருமருங்கும் பூவரசு மரங்கள் பூத்துக் குலுங்கி நிற்கின்றன. மழையினால் கரைந்த சிவந்த மண் நீருடன் கலந்து சிற்றாறாக கடலினுள் ஓடுகின்றது. என் கால்கள் கடற்கரையை அடுத்து கோணேஸ்வரம் செல்லும் பாதையில் நடக்கின்றன. முற்றவெளியின் பசுமை, அதிலே சில பசுக்கள் மேயும் காட்சி, அத்தனையும் என் உள்ளத்தில் உவகையூட்டுகின்றது. ஆனால் ஏதோ என் மனத்தினில் ஒரு இனம் தெரியாத துயரம். அன்று தமிழரின் நாடாக இருந்த திருகோணமலை, இன்று பறிபோகும் நிலை. தமிழும் சைவமும் வளர்ந்த மண்ணில், இன்று அதை அழிக்கக் கங்கணம் கட்டும் அறிவிலிகள். என் உள்ளம் உருகியது.

மழைத்துளிகள் குடையின்மேல் விழுவதால் ஒரு வகை இசை. கடல் இரைந்து கொண்டிருக்கின்றது. திருகோணமலை நகரின் தோற்றம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரிகிறது. பழம்பெரும் கோயிலை இடித்துக் கட்டிய கோட்டை அது. அக் கோட்டையின் முன் வாசலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டை மீன் இலச்சினைகள். கோட்டையின் ஒருபுறம் சுற்றிவரும் கடல். மறுபுறம் நிலப்பரப்பு. நிலப்பரப்பு சிறுபுதர்கள் கொண்டதாகக் காட்சி தருகின்றது. எங்கும் மான் கூட்டங்கள்.

கோட்டைச் சுவரில் 'இலந்தை' என்ற முட்செடி படர்ந்து கிடக்கிறது. அச் சுவரின் கற்களில் என் கண்கள் சற்றுத் தரிக்கின்றன. அழகான வேலைப்பாடுகள் அமைந்த பல கற்கள் இருப்பதை காண்கின்றன. தமிழரின் கை வண்ணங்கள் எப்படியெல்லாம் சீரழிந்து கிடக்கின்றன என்பதை உணர்கிறேன். எனது உள்ளத்தில் ஏக்கம்... பெருமூச்சு. திரும்புகிறேன். எதிரே ஒரு பனை மரம். நன்கு செழித்து வளர்ந்திருக்கிறது. அதன் அழகைப் பார்க்கின்றேன். அதனைச் சூழ வாகை மரங்களும், நொச்சிச் செடிகளும், ஒரு பிரமை.

அப்பனை மரத்தை அடியிலிருந்து ஏற இறங்கப் பார்க்கின்றேன். அப் பனை மரம் அழகிய அரசன் போன்று தென்படுகின்றது. அங்கு மழை இல்லை. ஆனால் அவன் கண்களிலே கண்ணீர் மழை பெருக்கெடுத்தோடுகிறது. என் தவிப்பை உணர்ந்த அவன் கண்ணீரோடு புன்முறுவல் செய்கிறான். தன் மனத்தில் உள்ள அத்தனை துன்பங்களையும் அந்தப் புன்னகையில் காட்டுகிறான்.

"நீங்கள்..." என்று என் வாய் பேசவில்லை. மனம் பேசியது. அவனின் தோற்றம் எனக்கு எதையோ நினைவூட்டுகிறது. என் குடையின்மேல் விழும் மழைத்துளிகளினால் ஏற்படும் சத்தம், என்னைக் கற்பனை உலகிற்கு இழுக்கின்றது.

அது வெறும் சத்தமா? இராவணேசனின் வீணையின் நாதம். 'சரிகமபதநி' இசையின் இசைக்கோலம். திரும்புகின்றேன்.

வாகை மரங்கள் அங்கு இல்லை. பணியாட்கள் புடைசூழ இராவணேஸ்வரன் நிற்கின்றான். என்னுடலின் மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்கின்றன.

காற்றில் அசையும் நொச்சிச் செடிகள் அங்கு இல்லை. களிநடம் புரியும் கன்னியர்கள் நிற்கின்றனர். புற்தரை பூந்தோட்டமாக மாறுகின்றது. என் உடலெல்லாம் புல்லரிக்கின்றது. என் தலை வணங்குகிறது.

அவன் என்னை நோக்குகிறான். என் கண்கள் அவனை ஆவலோடு பார்க்கின்றன. அவனின் முகம் கவலையினால் வாடிக் கிடக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்க முடியாத வேதனையை தன்னகத்தே வைத்து வேதனையடைகின்றான். "இந்த ஈழ மாதாவின் தலைவனா கலங்குவது?" என்றேன். பொருமுகிறான். இதயத்தை ஒரு கையினால் அழுத்திப் பிடித்துக் கொண்டு "இளைஞனே! என் வேதனையை, இக் கண்ணீருக்குரிய காரணத்தை உன்னிடம் சொல்லாமல் இருக்க முடியவில்லையே. ஒவ்வொரு தமிழனும் என் வேதனையை உணர வேண்டும். கூறுகின்றேன் கேள்... மடமங்கையின் திலகம் போன்ற இந்த இலங்கையை போற்றி, ஆண்டேன். அன்று நமது மொழி, இனம், சமயம், சிறப்புற்று விளங்கின. தமிழ் எனது உயிர். ஆனால் இன்றோ...? ஐயோ... நினைக்க நெஞ்சம் வெடிக்கும்போல் இருக்கின்றது. என் அன்னையின் செல்வம் இந்தப் பரந்த திருக்கோணமலைப் பகுதிதான். காலையில் அந்த மகாவலி கங்கையில் நீராடி, இந்தக் கோணேசப் பெருமானை என் தாய் வணங்கும் காட்சி... அப்பப்பா - விவரிக்க முடியாததொன்று." அவனது கண்கள் குளமாகின்றன.

"செல்வச் சிறப்போடு வாழந்த தமிழினம் இன்று அடிபணிகின்றது. இந்த இலங்கை மாதா.... என்னையும் துரத்தி... என் இனத்தையுமே துரத்துகிறாள். இவளுக்கு நானும்... என் இனமும், மொழியும் செய்த கொடுமைதான் என்ன? என் மகள் சீதையின் நல்வாழ்விற்குப் பாடுபட்டேன், சந்தேகக் கண்கொண்டு பார்த்த இராமனின் அம்புகளுக்குப் பலியானேன். அன்றிலிருந்து இன்றுவரை என் இனம், மொழி.... துன்புறுவதைப் பார்த்து நாளுக்கு நாளாய்... சித்திரவதைக் குள்ளாகித் தவிக்கின்றேன். இன்றோ... என்னால் இயலாத நிலை, உடலற்று ஆவியாகி விட்டேன் கண்ணீர் விட்டுக் கதற முடியுமே தவிர வேறென்ன செய்ய முடியும்?" இந்த நாட்டின் வரலாற்றையே மாற்றி எழுதி விட்டார்களே! இது கெட்ட ஆவிகளின் தீவாம். புத்தர் வந்து புனிதமாக்கினாராம். சிங்களத் தீவாம் சிங்களவர் நாடாம். இயக்கரும் நாகரும் வாழ்ந்த நாடு இது.

'தமிழன் தலைநிமிர்ந்து வாழவேண்டும்; தமிழ் மொழி, என் அன்னை மொழி அரியாசனத்தில் அமர்ந்து தெருவெங்கும் ஒலிக்க வேண்டும். அதை நான் கேட்டு, பார்த்து ஆனந்தக் கண்ணீர் விடும் நாளை எதிர்பார்த்து, ஏங்கிக் கொண்டு இப்படியே அசையாமல் நிற்பேன்' எனக் கதறுகிறான். என்ன அதிசயம்! இப்பொழுது அரசனாக இல்லை அவன். ஆண்டி போன்று நிற்கிறான்.

"தம்பி தமிழன் தன்னை, தன் பெருமையை மறந்து வாழ்கிறான். பொறாமை, சுயநலம், ஆணவம், இத்தனையும் இன்று தமிழர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகொண்டிருப்பதைப் பார்க்க என் மனம் படும்பாடு உனக்குத் தெரியாது. இன்று, இப்பொழுது என் நிலையைப்பார்... என் அன்னை வணங்கிய கோணேஸ்வரப் பெருமான் குடிகொண்டிருந்த இடத்தைப் பார்.... இதே நிலைதான். இன்று என் இனத்திற்கும் 'என் மொழிக்கும்'. உணர்ச்சி வசப்பட்டவன் 'ஏ... தமிழர்களே... நீங்கள் வாழ்ந்த நிலையை மறந்து விட்டீர்களா? உங்களுக்கு எப்படி இந்த அடிமை வாழ்வு உண்டாயிற்று? ஒற்றுமையின் இருப்பிடமே தமிழர்கள்தானே... இன்று உங்களை, உங்கள் உயிர் மொழியைக் காட்டிக்கொடுத்து அழிகின்றீர்களே. உயிர் மொழியை உதறித் தள்ளும் மனமும் வந்ததா? மறத் தமிழர்களே! அன்னை மொழியைக் காருங்கள். தமிழ்த் தாயை, தமிழ் மண்ணைக் காப்பாற்றி தமிழ் இனத்தை வாழவையுங்கள். என் கண்ணீரைத் துடையுங்கள். என் கண்ணீர் துடைப்பதென்றால் தமிழ் ஒலிக்க வேண்டும். தமிழன் தலை நிமிர்ந்து வாழவேண்டும்... அதுவரை இக்கண்ணீர் சிந்திக்கொண்டே இருக்கும்... சிந்திக்கொண்டே இருக்கும்'' பொருமுகிறான்.


என் கண்களில் கண்ணீர் அலையாயிற்று. உணர்ச்சியினால் "கண்ணீர் துடைக்கும் காலம் வந்துவிட்டது இளைஞர் படை புறப்பட்டு விட்டது.'' என்கின்றேன். கண்ணீர் என் கண்களை மறைக்கின்றது. என் கைகள் கண்ணீரை என் கண்களிலிருந்து துடைக்கின்றன. தெளிவாகத் தெரிகின்றது எல்லாம். பார்க்கின்றேன். ஒரே திகைப்பு. இராவணன் இல்லை. பனை மரம் நிற்கின்றது. அதனின்றும் கண்ணீர் துளிகள் பொழிவது போன்று மழைத்துளிகள் விழுகின்றன. களிநடம் புரியும் கன்னியர்கள் இல்லை; வெண் நொச்சிச் செடிகள் இளம் குளிர் காற்றில் அசைகின்றன. பூந்தோட்டம் பழையபடி புற்தரையாயிற்று. என் பக்கத்தே ஒரு பசு மட்டும்தான் நிற்கிறது. சுயநினைவு பெறுகிறேன். குடையினின்றும் மழை நீர் வழிந்து கொண்டே இருக்கின்றது. திரும்புகிறேன். 'கற்பனை உலகமா... இல்லை. இன்று தமிழினம் படும் அல்லலை, தமிழ் மண்ணாகிய இந்த திருக்கோணமலை பறிபோக இருக்கும் நிலையை, அப்படியே இந்த இராவணன் கூறினானோ? ஆம்... இளைஞர்கள்... அவன் கண்ணீரைத் துடைக்கத்தான் போகிறார்கள். துடைக்கப் பாடுபடுவோம்.' எண்ண அலைகள் மனதினிலே மோத, அவ்விடத்தினின்றும், கடற்கரை ஓரமாக நடக்கின்றேன். எனது பாதத்தின் அடிச்சுவடுகளை அலைகள் அழித்த வண்ணமே இருந்தன. காலச் சக்கரத்தின் விளையாட்டை நினைத்துக்கொண்டும் இராவணன் கண்ணீரை மனதினில் சுமந்துகொண்டும் நடக்கின்றேன் வீடு நோக்கி.

சுதந்திரன் 29.11.1964



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாங்குவோர்கள்



இரைச்சலோடு இருளைக் கிழித்துக் கொண்டு அந்தப் புகைவண்டி கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப் புறப்படுகிறது. முண்டியடித்து ஏறிக்கொண்ட ஆனந்தர் மூன்றாம் வகுப்பு உறங்கலிருக்கையில் இடம்பிடித்துக் கொண்டார். இருக்கையில் சாய்ந்து கண்களை மூடியபடி அமைதியில் மூழ்கிவிட்டார்.. புகைவண்டி ஒரு கூவலோடு இரைந்து ஓடுகிறது. அதன் ஆட்டத்திற்கேற்ப சனங்களும் ஊஞ்சலாடுகின்றனர். அந்த ஆட்டமும் புகைவண்டியின் இரைச்சலும் அவர்களைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவது போல் அமைந்தது போலும்.. அவர்கள் கண்களை மூடிச் சாய்ந்து உறங்குவது போல் தெரிகிறது.

ஆனந்தர் கண்களை மூடியிருந்தாலும் அவரது மனம் இதயக் கதவைத் திறந்து உள்ளே விளையாடிக் கொண்டிருக்கிறது.

'உறங்கலிருக்கை' நல்ல கலைச்சொல். இச் சொல்லைக் கண்டு பிடித்தவர்களைப் பாராட்டியே ஆக வேண்டும். ஆனால் இன்னுமேன் புகைவண்டி என்று சொல்ல வேண்டும். கரியும் நீரும் நீராவியை உருவாக்க, நீராவியின் உந்துசக்தியால் இயந்திரம் இயங்கி சில்லுகள் உருள, இரண்டு நேர்க்கோட்டுத் தண்டவாளங்களில் புகையைக் கக்கிக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் ஓடியது. இப்போது டீசலில் ஓடுகிறது. புகை இல்லை. அப்படியானால் இந்த புகை வண்டியை எப்படி அழைக்கலாம்.?

நீராவியால் நமது கிராமத்து மக்கள் பிட்டு அவிக்கவும் வெள்ளாவி வைத்து உடைகளைச் சுத்தம் செய்யவும் பழகியிருந்தனர். அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய எப்படி நமது மக்கள் அறிந்திருந்தனர்.? இப்போது இவையும் மறைந்து கொண்டு போகின்றன. அவர் மனம் புதுமைச் சிந்தனைகளில் சிக்கிக் கொள்கிறது. புகைவண்டி தரிக்கும் நிலையங்களை நெருங்கும் போது பெருங்கூவலோடு செல்லும். தரித்துப் புறப்படும் போதும் அதே கூவலோடு புறப்படும்... அந்நேரங்களில் ஆனந்தரின் சிந்தனை கலையும். விழிகள் இமைகளை விலக்கி மெலிதான பார்வையை எறியும்.. பின் மூடிக்கொள்ளும். மனம் பழயபடி சித்து விளையாட்டில் இறங்கி வித்தை காட்டும்.

இந்த மனம் இருக்கிறதே அது விசித்திரமானது. கடவுள் எங்கே இருக்கிறார்? என்ற கேள்விக்கு விடைகாணும் முயற்சியாக அது உள்ளது. கடவுள் தூணிலும் இருப்பார். துரும்பிலும் இருப்பார். எங்கும் நீக்கமற நிறைந்து மறைபொருளாய் இருப்பது போல் இந்த மனமும் உள்ளது. இந்த மனம் உடலில் எங்குள்ளது.? எண்ணங்கள் உணர்வுகள் எங்கே துளிர்விடுகின்றன? நெஞ்சிலா.. இதயப் பையிலா... நெற்றிப் பொட்டிலா... அல்லது மூளையிலா...? இந்த ஐம்புலன்களை ஒன்று சேர்த்து உள்வாங்கி உலக வாழ்க்கையின் சுகதுக்கங்களை, நினைவுகளை எப்படி இந்த மனம் நிகழ்த்துகிறது? துயர் வந்தால் துவண்டு போகிறது. இந்தத் தொட்டாற் சிணுங்கியைப் போல. மகிழ்ச்சி என்றால் வானில் சிறகடித்துப் பறக்கும். அந்த வானம்பாடியைப் போல. துக்கத்தில் வாடுவதும் சந்தோசத்தின் போது மலர்வதும் அகத்தின் அழகு முகத்தில் தெரியவைப்பதும் இந்த மனத்தின் சித்து விளையாட்டு. கண்களை மூடியபடி தத்துவார்த்த சிந்தனையில் மூழ்கி.. நினைவுகளின் மீட்டலில் சிக்கிக் கொள்கிறார். புகைவண்டி கடகடத்து ஓடுகிறது.

அவரது பக்கத்து இருக்கையில் ஒரு இளைஞன். அவனது மனமும் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. அவன் உறங்கவில்லை. அவனது விழிகளின் பார்வை யன்னலூடாகப் பாய்ந்து செல்கிறது. அவ்வப்போது ஆனந்தரின் நடவடிக்கைகளை அவதானிக்கின்றன. அவர் விழி திறந்து பார்ப்பதும் பின் இமைமூடிக் கொள்வதும் அவனுக்குப் புதிய அனுபவமாக இருந்தது. அவரோடு உரையாட விரும்பினான். சந்தர்ப்பத்தைப் பார்த்துக் காத்திருந்தான். ஆனந்தரின் உடல் அசைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. மனம் படம் காட்டிக் கொண்டிருந்தது. அந்தப் படத்தில் இந்திய அமைதிப் படையின் வருகை ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்திய அமைதிப் படை வவுனியா நகரின் காமினி மகா வித்தியாலய விளையாட்டரங்கில் வந்து குவிகிறது. தமிழினத்துக்கு விடிவுகாலம் வந்ததாய் சனங்கள் முண்டியடித்து 'நான்முந்தி, நீமுந்தி' என விரைகிறார்கள். கைகளை அசைத்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் அவர்களது எதிர்பார்ப்புகள் சில மாதங்களிலேயே தவிடுபொடியாகின்றன. இந்திய அமைதிப்படையின் கெடுபிடி அதிகரிக்கிறது. அவர்கள் மேல் வெறுப்பையும் மாற்றத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. ஆனந்தர் பல காலம் வவுனியாவில் சேவை செய்தவர். தனது சொந்த ஊராகவே நினைத்து வாழ்பவர். வவுனியா என்ற சொல் அவரது செவிப்பறைகளில் ஒலித்தாலே தேன் வந்து பாய்ந்த உணர்வில் திளைப்பவர்.

வவுனியா மூலிகைக் காட்டைக் கொண்ட பிரதேசம். அந்த மூலிகைக் காட்டை தழுவி வரும் காற்றுப் பட்டாலே நோய் விட்டுப் போகும்.. ஓடும் வீதிகளின் இருபக்கமும் காவல் வீரர்களாக வீரைமரங்கள். பருவ காலங்களில் சிவந்து கனிந்த பழங்களைத்தாங்கி குதூகலிக்கும் அடுத்து அணிவகுத்துப் பாலைமரங்கள். மஞ்சளில் தோய்ந்து பழங்களைத் தூக்கிக் காட்டும். இருவாட்டியும் செம்மண்ணும் கலந்த விளைநிலங்கள். தோட்டங்கள். தேனும் பாலும் கலந்த மொழியும் விருந்தோம்பும் பண்பும், உழைப்பும் வீரமும் செறிந்த மக்களும் அவரின் உள்ளம் நிறைந்து உலா வந்தனர். பண்டார வன்னியனின் வீரதீரச் செயல்களை வியந்து போற்றி வவுனியா கச்சேரி வளாகத்தில் அவனது வீரத்தோற்றத்தோடு சிலையை வைத்து நன்றி செலுத்தும் உன்னத உள்ளங்கள். எந்தக் காகமும் அந்தச் சிலைமீது இதுவரை வந்திருக்கப் பயப்படுவது அவனது வீரத்தைப் பறைசாற்றும் சான்றாகும். அந்நியரால் கைப்பற்றப்படாத வன்னிபெருநிலப்பரப்பை எண்ணி அவரின் எண்ண அலைகள் மெல்ல மெல்ல மோதி உடைகின்றன.

அந்த நிகழ்வு துல்லியமாக நிழலாடுகிறது. அவரது உள்ளத்தில் அது பசுமரத்தாணியாகப் பதிந்து விட்டது. வவுனியா புகையிரத வீதியில் வாடி வீட்டுக்கு எதிராக சுந்தானந்த இந்து இளைஞர் சங்கக் கட்டிடம். அதனை அடுத்து மலர்ந்தும் மலராத நிலையில் பல மொட்டை மாடிக் கட்டிடங்கள், அக்கட்டிடங்களில் கடைகள், வங்கிகள், சுத்தானந்தாக் கட்டிடம் பல அரிய உள்ளங்களின் உழைப்பின் அறுவடையின் சின்னம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குதான் சமய பண்பாட்டு நிகழ்வுகள் தொடரும். சமய குரவர்களது குரு பூசைகள் நடக்கும் பெயரளவில் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கம் தான். ஆனால் அதனைக் கொண்டு நடத்துபவர்கள் இளைஞர்களாக அந்தப் பருவத்தைக் கடந்து சுறுசுறுப்பாக இயங்கி, சங்கத்துக்காக வாழும் பெரியவர்கள்.

வன்னிப்பெரு நிலப்பரப்புக்கு வவுனியா தலைநகர். கிராமங்களின் தேவைகள் நிறைவு செய்யும் சேவைகளை வழங்குகிறது. இந்திய அமைதிப்படையின் கெடுபிடிகளால் மக்கள் பாதிப்படைகின்றனர். நகருக்குள் வருபவர்கள் உடன் வெளியேற முடியாது. ஓரிரு தினங்கள் தங்கியே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். அவர்களுக்குத் தஞ்சம் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கட்டிடம்தான். மாலையானதும் கட்டிடம் சனங்களால் நிரம்பி வழியும்.. அன்றும் அப்படித்தான். இரவு மெதுவாகவே நகர்ந்தது. தூரத்தே கண்ணி வெடியின் அதிர்வு. காற்றலை கட்டிடங்களை அறைந்து செல்கிறது. தொடர்ந்து நகரெங்கும் வேட்டுக்களின் இரைச்சல். குண்டுகளின் பாய்ச்சல். சனங்களில் அலறல். அபயக் குரல்கள் காற்றில் கலந்து பரவி உள்ளங்களை உறைய வைக்கின்றன. இந்தியப் படையினர் மொட்டைமாடிக் கட்டிடத்தில் இருந்து தீர்த்த வேட்டுக்கள் அருகிருந்த சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் உறக்கத்தில் இருந்த இரு உயிர்களைப் பறித்து விட்டன.

காலைப்பொழுது கவலையோடு விடிகிறது. சுத்தானந்த இந்து இளைஞர் சங்க உறுப்பினர்கள் ஓடி வருகிறார்கள். சங்க மண்டபத்தில் உறங்கிக் கொண்டிருந்த இருவரின் மண்டை ஓடுகள் பிளந்து பிணமாகக் கிடக்கின்றனர். இரத்த வெள்ளம் பரவி இறுகிக் காய்ந்து உறைந்து கிடக்கிறது. சங்க உறுப்பினர்கள் கண்கள் சிவந்து விம்மி விம்மி அழுத காட்சி இப்போதும் நிழலாடுகிறது. இந்த அப்பாவிகள் என்ன செய்தார்கள்? ஏன் இப்படிக் கொன்றார்கள்? இந்திய அமைதிப்படை ஏன் இங்கு வந்தது? தமிழ் மக்களைச்சுட்டுப் பொசுக்கவா? அந்நிய நாட்டுப் படை நமது மண்ணில் அதிகாரம் செலுத்த என்ன ஞாயம்? இந்த மண்ணில் இனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தாது அந்நியரிடம் அதிகாரத்தைக் கொடுத்துத் தமிழினத்தை அடக்கி ஒழிக்கப் பேரினவாத அரசு தீட்டிய திட்டம். இந்தியாவின் அமைதிக்காக நமது நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இந்தியப்படைக் குவிப்பு என்ற அரசியல் சாணக்கியத்தை ஆனந்தர் அறிந்திருந்தார். அந்த நிகழ்வை அவரால் இலகுவில் மறக்க முடியவில்லை. அதிலிருந்து விடுபட அவரால் முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி சேனாதியால்.... திருமேனியால்.... தேவாவால்... தருமரால்.... வாசகத்தால்... மற்றவர்களால் மறந்து தொடர்ந்து செயற்பட முடிகிறது? சுத்தானந்த இந்து இளைஞர் சங்க உறுப்பினர்களது முகங்கள் அவரது மனக்கண்முன் ஒவ்வொன்றாக வந்து போகின்றன. அவர்களது இலட்சிய வேட்கை கொண்ட பணி ஆனந்தரின் மனதில் ஒரு நிறைவை ஏற்படுத்துகிறது. புகைவண்டியின் கூவல்.. தொடர்ந்து தரிக்கும் சத்தம்... மெல்ல விழிகள் இமைகளை விலக்கிப் பார்வையைச் செலுத்துகின்றன. இளைஞனின் பக்கம் திரும்பினார்.

"தம்பி.. இது.. எந்த... ஸ்ரேசன்"...?

"அனுராதபுரம்"

பதில் கூறிவிட்டு அவனே தொடர்ந்தான்

"ஐயா... நீங்க... வவுனியாவுக்கா"?

"ஓம் தம்பி... நீங்களும் வவுனியாவுக்குத்தானே"...?

"ஓமோம்..."

"சொந்த ஊர் எங்க தம்பி"

"வவுனியா விளக்கு வைத்த குளம்"

ஆனந்தருக்குச் சற்று உற்சாகமாக இருந்தது.

"தம்பி.. விளக்குவைத்தகுளம் சந்தியில் அந்த நூல் நிலையம் 'அறிவகம்' இருந்ததே.. அது இயங்குதா"? ஆவலோடு ஆனந்தர் கேட்டார்.

"அங்க என்ன இருக்கு..? இந்தியப் படை வந்து அமைதிகாக்கும் எண்டு இருந்தம். இவங்கள் போன பிறகு ஸ்ரீலங்காப் படை வந்து சுடுகாடாக்கிப் போட்டுது..."

கவலை தோய்ந்த முகத்தோடு கூறி முடிக்குமுன் ஆனந்தர் தொடர்ந்தார்.

"அப்ப தம்பி ஊர்ச சனங்கள் எங்க...."

விழி உயர்த்திக் கேட்டார். ஆனந்தரின் முகத்தை அவனால் நன்றாக அவதானிக்க முடிந்தது. 'இது தெரிந்த முகம் போல் இருக்கு எங்கே பார்த்தேன்...'? அவனது உள்மனதில் பெரியதொரு தேடல் நடந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்துக் கொண்டே பதில் கூறினான்.

"கல்லெறி பட்ட தேன் பூச்சிக்களாக அழிந்தும், எங்கோ ஒழிந்தும் போயிற்றுதுகள். எங்கே இருக்குதுகள் என்றே தெரியாது." கவலையோடு கூறியவனைப் பார்த்தார்.

"சரி தம்பி பேரென்ன... சொன்னீங்கள்."

"குமாரதேவன்....."

சற்று அமைதி நிலவியது. கடகடத்து ஓடிய புகைவண்டி மெதுவாக நகர்கிறது. ஆனந்தரின் மனமென்னும் வண்டியும் நகரத் தொடங்கியது. புகைவண்டியைப் பார்த்தது. உயிரற்ற இந்த இயந்திரம் உயிருள்ள மனித இயந்திரங்களைச் சுமந்து செல்கிறது. எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாது டீசலைக் குடித்துச் சடமாக, மனித இயந்திரத்தின் கட்டுப் பாட்டுக்குள் அடங்கிச் செயற்படுகிறது. இந்த மனித இயந்திரங்கள் எத்தனை எதிர்பார்ப்புக்கள், இழப்புக்கள், ஏக்கங்கள், சுகதுக்கங்களைச் சுமந்து கொண்டு பயணிக்கின்றன. ஆனந்தரின் கடைவாயிலில் ஒரு முறுவல் குந்திப் பார்க்க ஓடிவந்து நெளிகிறது. அவரே தொடர்ந்தார்.

"தம்பி.... அம்மா... அப்பா..... சகோதரங்கள்...."

ஆனந்தர் முடிக்குமுன் குமாரதேவனே சட்டென்று கூறினான்.

"அப்பாவை இந்தியப் படை சுட்டுப் போட்டுது."

ஆனந்தர் அந்தப் பதிலால் ஆடிப்போனார். அவனது வேதனையைப் புரிந்து கொண்டார்.

"தம்பி உங்கட மனதை நோகச் செய்திட்டன். குறை எண்ண வேண்டாம்..." மெதுவாகச் சொன்னார்.

"இதில என்னையா கோபமும் குறையும்... இந்த நாட்டில வாழும் ஒவ்வொரு தமிழனும் ஏதோ ஒரு வகையில் பாதிப்பு அடைந்துதான் இருப்பான். தமிழரின் உள்ளமும் மரத்துத்தான் இருக்க வேண்டும். அப்பா போனபிறகு.... குடும்பப்பொறுப்பு என்ர தலயில... விட்டாங்களா..? ஸ்ரீலங்காப் படை எங்கட ஊரைச் சுற்றி வளைத்து இளைஞர்களைப் பிடித்து சித்திரவதை செய்து பூசா முகாமில் சிறை வைத்தது. நானும் ஐந்து வருசம்.... பூசாவில் இருந்தனான்". அவனது கண்கள் குளமாகி இருந்தன. குரல் கரகரத்தது. பெரியதொரு வேதனையைக் கொட்டிவிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வேதனையுள் அலைமோதினார். இப்போது திசைமாற்ற எண்ணித் தொடர்ந்தார்.

"தம்பி.... விளக்கு வைத்த குளத்தில் ஆறுமுகத்தாரைத் தெரியுமா...."?

"ஓம்....அவர்தான்....என்ர அப்பா...."

ஆனந்தருக்கு அதிர்ச்சிமேல் அதிர்ச்சி. எரிமலை வெடித்துச் சிதறிய உணர்வு. எண்ணக் குமுறல்களின் வெளிப்பாடு.

"அவர.... உங்களுக்குத் தெரியுமா....."

"ஓம்......"

கூறிவிட்டு ஆனந்தர் வாய்மூடி மௌனியானார். அவர் தொடர்ந்து பேசத் தயாரில்லை. அவரது மனதில் பெரும் போராட்டம்... அன்று சுத்தானந்த இந்து இளைஞர் மன்றக் கட்டிடத்தில் இந்தியப் படையால் சுடப்பட்டு இறந்தவர்களில் ஆறுமுகமும் ஒருவர். அவரது உள்ளத்தில் இந்தியப் படைமீது வெறுப்புத் தோன்றியது. அவர்கள் இருந்த காலத்தில் செய்த அனர்த்தங்கள் விரிந்தன. இயக்கங்களைப் பிரித்துப் பாடசாலைகளுக்குச் செல்லும் பிள்ளைகளையும் இளைஞர்களையும் பலவந்தமாகப் பிடித்து இயக்கங்கள் பலவற்றை வளர்க்கத் தூண்டினர். எத்தனை இளைஞர்கள் தமக்குத் தாமே எதிரியாகி அழிந்தனர். அடாவடித்தனம் வளரவழிகாட்டினர். அந்தச் சுத்தானந்த சங்கக் கட்டிடத்தினுள் எத்தனை இளைஞர்கள் சித்திரவதைப் பட்டிருக்கிறார்கள். சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் இயங்கத் தடையாக இருந்தனர். சங்கம் இனிஇல்லை என்றே எண்ணியிருந்தார்.

சனங்கள் மூட்டை முடிச்சுக்களைத் தூக்கிக் கொண்டு முண்டி அடித்துக் கொண்டு எழும்பியதை அவதானித்தார். அப்போது தான் வண்டி வவுனியா வந்துவிட்டதை உணர்ந்தார். சனங்களைப்பார்த்தார். இவர்களுக்கு எவ்வளவு அவசரம்..? கிறீச் சத்தத்தோடு வண்டி நின்றது. சனங்கள் அவசர அவசரமாக இறங்கி விரைந்தனர். மெதுவாக எழுந்தார். குமாரதேவன் அங்கு இல்லை. அவன் இறங்கிப் போய்விட்டான். தனது பொதியை எடுத்துக்கொண்டு இறங்கி வெளியில் வந்தார். சுமார் பன்னிரெண்டு வருடங்களின் பின் வவுனியா மண்ணில் காலடி எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கிறார். அவர் எதிர்பார்த்த வவுனியாவா இது? அவரால் நம்ப முடியவில்லை. எங்கும் மாற்றம். எல்லாம் மாற்றம்... இயந்திர வாழ்க்கையில் வவுனியாவும் சிக்கிக் கொண்டது. மாற்றம் ஒரு நியதிபோலும்.

அவரது பார்வை அந்த முதிரை மரங்களில் விழுந்தது. அதனூடாகத் தெரிவதென்ன? வவுனியா பல்கலைக்கழக வளாகம். அந்தப் பெயர்ப் பலகையைக் கண்டதும் ஆனந்தம் பொங்குகிறது. பரவசம் பரவுகிறது. மெல்ல நகர்நோக்கி நடக்கிறார். இலங்கை வங்கிக் கட்டிடம் - அடுத்தடுத்துப் பல கட்டிடங்கள். கொம்பியூட்டர் நிலையங்கள் தமிழ்மணி அகளங்கன் கூறிய 'செடக்' உயர்கல்வி நிலையம் - அதற்கு நேரெதிரே தெரியும் பகவான் சத்யசாய்பாபாவின் அருள்பாலிக்கும் கட்டிடம் எனப் பார்த்தவாறே நடக்கிறார். அவருக்குப் புதுத்தென்பு பிறக்கிறது. இப்போது சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கட்டிடத்துக்கு வந்துவிட்டார். அவர் எதிர்பார்த்து வந்த அந்தப் பழய கட்டிடம் எங்கே? சற்று மலைத்து நின்றார்.

---

அந்தப் புதுமை பொலியும் சுத்தானந்த வளாகத்தினுள் அவரை அவரது கால்கள் நுழைத்து விடுகின்றன. தான் காண்பது கனவா? சிறுபிள்ளைபோல் அங்குமிங்கும் ஓடியோடிப்போய் பார்த்தார். கண்கள் பார்த்துப் பார்த்துப் பூரிக்கின்றன. கண்ணைக்கவரும் கல்யாண மண்டபம். ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கு வித்திடும் பாலர் பாடசாலை வகுப்புக்கள். உணவகம், தொலைத் தொடர்பு வசதிகள். அவரால் நம்ப முடியவில்லை. சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் இனி இல்லை என்றுதான் எண்ணியிருந்தார். ஆனால் 'விழுவது எழுவதற்குத்தான்' என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் புதிய உருவமைப்பில் புதுப் பொலிவோடு கட்டிடங்கள் எழும்பி நிற்கின்றன.

ஆலமரத்தின் விழுதுகள் நிலத்தில் ஊன்றியதும் அதனைத் தாங்குவேர்கள் என்பார்கள். அவை மரத்தின் கிளைகளைத் தாங்கி உரமாகி நிற்கும். அந்த வேர்கள் போல் இன்றும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்க உறுப்பினர்கள் செயற்படுவது பெரிய சேவைதான். அடக்கு முறைகளைச் சந்தித்தாலும் வாழத்துடிக்கும் மக்களுக்கு தாங்குவேர்களாகிச் செயல்படும் உன்னத உள்ளங்களை மனத்திருத்தி நன்றி செலுத்துகின்றார்.

---

"ஐயா என்ன இங்க நிற்கிறீங்க... இப்படி உள்ளே வந்து இருங்க..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன அந்த இளைஞர்களை உற்றுப் பார்க்கிறார். அங்கு சேனாதி, திருமேனி, தருமர், தேவா புடைசூழப் பலர் நிற்கின்றனர். அனைவரையும் அன்புடன் தழுவிக் கொள்கிறார். சுத்தானந்த இந்து இளைஞர் சங்க வளாகம் சோடினையுள் ஆழ்ந்து குதூகலிக்கிறது. பொன்விழா எனும் எழுத்துக்களோடு கொடிகள் காற்றில் ஆடுகின்றன. புரலவர் ஈசன் இராமசாமி ஆசியுரை வழங்கிக்கொண்டிருக்கிறார். எங்கும் பரிச்சயமான அந்த பண்பட்ட அன்புள்ளங்களின் மகிழ்ச்சி பரவுகிறது. இன்று சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் "பொன்விழா' காண்கிறது ஆனந்தரின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர்.

வவுனியா, சுத்தானந்தா இந்து இளைஞர்
சங்கப் பொன்விழா மலர் 2003

---


ஒரு சமூகத்துக்கு வழிகாட்டுபவன்தான் தலைவன். அந்தத் தலைவன் இவ்வாறுதான் வாழவேண்டும் என்று இலக்கணம் வகுத்து வாழ்ந்து காட்டவேண்டும். தன்னை ஒடுக்கி, தன்னலத்தை வெறுத்துப் பிறருக்காக, சாதி, சமய, இன, மொழி பேதங்களைக் கடந்து ஒரு தொண்டனாகச் சாந்தி சமாதானத்துக்காக வாழ்பவனே தலைவன். அவன் ஞானியைப் போல் வாழவேண்டும். நம்நாட்டுத் தலைவர்களும் ஞானிகளாக மாறவேண்டும் தியானம்தான் ஞானிகளை உயர்த்திக் காட்டுவன. எல்லா மருத்துவங்களையும் விடத் தியானந்தான் உயர்ந்த மருத்துவம் ஆகும். எல்லா நோய்களுக்கும் சிறந்த மருந்துமாகும், என ஞானிகள் போற்றியுள்ளனர். தியானம் ஒரு மனிதனை உன்னத நிலைக்கு இட்டுச் செல்லும். போதிமாதவன் கௌதம புத்தர் புனிதன் ஆவதற்குத் தியானமே மருந்தாகியது. சித்தர்களும் யோகியர்களும் தன்னை அடக்கி வாழ்ந்து புகழ் பூத்ததும் தியானத்தினாற்தான். மகாத்மா காந்தியின் உன்னத வாழ்வுக்கும் தியானமே ஆதாரமானது. தியானத்தால் மனதை அடக்கி ஆளலாம். புலன்களை நம்வழிப் படுத்தலாம். கொடுமைகளையும் கொடூரங்களையும் கோபத்தையும் ஒறுக்கலாம். தெய்வமாகலாம். இந்நாட்டுத் தலைவர்களும் ஞானிகளானால் நமது இலங்கைத் திருநாடு நாடு பல்லினங்கள் வாழும் சுதந்திர நாடாகத் திகழும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது இலத்திரனியல் யுகம்



"அதோ..... தாத்தா.... வாறார்.."

சின்னக்குட்டி சுலக்சிக்கா சத்தமிட்டவாறு முன்னே ஓடிப்போனாள். வீட்டில் இருந்தோர் படலைவரை வந்து எட்டிப் பார்த்தனர். அவர்களது முகத்தில் சூரிய உதயம்... சண்முகத்தார் வந்து கொண்டிருந்தார். வசந்தன் ஓடோடி வந்தான். அவனைத் தொடர்ந்து பலர். இவ்வளவு நேரமும் யாரைத் தேடினார்களோ அவரே அவர்கள் கண் முன்னால் நின்றார். வசந்தனை அறியாமலேயே அவனது வாயிலிருந்து ஒலிவந்தது.

"அப்பா"

வசந்தனுக்குத் தன் அப்பாவைக் கண்டதும் அதிர்ச்சியான மகிழ்ச்சி. கண்களில் கண்ணீர் கசிந்தது. நேரத்தைப் பார்த்தான். இதழ்களில் ஒரு முறுவல். மணி ஐந்தைத் தாண்டியிருந்தது. அப்போதுதான் சண்முகத்தார் வீட்டினுள் நுழைந்தார். காலணியைக் கழற்றியதும் திரும்பினார். மகனின் குரல் அவரை ஈர்த்தது. அந்தக் குரலில் ஒரு நடுக்கத்தை உணர்ந்தார். அவரது கண்கள் மகன் வசந்தனின் விழிகளில் மொய்த்தன. பாசம் மிகுந்த அந்தக் குரல் ஒலி அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடச்செய்துவிட்டது. வசந்தனின் விழிகளில் கண்ணீர்க் கடல் ததும்பி கரைபுரண்டு, துளியாகிச் சொட்டுச் சொட்டாய் வீழ்ந்தது. வசந்தனின் வாடிய முகம் அவரை கலக்கமடையச் செய்தது.

அவரது மனதில் ஆயிரம் கோடி மின்னல் அடித்த உணர்வு. காரணம் புரியாத சண்முகத்தார் அசந்து விட்டார்.

"ஏன்....... என்ன நடந்தது."?

அவருக்கும் அந்தக் கலக்கத்தை அறிய ஆவல். அது துளிர்த்து விருட்சமாய் ஊழிக்கூத்து ஆடியது. வசந்தன் ஒன்றும் பேசவில்லை. தனது கண்ணீரைத் துடைத்தான். தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். பக்கத்தில் இருந்த தொலைபேசி கண்களில் பட்டது. பாய்ந்து எண்களைச் சுழற்றினான். அவனின் இயந்திரச் செயலால் சண்முகத்தார் தடுமாறினார். ஏன் இப்படி மகன் அவதிப் படுகின்றான். மனம் ஏதோதோ விபரீதங்களை எண்ணித் தப்புக் கணக்குகளைப் போட்டுக் கொண்டது. எண்ண அலைகள் சூறாவளியாய்ச் சுழன்றடித்தன. சண்முகத்தார் வழக்கத்துக்கு மாறாக மெலிந்து வாடியிருந்தார். கண்கள் சோர்ந்திருந்தன. லூர்து அவரது துயரங்களைப் பகிர்ந்து தாங்குவேராக இருந்தாள். மனைவி மறைந்த பின் உலகமே இருண்டதாகி விட்டிருந்தது. காலந்தான் பதில் சொல்ல வேண்டும். நிம்மதியைத் தொலைத்து விட்ட அவருக்கு விழுதுகளாக இரு பிள்ளைகள். கவலையை மறக்க பக்க பலமாகினர்.

எப்போதும் துள்ளலாய், சுறுசுறுப்பாய், ஒரு இளைஞனைப் போல் செயற்படும் சண்முகத்தார், இன்று வழமைக்கு மாறாக வாடியிருந்தார். வரும்போதும் களைத்து வாடிச்சோர்ந்து வந்திருந்தார். வீட்டில் மகனின் முகத்தையும் செயலையும் பார்த்த போது உடல் சோர்ந்து, உள்ளமும் சோர்ந்து வாட்டியது. இந்த உயிர் இயங்குவதற்கு உடல் தேவை. உடல் இயங்குவதற்கு உயிர் தேவை. தனித்து உடலோ அன்றி உயிரோ இயங்கமுடியாது. உயிரும் உடலும் சேர்ந்தாற்தான் பிறவி. உடலுக்குள் உள்ளத்தை ஒழித்து வைத்து இந்த இறைவன் சித்து விளையாட்டைச் செய்கிறான். உள்ளம் எங்கே இருக்கிறது. உடல் வருந்தும் போது உள்ளமும் வருந்துகிறது. உள்ளம் துயர் கொண்டால் உடலும் களைத்து விடுகிறது. என்ன விளையாட்டு இது. சண்முகத்தாரின் முகம் சூழ்கொண்ட மேகம் போலானது. அவரால் இனியும் பொறுக்க முடியாது. வசந்தன் தொலைபேசியில் உரையாடினான். அவனது பேச்சில் உற்சாகம் தொனித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹலோ... நான் அண்ணா. அப்பா வந்திட்டார்."

மறுமுனையில் பேசுவதை ஊகித்துக் கொண்டார்.

"........................................"

"இப்பத்தான்............."

"........................................"

அப்படியா..... தம்பி ஹான்ட் போன் கொண்டு போனானா..."?

"........................................"

"அப்ப சரி... உடனே... அவனுக்குச் சொல்லுங்க இப்பதான் உயிர் வந்தது..... வைக்கிறன்....."

"நான் கனவு காண்கிறேனா..." தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டார். நடப்பது கனவா? என்ன இவங்களுக்கு வந்தது. யோசிக்கும் போதே வசந்தன் பக்கத்தில் வந்தான்.

"அப்பா நான் பயந்து போனேன். உடல் நடுங்குவதைப் பாருங்கள்"

"ஏன்......?"

"ஏன்...? எத்தனை மணிக்குக் கொழும்பில் தம்பி வீட்டிலிருந்து புறப்பட்டனீங்கள்..."

"விடியவும் ஆறு மணிக்கு....".

"ஆறுமணிக்குப் புறப்பட்டால் கடைசி பன்னிரெண்டு மணிக்காவது வரலாம். ஆனால் பின்னேரம் ஐந்து மணியாகியும் வராவிட்டால்... எப்படி இருக்கும்.? துடித்துப் போனோம். அப்பா.. அம்மாவும் இல்லை. நீங்களும் இல்லாட்டி நினைக்கவே நடுங்குது அப்பா..." சிறுபிள்ளை போல் வசந்தன் அழுவதை அவரால் தாங்க முடியவில்லை. இதுதான் இரத்த உறவா? இதுதான் பாசமா? சண்முத்தாரின் கண்கள் குளமாயின. தனது களைப்பை எல்லாம் மறந்து மகனை வாரியணைத்துச் சிறுபிள்ளையாகித் தேம்பி அழுதார். தொலைபேசி அலறியது. வசந்தன் தொலைபேசியை எடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதில் பொருத்திக் கேட்டான். ஏதோ கதைத்தான். சண்முகத்தாரைப் பார்த்தான்.

"சரி அப்பாவிடம் கொடுக்கிறேன்... அப்பா தம்பி கதைக்கிறான்." வசந்தன் தொலைபேசியை சண்முகத்தாரிடம் கொடுத்தான். பேச்சுத் தொடர்ந்தது.

"அப்பா.. என்ன நடந்தது.."

தொலைபேசியில் இளயமகன் சாந்தனின் குரல். அவனது பேச்சில் கோபம் தெரிந்தது. சண்முகத்தார் பதில் இறுக்கவில்லை. சாந்தனே தொடர்ந்தான்.

"அப்பா ஒரு காரியத்தைச் செய்யமுன் திட்டமிட்டுச் செய்யவேணும். நீங்க அதைச் செய்யவில்லை."

"இப்போ என்ன நடந்து விட்டது.?

சண்முகத்தார் ஒன்றும் தெரியாததுபோல் கேட்டார்.

"என்ன நடந்ததா.. நாங்க துடித்தது எங்களுக்குத்தான் தெரியும்... சரி.. சரி எத்தனை மணிக்கு வஸ் ஏறினீங்க....."

"பதினொரு மணிக்கு..."

"ஆறு மணிக்கு வீட்டிலிருந்து போனீங்கதானே.."

"போனேன்தான்... றாகமையிலிருந்து புறப்பட்டதுமே அடைமழை... அத்துடன் பேய்காற்றும் விசியது. தொப்பாக நனைந்தும் விட்டேன். கொழும்புக் கோட்டையில் பஸ்நிலையத்தில் ஒதுங்கியிருந்து என்னோடு வர இருந்தவரைப் பார்த்துக் காத்திருந்தேன். ஆனால் அவர் வரவில்லை."

"அப்பா அங்கேதான் பிழை விட்டுட்டீங்க. அவரை எங்கே வரச்சொன்னீங்க."

சாந்தனின் குரல் தொலைபேசியில் ஒலித்தது. நடந்தது அவனுக்குத் தெரிந்திருக்க ஞாயமில்லை. சண்முகத்தாரால் அன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வை ஜீரணிக்க முடியவில்லை. அவர் புறப்படும் போதே வானம் சிறுபிள்ளையாகி அழத்தொடங்கியது. எங்கும் கும்மிருட்டாய் இருந்தது. இருளை வீதி விளக்குகள் விரட்டிக் கொண்டிருந்தன. காற்றுப் பேயாட்டம் ஆடியது. மேகத்தை விரட்டி உராயச் செய்தது. மழைத்தாரையைச் 'சலார்' எனப் பிசிறி அடித்தது. மின்னல் வெட்டி வானில் கொடியாய்ப் படர்ந்தது. வானம் முழங்கி பட்டாசு கொழுத்தியது. வீதியில் போவதும் வருவதுமாக ஓரிரு பஸ்கள். மழைக்குளிரில் நனைந்தும் நனையாமலும் மனித இயந்திரங்கள். கொழும்பு செல்லும் பஸ் ஒன்றில் தொற்றிக் கொண்டார். ஆறேமுக்கால் மணிக்கே கொழும்பு பஸ்நிலையம் வந்து விட்டார். காந்திருந்தார்.

சுழன்றடித்தது காற்று. சிறுபிள்ளைத் தனமாய் மழைநீர் எங்கும் புகுந்து விளையாடியது. காற்றின் வேகத்துக்குச் சின்னக் குடைகள் தாக்குப் பிடிக்குமா? கையில் இருந்த குடை சண்முகத்தாரை ஆட்டி எடுத்தது. கறுப்பும் பலவர்ணங்கள் கலந்தும் குடைகள் ஊர்கோலம் போயின. குடைகள் ஆட, அதற்கேற்ப சனங்களும் அசைய வேடிக்கைதான். எனினும் சண்முகத்தார் கவனம் வந்து தரித்துச் செல்லும் பஸ்களிலேயே நிலைக் குத்தி நின்றது. எங்கும் மழைநீரின் நிறைவு. வீதி ஓரங்களில் குளங்கள். அணையில்லாது தேங்கியும், வழிந்தும் கரைபுரண்டது. சீறி வரும் வாகனங்கள் நீரைக் கீறிச் செல்வதால் பயணிகளின் உடைகள் மேலும் தொப்பமாகின. வாகனங்கள் தொடரணியாகச் செல்வதும், நிற்பதுமாக வீதிகளை நிறைத்திருந்தன. சனக்கூட்டம் பெருகி விட்டது.

அன்றையத் தினசரிகளைப் பெற்றுக் கொண்டார். ஒரு கை தினசரிப் பத்திரிகைகளையும் குடையையும் பிடித்துக் கொண்டது. மறு கை பயணப் பொதியைத் தூக்கிக் கொண்டது. தூரப் பயணத்தில் சுண்டங்காயும் சுமையாகும். இதனை அவர் அனுபவ ரீதியாகக் கண்டார். பொதியின் சுமை சண்முத்தாரைக் கீழே இழுத்தது. கையிலிருந்த குடை காற்றின் வேகத்தால் மேலே தூக்க முண்டியடித்தது. இரண்டுக்கும் நடுவே சண்முகத்தார் திக்குமுக்காடிப் போனார். காலணிகளுள்ளே மழைநீர் புகுந்து அவர் பாதங்களை வருடிப் பூசித்தது. உடை முற்றாக நனைந்து விட்டது. வெளியில் குளிர்தான். ஆனாலும் அவருக்கு வெயர்த்தது. வெயர்வை துளிர்விட்டு அருவியாய் உடலில் ஓடியது. குடையைச் சரித்து மல்லுக்கட்டிய காற்றினால் மழைத்துளிகள் சண்முகத்தாரின் தலையைத் தடவின. வழுக்கையில் ஊர்ந்து கூச்சமூட்டின. நீரேந்து பகுதிகளில் மேகநிரை மேய, நீர் சுரந்து வழிந்தோடும் அருவிகள் போல், அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கைத் தலையிலிருந்து மழைத் துளி அருவியாகி வழிந்தன. அவற்றைத் துடைத்து விடவுமில்லை. எல்லாவற்றையும் மறந்தவராய் வந்து தரிக்கும் பஸ்களில் விழிகளைத் தூரத்தித் தேடினார். ஒவ்வொரு பஸ்சும் அவரை ஏமாற்றிவிட்டுச் சென்றன.

நேரம் நகர்வதாய் இல்லை. ஒவ்வொரு வினாடியும் ஒரு யுகமாக சண்முகத்தாரின் மனதை அளந்தன. பொறுப்பென்று வந்துவிட்டால் அதனைச் செய்து முடிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட பொறுப்புக்களில் இருந்து அவர் இம்மியும் நழுவுவதில்லை. மழை விட்டபாடில்லை.

கொழும்புக் கோட்டையில் பஸ் நிலையங்கள் ஏராளம். பாணந்துறைப் பக்கமிருந்து வரும் தனியார் பஸ் இறுதியாகத் தரிக்கும் பஸ்நிலையத்துக்கே வந்து சேருமாறு வரவிருப்பவரிடம் முதல் நாள் கூறியிருந்தார். இப்படி இதே இடத்தில் சந்தித்துப் பல பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார். இன்று மட்டும் இப்படி...... தடுமாறினார். எத்தனை மனிதர்கள் மத்தியில் இருந்தாலும் இந்த மனம் மட்டும் தனக்குத் தானே வினாவும் விடையுமாகப் பேசிக் கொள்வதேன்? மனம் பற்றிய தத்துவ விசாரனையில் மனதிலேயே நடந்து கொண்டிருந்தது. மனம் அல்லது உள்ளம் என்பது ஒரு விசித்திரமானதுதான். அது மூளையில் உள்ளதா? இதயத்தினுள் உள்ளதா? உடலின் எந்தப் பகுதியில் உள்ளது. காற்றுப் போனால் மூச்சுப் போகும். மூச்சுப் போனால் பேச்சுப் போகும். உயிர்ப்பும் அற்றுவிடும். உடல் ஓய்ந்து சரிந்துவிடும். உயிர் உடலில் உள்ளவரை எனது மனைவி உறுதுணையாக இருந்தாள். அவள் உயிர் போனதும்... அவரின் தொண்டை அடைத்துக் கொண்டது. அவளோடு வாழ்ந்த அந்த இனிமையான காலம் கனவாய்.... கற்பனையாய்... பாழாய் போயிற்று. சண்முகத்தாருக்கு விசராக வந்தது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டார். அதில் இருந்து விடுபடத்தான் இந்தப் புதிய வேலையில் ஒட்டிக் கொண்டார்.

பஸ்நிலையங்களை நோட்டம் விடுவோமா? போய் தொலைபேசியில் தொடர்பு கொண்டால்....? நான் அங்கு போகும் போது அவர் இங்கு வந்து தேடினால்? அவர் செய்வதறியாது ஆடிப்போனார். பக்கத்தில் நிற்பவரைப் பார்த்தார். சிங்களத்தில் நேரத்தைக் கேட்டார். பிறந்தது முதல் ஒரு மணிக்கூடுதானும் கட்டாத பிறவி அவர். பத்துமணி எனப் பதில் கிடைத்தது. பதறிப் போனார். ஒரு வேளை திருகோணமலை பஸ்சில் போயிருந்தால்.... இனிப் பயனில்லை. சுமையோடு திருகோணமலை செல்லும் தனியார் பஸ்நிலையத்துக்கு நடந்தார். பதினொரு மணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் கிடைத்தது. வந்துவிட்டார். சாந்தன் தொலைபேசியில் கேட்டதற்குப் பதில் அளித்தார்.

"தனியார் பஸ் நிலையத்திற்கு... ஆனால் அங்கு அவர் வரவில்லை."

சண்முகத்தாரின் இறுக்கமான பதில். இவன் என்ன சட்டமா அதிபர்போல் கேள்வி கேட்கிறான். அவரின் உள்ளத்தில் ஒரு உரைசல்.

"அங்க தான் நீங்க பிழை விட்டிட்டீங்க. அவர் வந்து பார்த்திருக்கிறார். ஒன்பது மணிவரை நின்றிருக்கிறார்."

சாந்தனின் ஒலி சண்முகத்தாரின் தலையில் அடிப்பது போல் இருந்தது.

"நான் பத்து மணிவரை நின்றேனே... காணவில்லையே.... அவர் வரவில்லை. பொய் கூறுகிறாய்."

சண்முகத்தார் அழுத்தமாக நின்றார்.

"அப்பா, அவர் மஞ்சள் நிற பஸ் நிலையத்தில் நிற்பதாக என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கூறினார். அப்பா எப்படியும் தேடி வருவார். அங்கேயே நிற்கும் படியும் கூறினேன்."

சாந்தன் விளக்கமாகச் சொன்னான். சண்முகத்தார் ஆழ்ந்து யோசித்தார். நான் தனியார் பஸ் நிலையத்துக்குத்தானே வரச்சொன்னேன். மீண்டும் மீண்டும் யோசித்தார். வயது போய் விட்டதால் பிழையாகச் சொன்னேனா? என் மனைவிபோனபின்னால் நான் நிலை தடுமாறுகிறேனா? பல கேள்விக் கணைகள் மனத்தில் குத்தின. நாலுபேர் சூழ்ந்து நம்மைப் பைத்தியம் என்று சொன்னால் இந்தச் சமூகம் ஏற்றுக் கொண்டு விடும். எனக்கு ஆறுதல் கூற மனைவி இல்லையே. இப்போது மனைவி லூர்த்தை எண்ணிக் கொண்டார். அவள் போனபின் யானைப்பலத்தை இழந்த உணர்வு அவருக்கு. தன்னைத்தானே நொந்து கொண்டார். ஒரு அசட்டுத் தைரியம் பிறந்தது.

"இருக்காது. நான் சரியாகத்தான் சொன்னேன்." சற்று ஆறுதல் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் தனியார் பஸ்நிலையத்துக்குத்தான் அவரை வரச்சொன்னேன். அவர் பிழை விட்டதற்கு நான் என்ன செய்வது"?

"நீங்க எனக்குத் தொலைபேசியில் சொல்லி இருக்கலாம் தானே. இப்படி நெருக்கடி வந்திருக்காது. அவர் திரும்பி உங்கள் அலுவலகத்தில் போய் நடந்ததைச் சொல்லி இருக்கிறார். அவர்கள் எனக்கு அறிவித்தார் கள். நான் அண்ணாவுக்கு அறிவித்தேன். நாங்க பட்டபாடு. ஆண்டவனுக் குத்தான் தெரியும்."

சாந்தன் சொல்வது சரியாகப் பட்டது. சாந்தனே பேசினான்.

"நீங்க எந்த யுகத்தில் இருக்கிறீங்க. இது நவீன இலத்திரனியல் யுகம். இவற்றைப் பயன்படுத்த உங்களால் முடியாதா? இத்தனை அனுபவம் வந்தும் என்ன பயன்"?

சண்முகத்தார் சிலைபோல் நின்றார். அவரது பிடரியில் யாரோ தட்டுவது போல் இருந்தது. அவன் கூறியது அத்தனையும் உண்மைதான். "இந்த யுகத்திற்கு ஏற்றாற் போல் என்னால் செயற்பட முடியாதுள்ளது. என்போன்றவர்கள் இங்கு வாழத் தகுதியற்றவர்களே." மனதில் எண்ணிக் கொண்டார்.

"அப்பா.."

"ஓம்.. என்ன... சொல்லு"

"அப்பா.. இப்ப எந்த நாளும் வீதி விபத்துக்கள் அடிக்கடி நடக்குது. நான் ராகம மருத்துவமனைக்கு ஓடினேன். அன்று சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட பெயர்களைப் பார்வையிட்டேன். பின் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு ஓடினேன். இப்படி அலைந்தோம்." சாந்தனின் குரலிலும் ஒரு துயரம் இழையோடுவதை சண்முகத்தார் உணர்ந்து கொண்டார்.

"அப்பா... கொழும்பு பஸ்நிலையம் போய்க் கொண்டிருந்தேன். நீங்க வீடு வந்த செய்தியை நிமேசி சொன்னதும் காரைத் திருப்பி வீடு வந்து கதைக்கிறேன். இனியாவது மூளையைப் பாவியுங்கள். விவேகத்தைப் பற்றி எங்களுக்குச் சொல்லித் தந்துவிட்டு, அந்த விவேகத்தை நீங்க பின்பற்றல்ல"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கூறிய அனைத்தும் அவர் செவியில் பாய்ந்தன. மனம் ஏற்க மறுத்தாலும், பிள்ளை சொல்வதன் தாற்பரியத்தைப் புரிந்து கொண்டார். மனதுள் பிள்ளைகளின் பாசப் பிணைப்புகளை எண்ணிப் புளகாங்கிதம் அடைந்தார். அவரது மனக்கடலில் பாச அலைகள்.

"அப்பா எங்கும் தொலைபேசி அழைப்பு நிலையங்கள் உண்டு. எங்கு போனாலும், ஒரு அழைப்பை எடுத்துச் சொன்னால் போதும். இனியும் இப்படிப் பிழைகள் விடாதிங்க"

சண்முகத்தாருக்கு ஒரு புறம் ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. மறுபுறம் அவர்கள் கூறியவற்றின் உண்மைத் தன்மையையும் உணர்ந்து கொண்டார். இறைவனுக்கே அவரது மகன் முருகன் குருவாகி உபதேசித்ததை எண்ணிப் பார்த்தார். எது சரி எது பிழையென்று அவர் அலசவில்லை. இந்த இலத்திரன் யுகத்தில் 'வாழத் தகுதியற்றவர்' என்பதை மட்டும் உணர்ந்து கொண்டார்.

தினக்குரல் 05-01-2003

சிறுகதையின் பலம் மனித நிலைகளை, மனிதச் சூழமைவுகளைச் சித்தரிப்பதற்கான மிக அற்புதமான வடிவம் என்பதுதான். அதன் சிறுமை அது கோரி நிற்கும் மொழிநடை அதன் முடிவு ஆகியன, மனித முனைப்புப் பயன்பாட்டுக்கு உதவுவன. மனிதச் சூழமைவைச் சித்தரிக்க, மனிதம் பற்றிய ஒரு வரிப்புணர்வு, அதனில் முழு நம்பிக்கை வைத்து, அதன்பால் எண்ணங்கூறும் உணர்வும் குவிமுனைப்பு எய்தி நிற்கும் ஒரு மனநிலையும் அவசியம். அந்த மனநிலையின் இலட்சிய நிறைவேற்றத்தைச் சாதிப்பதற்கான மொழிவாக்கம் கைகூடல் வேண்டும். இதற்கு மொழியின் சாத்தியப்பாடுகள், அதன் ஆழ அகலங்கள் தெரியவேண்டும்.

~ பேராசிரியர் கா. சிவத்தம்பி ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரக்கமில்லாதவர்கள்

இருள் பரந்து மூடி இரவு வந்தது. இரவு என்பது உழைப்புக்கு ஓய்வு கொடுக்கும் ஒரு இடைவேளை. களைத்த உடல்களைக் கிடத்திப் புத்தூக்கச் சக்தி அளிக்க வந்த இயற்கையின் கொடை. இரவு என்று ஒன்று இல்லாவிட்டால் உழைப்பவர்களுக்கு ஓய்வே கிடையாது. இருள் பரவும் இடமெல்லாம் ஓய்வும் உறக்கமும் ஆட்கொண்டிருக்கும். ஆனால் இலங்கைத் திருநாட்டின் ஒரு பகுதி மக்கள் மட்டும் ஓய்வு உறக்கமின்றி ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குப் பகலும் இரவும் ஒன்றுதான். பயந்து பயந்து வாழும் ஒரு வாழ்க்கை அமைப்பு அவர்களுடையது.

நடுச்சாமம். கடற்பரப்பு கருங்குழம்பு பூசியவாறு படுத்திருந்தது. அமைதியைக் கலைத்து வானிடிந்து வீழ்வது போல் பெரும் வெடிச்சத்தம்.... மூதூர் பிரதேசம் அதிர்ந்து கொண்டிருக்கிறது. கட்டைபறிச்சான் சேனையூர் கடற்கரைச்சேனை சம்பூர் கூனித்தீவுக் கிராம மக்கள் உயிர்தப்ப வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடுகிறார்கள். அவர்களுக்குக் காடுகள் தஞ்சமளிக்கின்றன. எங்கும் கூக்குரல். கடற்பரப்பிலிருந்து ('கண்போட்') சுடுகலப் படகுகள் ஷெல்களைக் கக்கிக் கொண்டிருக்கின்றன. ஷெல் புறப்படும்போது மட்டும் தீப்பிழம்பைக் கக்கி வெளியேறும். காற்றைக் கிழித்தவாறு மரங்கள் அசைந்து எழுப்பும் ஓசையோடு விரையும். வானில் பயங்கரமாக வெடிக்கும். வெடித்ததும் பிரிந்து பல இடங்களை நோக்கிப் பாயும். வீழ்ந்து வெடித்துச் சிதறும். மரம் செடிகொடிகள் அழியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

தென்னை பனைகளின் வட்டுக்கள் தெறிக்கும். விலங்குகளின் உடல் கிழியும். மனிதரின் உயிர் பறித்து உடல்களைத் துண்டித்து வீசும். பற்றாக்குறைக்குப் படைத் தளங்களில் இருந்தும் ஆட்டிலறி ஷெல்கள் உறுமிப் பாய்ந்து ஊரைத் தாக்கி வெடிக்கின்றன. காடுகளுக்குள்ளும் வீழ்ந்து வெடிக்கின்றன.

இது இன்று நேற்றுத் தொடங்கிய செயலல்ல. என்று இந்த நாட்டில் சிங்களம் மட்டும் என்ற மொழிச் சட்டம் கொண்டு வந்தார்களோ அன்று தொடக்கம் இந்த நாட்டுக்குப் பிடித்த சாபக்கேடு இது. அதை எதிர்க்கும் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அராஜகம். அதன் உச்சக் கட்டம்தான் அப்பாவித் தமிழ் மக்களின் கிராமங்களை நோக்கிய ஷெல்வீச்சுக்கள். ஷெல்களுக்கு சாதி சமயம், கீழோர் மேலோர், குழந்தை முதியோர், மரம் செடி கொடி விலங்கு என்ற வேற்றுமைகள் இல்லை. சரிநிகர் சமானமாக அழித்தொழித்து விடுவன.

முதற்ஷெல் விழுந்து வெடித்ததுமே மக்கள் உசாராகி விட்டிருந்தனர். ஷெல் வரும் திசையை நோக்கி அனுமானித்துக் கொண்டு ஓடத் தொடங்கி விட்டனர். போட்டது போட்டபடி கிடக்க உயிர் தப்பினால் போதும் என்று பல கிலோமீற்றர்களுக்கு அப்பாலும் ஓடி கண்துஞ்சாது பதுங்குகின்றனர். காட்டு விலங்குகளுக்கும் நிம்மதி இல்லை. அவை ஓடி ஒதுங்குகின்றன. எப்போது விடியும். எப்போது ஷெல்லடி ஓயும். அவர்களின் மனங்களெல்லாம் அவர்களிடம் இல்லை. அவை இறைவனின் பாதங்களில் தஞ்சமடைந்து உறைந்து கிடக்கின்றன. புயலுக்குப் பின் தோன்றும் பயங்கர அமைதி நிலவுகின்றது. ஆனால் அந்த மக்களின் மனங்களில் மட்டும் அமைதி இல்லை. பயங்கர மரண பயம்.

மெல்ல மெல்லப் பறவைகளின் குரல் கேட்கிறது. ஒரு கோலமாய் அமைந்து மனதைக் கவரும் அந்த இசைக் கோலங்கள் அவர்கள் உள்ளத்தில் இனிக்கவில்லை. மாறாக அவலமாய் அழுகுரல்களாய் ஒலிக்கின்ற பிரமை. இருளை மெல்ல விலக்கிச் சூரிய கதிர்கள் எட்டிப் பார்க்கின்றன. கிழக்கில் இயற்கையின் சோடினையின் இங்கிதம். இருண்டும் வரண்டும் போய்கிடக்கும் இம்மக்களின் இதயங்களில் வெளிச்சம் இல்லை. பொழுது மட்டும் மெல்ல விடிகிறது.

விடிந்து பொழுது வெளிக்கிளம்பி விட்டது. மக்கள் ஒருவர் இருவராகக் காடுகளை விட்டு வெளியே வருகிறார்கள். மெதுவாகக் கூடிக் கதைக்கிறார்கள். மெல்ல மெல்ல ஊர்ப்பக்கம் நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கிறார்கள். எங்கு ஷெல் வீழ்ந்து வெடித்தது? யார்யார் செத்து மடிந்தார்கள் என்பதை அவர்கள் தெரிந்திருக்க ஞாயமில்லை. ஊரையே தொலைத்து விட்ட பிரமையில் ஊருக்குள் நுழைகிறார்கள். அது அவர்கள் வாழ்ந்த ஊர்தானா? ஆளையாள் சந்தேகத்தோடு பார்த்து நடக்கிறார்கள். அந் நடையிலும் ஒரு தயக்கம். ஷெல் வந்து வீழ்ந்து வெடித்தால்? வீடுகள் அழிந்து போய்க்கிடந்தன. ஆசையாக வளர்த்த கால்நடைகள் மடிந்து கிழிந்து கிடந்தன. பயப்பிராந்தியில் கண்கள் சிவந்து நடுங்கியபடியே வீதிகளில் தங்கள் வீடுகளைப் பார்க்க ஓடுகிறார்கள்.

செல்லச்சாமி மெல்ல நடந்து வருகிறான். அவனைத் தொடர்ந்து அவன் மனைவி வடிவு. பின்னால் மகன் தங்கன். அந்தச் சிறுவன் நனைந்த முயற்குட்டிபோல் நடுக்கத்துடன் காணப்பட்டான். அந்தப் பயந்த முகம் அவனது மனநிலையைக் காட்டியது. வெடி முழக்கங்களும் மரண ஓலங்களும் அவனைப் பெரிதும் பாதித்து விட்டன. கண்முன்னால் மனித உடல்கள் சின்னா பின்னமாகிச் சிதறிக் கிடப்பதையும் அந்தச் சின்ன உள்ளத்தால் ஜீரணிக்க முடியவில்லை. மருண்டுபோய் சோகமே உருவாகியிருந்தான். அந்த நிகழ்ச்சிகளை அவன் மனம் பதிவு செய்து உறைந்து கல்வெட்டாக மாற்றி விட்டது. செல்லச்சாமி வீட்டுப் படலையில் கால் வைத்தான். தன் உடலைக் கிள்ளிப் பார்த்தான். அவன் கண்கள் அவன் வீட்டைத் தேடின. வீட்டைப் பார்த்ததும்தான் ஷெல்வீச்சின் உக்கிரம் புரிந்தது. வீடு இருந்த இடத்தில். கற்குவியலும் இடிபாடுமாய்க் கிடந்தது. தலையில் அடித்துக் கொண்டு அப்படியே குந்திவிட்டான். இரவு மனைவியையும் பிள்ளையையும் இழுத்துக் கொண்டு ஓடியதில், கல்லடி பட்டுக் காற்பெருவிரல் நகம் கழன்று இரத்தம் ஓடியதுகூட அவனுக்கு நினைவில்லை. வலியும் தெரியவில்லை. மனம் மரத்து விறைத்து விட்டிருந்தது.

அந்த வீட்டைக்கட்ட அவன் பட்டபாடு அவனுக்குத்தான் தெரியும். வடிவு வீட்டைக் கட்டுவதற்கு எடுத்துக் கொண்ட அயராத முயற்சிகள் அவன் கண் முன்னால் தெரிந்தன. அதற்காகப் பட்ட கடன் இன்னும் கட்டி முடியவில்லை. தங்கள் உழைப்பின் முழு உருவமும் செல்வமுமான அந்த வீடு சரிந்து இடிந்து கண்முன்னே தூளாகிக் கிடக்கிறது. வடிவு கண்ணீர் விட்டுக் கதறினாள். அவளைத் தேற்ற முடியாது திணறினான்.

"செல்லா எழும்பி நடக்க வேண்டிய காரியத்தைப் பார். நாம உயிரோடயாவது இருக்கிறம். அந்த வகையில சந்தோசப்படுவம். எழும்பு. இந்தா பிள்ள வடிவு இதக் குடியுங்க".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையர் வந்து முதுகில் தட்டுமட்டும் அவன் இந்த உலகத்தில் இல்லை. செல்லச்சாமி அப்படியே உறைந்திருந்தான். கந்தையரது வீட்டின் குசினியின் ஒரு பகுதி மட்டும் மிஞ்சி இருந்தது. அவர் தைரியசாலி. இதற்கு முன் இப்படியொரு ஷெல்லடியால் அவர் தன் வீட்டோடு மனைவியையும் இழந்திருந்தார். அவருக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஒண்டிக்கட்டை. அதிகாலையிலேயே வந்து வீட்டைப் பார்த்துவிட்டு உடைந்த குசினிக்குள் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தார். செல்லச்சாமியைக் கண்டதும் தேநீரையும் எடுத்துக் கொண்டு வந்தார்.

"கந்தையாண்ண! நம்மட கண்முன்னே நம்மள அழிக்கிறாங்க. நாங்க இவங்களுக்கு என்ன செய்தநாங்க?" அழுகையோடு கூறிக்கொண்டு எழுந்தான். கந்தையர் ஆதரவோடு அவனைக் கட்டிக் கொள்கிறார்.

"செல்லச்சாமி இரவு இங்கே இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? நாம இப்படி உயிரோட இருந்து பேசுவோமா? நான் மட்டும் விதி விலக்கா? வீடும் இல்லை மனிசியும் இல்லை. ஷெல்லடியில என்ர மனிசி செத்தது உனக்குத் தெரியும். நீதான் வந்து ஆதரவு கூறினாய். நீ இப்படி இடிந்து போனால் யார் ஆறுதல் கூறுவது? நடக்கிறதப் பார்ப்பம். எழும்பி தேத்தண்ணியக் குடி. வடிவு! ஊத்திக் குடம்மா. நீயும் குடி". கொண்டு வந்த பாத்திரத்தைக் கொடுத்தார். பசியும் பயமும் துயரமும் கொண்ட முகங்கள். வடிவு வாங்கிக் கொண்டாள். குவளைகளில் ஊற்றிக் கொடுத்தாள். கந்தையருக்கும் கொடுத்தாள். படலை வாசலில் தெருவோரத்தில் குந்தியிருந்து குடித்தார்கள். வருபவர்களை வீட்டுக்குள் அழைத்து விருந்தோம்பியவர்கள் தெருவோரத்தில் குந்தியிருந்து தேநீர் குடிப்பது பரிதாபகரமானது.

தொலைவில் அழுகுரல் கேட்டது. பலர் அந்தப் பக்கம் ஓடுவதைக் கண்டார்கள். இவர்களும் ஓடினார்கள். பார்த்ததும் ஆடிப்போய் விட்டார்கள். அங்கே பொன்னையர் இரத்த வெள்ளத்தில் தசைநார்கள் சிதறி விறைத்துக் கிடந்தார். இடைவிடாத ஷெல்வீச்சால் ஓடமுடியாத உயிர்கள் பலியாகிக் கிடந்தன. இப்படி மூன்று குடும்பங்களைச் சேர்ந்த பதினொரு அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப் பட்டிருந்தன. அந்த உடல்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்குச் சிதைந்து கிடந்தன. ஊரெங்கும் சாவீடு. மரண ஓலம். செல்லச்சாமி குலுங்கிக் குலுங்கி அழுதான். இரக்கமில்லாத அரக்கர்களின் ஈனச்செயலுக்காக வருந்தினான். விஞ்ஞானமும் வெளிநாட்டுத் தொழில் நுட்பமும் எங்கள் மக்களை அழிக்கிறது. வாழ்க்கைக்கு உதவ வேண்டியவை வாழ்க்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைக்கிறதை எப்படி அனுமதிப்பது? செல்லச்சாமியின் மனதிலே பெரும் போராட்டம். 'ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு' சடலங்களை அடக்கம் செய்துவிட்டு வந்தனர். மரண விசாரணைகளும் இல்லை. மாலையாகி வந்தது.

செல்லச்சாமி வீட்டுக்கு வந்தான். இடிபாட்டோடு கிடந்த தன் வீட்டுக்குள் நுழைந்தான். ஒரு அசுரத்தைரியம் வந்திருக்க வேண்டும். அலங்கோலமாய்க் கிடந்தவற்றை ஒழுங்கு படுத்தினான். கற்குவியலை அகற்றத் தொடங்கினான். வடிவு பிள்ளையை அணைத்தபடி குந்தியிருந்தாள். அவள் கற்சிலையாகிக் கண்ணீரோடு விக்கித்திருந்தாள். அந்தச் செயல் அவனை உலுக்கியது. அவளிடம் வந்தான். கண்ணீரோடு களைத்திருந்த மனைவியின் கண்ணீரைத் துடைத்து விட்டான். ஒரு பெண்ணுக்குத்தான் வீட்டின் அருமை பெருமை தெரியும். வடிவை எண்ணிக் கவலைப்பட்டான்.

"வடிவு வீடு இல்லாட்டியும் பரவாயில்லை. உயிரோடு இருக்கிறம். அந்த வகையில கடவுளுக்கு நன்றி சொல்ல வேணும். பசிக்குது. ஏதாவது காய்ச்சு. எழும்பு தம்பிக்கும் பசிதானே".

சொல்லிவிட்டு இடிபாட்டுக்குள் நுழைந்தான். தம்பிக்கும் பசிதானே என்றதும் வடிவு பதறி எழுந்தாள். சிதறிக் கிடந்த குசினியுள் எட்டிப் பார்த்தாள். ஒரு சாக்குத் தெரிந்தது. கொஞ்ச அரிசி மிஞ்சியிருந்தது. ஒரு திருப்தி அவள் முகத்தில் பளிச்சிட்டது. அகப்பட்ட பொருட்களைத்தேடி எடுத்தாள். அவள் இயந்திரமானாள். சமயலில் இறங்கி விட்டாள். செல்லச்சாமி உடைந்து முறிந்த வீட்டு மரங்களைப் புரட்டினான். புத்தக அலுமாரி நொருங்கிக் கிடந்தது. உடைகள் அழிந்து எரிந்து சாம்பலாகிக் கிடந்தன. மாற்றி உடுப்பதற்கு உடைகளும் இல்லை. புத்தகங்கள் அழிந்ததற்காக 'ஓ' வென்று குலுங்கி அழுதான். படிக்கும் காலத்தில் இருந்தே வாசிக்கும் பழக்கத்தில் ஈடுபட்டவன். புத்தகங்களைச் சேர்த்துப் பாதுகாத்து வருபவன். புத்தகங்களின் அழிவை அவனால் தாங்கமுடியவில்லை. அவன் அழுவதைப் பார்த்த வடிவு பக்கத்தில் சென்றாள். செல்லச்சாமி இப்படி அழுவதை அவளாலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"அழுறத விட்டுப்போட்டு நான் சொல்லுவதக் கொஞ்சம் கேளுங்க. இனிமேலும் என்னால பொறுக்கேலாது. என்ர பிள்ளய திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியில சேர்த்துவிட்டு வாங்க. என்ர பிள்ள தப்பிப் பிழைத்துப் படிக்க வேணும்." அவள் உறுதியான முடிவில் இருந்தாள்.

"வடிவு விசர்த்தனமாகக் கதைக்காத.... நான் என்ன பெரிய உத்தியோகமா பார்க்கிறன். என்ர இந்தப் பிச்சைக்காரச் சம்பளத்தில எப்படிச் சமாளிப்பது. எப்படித் தங்கனை அனுப்புவது?"

"எனக்குத் தெரியாது. எப்படியாவது என்ர பிள்ளய மலைக்குப் படிக்க அனுப்பத்தான் வேணும்."

"சரி யோசிப்பம்."

"யோசிக்க ஒன்றும் இல்லை. அடுத்த கிழமை தங்கனை திருகோணமலைப் பாடசாலையில சேர்த்தே ஆகவேண்டும்." வடிவு பிடிவாதமாக இருந்தாள். செல்லச்சாமி நன்றாக யோசித்தான் வடிவு சொல்லுவதிலும் ஞாயம் இருந்தது. வேதனையான நேரத்திலும் அவன் பொறுமையாகச் சிந்தித்தான். அவள் விருப்பம் போலச் செய்ய நினைத்தான்.

"வடிவு நீ சொல்லுவது சரி. தங்கனை அடுத்த கிழமை பள்ளியில சேர்ப்போம். கொஞ்சம் காசு புரட்ட வேணும். அதுதான் இப்ப எனக்கு யோசனை. யாரிடம் கேட்பது?" யோசனையில் ஆழ்ந்து விட்டான். இருண்டு இரவாகியது. இரவானதும் பயம் கௌவிக் கொண்டது. சமையல் முடிந்து விட்டது. சனங்கள் காடுகளை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். கந்தையர் வந்துகொண்டிருந்தார். "செல்லா இன்னும் வெளிக்கிட இல்லையா? இந்தப் பாவிகளை நம்ப ஏலாது. எந்த நேரமும் ஷெல் வரும்." கந்தையர் சொல்லும்போதே வெகுதூரத்தில் ஷெல் விழுந்து வெடிக்கும் சத்தம் கேட்கிறது. உசாராகி விட்டனர். சமைத்ததைச் சாப்பிடவும் இல்லை. ஒரு பாத்திரத்தில் சமைத்ததைக் கொட்டி எடுத்துக் கொண்டனர். தங்கனையும் இழுத்துக் கொண்டு நடைகட்டினர். பின்னால் கந்தையர் நடந்தார். காடு இரு கரம் நீட்டி அழைத்து ஆதரவு அளிக்கக் காத்திருந்தது. காடு ஊராகி விட்டிருந்தது.

அடிக்கடி ஷெல் விழுந்து வெடிக்கும் சத்தம் மட்டும் கேட்டது. வடிவுக்கு இப்போது தங்கனின் கவலைதான். செல்லச்சாமியைப் பார்த்தாள்.

"நான் யோசித்துப் பார்த்தன் உங்கட சோதனை முடிவும் வந்து நிரந்தரக் கடிதமும் கிடைச்சிற்றுத்தானே? அந்த நிலுவைக்காசு இருக்குத்தானே அதக் கேட்டுப் பாருங்க. கடன் படவும் தேவையில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நான் சொல்லுறது?'' பெரிய கண்டுபிடிப்பைக் கண்ட நிறைவு வடிவுக்கு. அவள் செல்லச்சாமியைப் பார்த்தாள். செல்லச்சாமி இருளை வெறித்துப் பார்த்தபடி இருந்தான். ஒன்றும் பேசவில்லை. அவளுக்குச் சொன்னாலும் விளங்கப் போவதில்லை. கண்விழித்தபடி இருந்தவன் அப்படியே உறங்கிவிட்டான்.

விடிந்து விட்டிருந்தது. அவன் எழும்பும்வரை வடிவு அவனை எழுப்பவில்லை. எழுந்ததும் வீட்டுக்கு நடந்தார்கள். நடக்கும்போது வடிவு நினைவூட்டத் தவறவில்லை. அவன் பேசாது நடந்தான். வீடு வந்தது. ஊரில் அசம்பாவிதங்கள் நடக்கவில்லை. உடலைக் கழுவிக் கொண்டான். கிடந்த உடையை அணிந்தான். சைக்கிளைப் பார்த்தான். அது நொருங்கிக் கிடந்தது. கந்தையரிடம் கிடந்த பழைய சைக்கிளை இரவல் பெற்றான். புறப்பட்டு விட்டான். அவனது செயற்பாடுகள் வித்தியாசமாய்த் தோன்றியது.

"என்ன ஒன்றும் பேசாமல் புறப்படுறீங்க.''

"வடிவு இதில பேசுறதற்கு ஒன்றுமில்ல. நல்லா யோசித்துப் பார்த்தன். நீ சொன்னபடி செய்யப் போறன். இண்டக்கி வேலைத்தலத்தில போய் என்ர நிலுவைக் காசைக் கேட்கப் போறன். வேற வழியில்லை.'' கூறிக்கொண்டே சைக்கிளில் தாவி ஏறினான். சைக்கிள் காற்றாய்ப் பறந்தது. கொழுத்தும் வெயில், பசி, தாகம் ஒன்றும் அவனுக்குத் தெரியவில்லை. சைக்கிள் வேலைத்தல வாசலில் வந்து நின்றது. சைக்கிளை வைத்து விட்டு அலுவலகத்திற்குள் நுழைந்தான்.

"செல்லச்சாமி ஊர் எப்படிக் கிடக்கு. ஒரே ஷெல்லடியாம். மெய்தானா?'' அவனைக் கண்டதும் நண்பன் சிவா ஆவலோடு ஓடிவந்து கேட்டான்.

"அதையேன் கேட்கிறாய். எங்கும் மரணபயம். எல்லாம் அழிஞ்சி நாசமாகி விட்டது.'' கவலை தோய்ந்த முகத்துடன் கூறினான். அவனது தோற்றம் அங்கிருந்தவர்களின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவனைச் சூழ்ந்து விபரத்தைக் குடைந்தனர். அவன் விரிவாக எடுத்துச் சொன்னான். தான் வந்த நோக்கத்தையும் சொன்னான்.

"செல்லச்சாமி நீ உனக்குச் சேரவேண்டியதைத்தான் கேட்கிறாய். அதுவும் இந்த நேரத்தில் உதவாட்டி பிறகெதற்கு? தம்பி சிவா! அந்த வவுச்சர் படிவங்களை எடு.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கிளாக்கர் பரமசிவம் இயந்திரமானார். சிவா படிவங்களை எடுத்துக் கொடுத்தான். அவரே படிவங்களை நிரப்பினார். கையெழுத்தை மட்டும் செல்லச்சாமி வைத்தான். கையிலே காசு வந்ததுபோல் உணர்ந்தான். தன்னைப் பிடித்த துயரமெல்லாம் ஓடிவிட்டதாக எண்ணினான். படிவங்களை அவனது கையிலே கொடுத்தார்.

"செல்லச்சாமி இதைப் பிடி. நேரே போ. மேல் மாடியில் கணக்காளர் இருக்கிறார். அவரிடம் கொடு. அவர் எல்லாம் செய்வார்."

செல்லச்சாமி கனவில் மிதந்தான். அவனது கால்கள் அவனை மேல்மாடியில் இருக்கும் கணக்காளர் அறைக்கு அழைத்து வந்துவிட்டன. அவனது கண்கள் அந்த மாடியை மேய்ந்தன. 'பிரதான கணக்காளர்' பலகை மின்னியது. அறை பூட்டப்பட்டு இருந்தது. அது எயார்கொண்டிசன் செய்த அறை. எயார்கொண்டிசன் அறையுள் நுழைந்தான். கணக்காளர் கோவைகளில் மூழ்கியிருந்தார்.

"வணக்கம் ஐயா!" செல்லச்சாமியின் காலடி ஓசையும் அவனது ஒலியும் ஒன்றாய்ச் சேர்ந்து கணக்காளரை நிமிரச் செய்தன. நிமிர்ந்தார். கணக்காளர் முன் கைகட்டி வாய் பொத்திப் பக்குவமாகப் படிவங்களை நீட்டினான்.

"என்ன தம்பி இது?" படிவங்களை வாங்காமலேயே கணக்காளர் கேள்வியால் துளைக்கிறார்.

"வவுச்சர் படிவங்கள்."

"எதுக்கு?"

"என்ர அரியேஸ் கொஞ்சம் கிடக்கு... அதையெடுக்க வேண்டும். அதுக்கு." பதுங்கிப் பதுங்கிச் சொற்களை விழுங்கி செல்லச்சாமி பதிலளிக்கிறான்.

"அதெல்லாம் தர முடியாது. பினான்ஸ் கொமிசன் அனுமதி தரல்ல. அரியேஸ் எல்லாம் தரமுடியாது. நீ போகலாம்" வெட்டொன்று துண்டு இரண்டாகக் கடுகடுத்துக் கணக்காளர் பொரிந்து தள்ளுகிறார். செல்லச்சாமியின் கண்கள் கண்ணீரை இறைக்கின்றன. நாக்கு வரண்டு சொற்கள் வர மறுக்கின்றன. கூனிக் குறுகி தன்னைக் கட்டுப்படுத்துகிறான். அழுகையூடாகச் சொற்கள் மெல்ல மெல்ல வெளிவருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா! என்ர கஸ்ர நிலையாலதான் வந்தனான். தினமும் நாங்க செத்துப் பிழைக்கிறம். இந்த நேரத்திலதான் உதவ வேணும். கொஞ்சம் கருணை காட்டுங்கள்." செல்லச்சாமி நிலத்தைப் பார்த்தவாறு பொருமினான். கணக்காளர் தனது கண்ணாடியின் ஊடாகத் தன் பார்வையைச் செலுத்தினார்.

"இஞ்ச பார் தம்பி. நான் சொன்னாச் சொன்னதுதான். தரமுடியாது என்றால் பிறகேன் நிற்கிறீர்? எனக்கு வேலையிருக்கு. குழப்பாமல் போய்விடும்."

கடுகடுத்து விட்டுத் தன் கடமையில் ஆழ்ந்து விட்டார். செய்வதறியாது அறையை விட்டு வெளியேறுகிறான். கண்கள் தாரைதாரையாகக் கண்ணீரைச் சிந்தின. மாற்றி உடுக்க உடுப்பில்லை. உணவுக்கு வேறு வழியில்லை. மகனை எப்படிப் படிக்க அனுப்புவது? வடிவுக்கு என்ன பதில் கூறுவது? சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்த வழியே நடக்கிறான். தமிழனுக்கு உதவவேண்டிய தமிழனே உதாசீனப்படுத்துகிறான். இவர்களுக்கு இரக்கமே இல்லையா? அவன் வாழ்வு இருண்டு கிடக்கின்றது.

எங்கெல்லாம் தமிழர்கள் ஓட - இங்கு
எத்தரின் சூழ்ச்சிகள் ஆட
பங்கமில் நமதினம் வாட — நாம்
பஞ்சணை உறங்கிட லாமா?

ஷெல்லடி விழுந்துமே சிதற — உடல்
சிதறியே உயிரினம் கதற
இல்லிடம் தேடியே ஓடும் - தமிழ்
இளைஞரின் இழிநிலை பாடு.

புதுயுகம் காணுவம் வாடா - இந்தப்
போலிகள் நடுங்கிட வாடா.
எதுவந்து எமை எதிர்த்தாலும் -அதை
எதிர்கொண்டு வெல்லுவம் வாடா.

- கேணிப்பித்தன். -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவித்த முயலடிப்போர்

அதிகாலைப் பொழுதின் அமைதியைக் கலைப்பது போல் அந்தச் செய்தி புயலைக் கிளப்பி விட்டிருந்தது. தேர்தலுக்குப் பிறகு யுத்தநிறுத்தத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்தானது. இந்த ஒரு வருட கால இடைவெளியில் குண்டுச் சத்தமும் இல்லை. உயிர் இழப்புக்களும் இல்லை. வடக்கு கிழக்கு மாகாண மக்கள் புக்காராவுக்கோ, ஹெலி, கிபீர் விமானங்களுக்கோ பயந்து ஓடி ஒழியவும் இல்லை. வெளிநாடுகளில் தஞ்சம்கோரி ஓடவுமில்லை. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டும் என்றே சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களும் ஏங்குகின்றார்கள்.

ஆழ்ந்த தியானத்தில் இருந்து இப்போதுதான் பொன்னம்பலத்தார் மீண்டிருந்தார். அவர் தியானத்தில் அவ்வளவு நம்பிக்கை கொண்டவரல்ல. ஆனால் மனச்சாந்தியை என்று தொலைத்தாரோ அன்றிலிருந்து இந்த தியானந்தான் அவருக்கு நிம்மதியை இப்போது அளித்துக் கொண்டிருக்கிறது. தியானத்தை முடித்துக் கொண்டு மனதை தன்வயப் படுத்தித் தனது மௌனத்தைக் கலைத்து வெளியில் வந்தார். வீதியில் சனங்களின் ஆரவாரம் அவரது கவனத்தை ஈர்த்தது. காது கொடுத்துக் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த நாசாமாப் போனவங்களால்தானே நாடே குட்டிச்சுவராய்ப் போனது. அகதி வாழ்க்கை எங்கட சொந்தமாய் போச்சுது. இன்னும் இவங்களுக்குப் புத்தி வரவில்லையா?"

அபிராமி ஆச்சி தொண்டை கிழியச் சத்தமிட்டாள். அவளது ஆத்திரம் நியாயமானதுதான். சனங்கள் கூட்டங் கூட்டமாய்க் கூடிநின்றனர். தம்பலகாமம் பழம் பெரும் கிராமம். அந்தக் கிராமத்தின் ஒரு பகுதிதான் புதுக்குடியிருப்பு. புதுக்குடியிருப்புத் தெருவெங்கும் சனக்கூட்டம். பொன்னம்பலத்தார் வீடும் புதுக்குடியிருப்பில்தான் இருந்தது. ஒரு காலத்தில் மாளிகை போன்ற அவரது வீட்டில் நித்தமும் சனம் நிறைந்து வழியும். அவரது கட்டளைக்காக எவ்வளவு பேர் காத்திருந்தனர். அரச உத்தியோகத்தில் இருந்தவர். ஆனால் இன்று எல்லாம் பாழாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டது. அந்த வீடும் அழிக்கப்பட்டு விட்டது. அது தன் சோபையை இழந்து விட்டது. ஒரு குடிசையைப் போட்டுக் கொண்டு குந்தி இருக்கிறார். பயங்கரவாதக் கட்டவிழ்ப்பினால் எல்லாவற்றையுமே இழந்து விட்டார். அவரைப் பொறுத்த வரைக்கும் உலகமே இருண்டு விட்டது வீட்டுக்கு விளக்கேற்றிய மனைவி மாணிக்கமும் போய்ச் சேர்ந்துவிட்டாள். ஒண்டிக் கட்டையான அவருக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. ஒரே மகளின் அன்புப் பார்வை ஒன்றுக்காகவே உயிர்பெய்து கிடக்கிறார்.

மெண்டிஸ் சைக்கிளில் சவாரி வந்தான். அப்துல்லாவும் மரக்கறி விற்பதற்காகச் சைக்கிளில் வந்தான். இருவரும் பொன்னம்பலத்தாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். குடும்பத்தவர்களோடு பொன்னம்பலத்தார் வீட்டுக்கு எத்தனைமுறை வந்திருப்பார்கள். அவரது மனைவியின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியிருப்பார்கள். புதுக்குடியிருப்பு வரும்போதெல்லாம் அவரைச் சந்திக்காமல் செல்வதில்லை. இருவரையும் கண்டு கொண்ட பொன்னம்பலத்தார் படலையைத் திறந்து கொண்டு வந்தார். மெண்டிஸ் சைக்கிளை விட்டு கீழே இறங்கினான்.

''மெண்டிஸ்! என்ன தெருவெல்லாம் சனமாயிருக்கு... ஏதும் பிரச்சனையா?" தெருவைப் பார்த்தவாறு கேட்டார்.

''என்ன பிரச்சனை... வேலைவெட்டி இல்லாத ஜென்மங்கள்... இவங்களை என்ன செய்வது. நிம்மதியா மக்கள இருக்க விடமாட்டாங்க."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெண்டிஸ் அலுப்போடு பதில் சொன்னான். அப்துல்லா விளக்கமாகச் சொன்னான்.

''ஐயா புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராக வாகனத் தொடரணி திருகோணமலையில் இருந்து கொழும்புக்குச் செல்லப் போகுதாம். இப்ப இடையில் வந்துகொண்டிருக்கும்,'' பொன்னம்பலதார் உசாரானார்.

''என்ன தொடரணியோ எதால போகுதாம்?''

''இந்தக் கண்டி ரோட்டாலதானே போகும்.''

அவ்வளவுதான். பொன்னம்பலத்தாருக்குக் கண்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன. நெஞ்சு படபடத்தது. சற்று நேரம் ஆடிப்போய் விட்டார். பட்டவர்களுக்குத்தான் அதன் தாக்கம் புரியும். அவர் போரின் கொடுமையை அனுபவித்தவர். அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்.

''எவன்ரா அவன் கண்டனப் பேரணி நடத்துறவன். பார்க்கிறன் ஒரு கை'' சட்டென்று வீட்டுக்குள் புகுந்தார். கையிலே ஒரு அரிவாள். அவர் உடலிலே சன்னதம்... கத்தியோடு வெளியில் வந்தார். அவரைப் பார்க்கவே பயமாக இருந்தது. முகம் விகாரமடைந்து உடல் கொதித்தது. படலைக்கு ஒரு உதை விழுந்தது. படலை பிரிந்து சரிந்து கிடந்தது. வெளியில் பாய்ந்து வந்தார். புதுக்குடியிருப்புச் சந்தியை நோக்கி விரைந்தார். அது நடையும் ஓட்டமும் இல்லாத பாய்ச்சல்.

''ஐயா..!ஐயா... கொஞ்சம் நில்லுங்க....'' மெண்டிஸ் சத்தமிட்டான். பலர் அவரைப் பின்தொடர்ந்து ஓடினர். அவருக்குப் பின்னால் பெருங்கூட்டம் திரண்டு ஓடியது. சைக்கிள்களை அப்படியே போட்டு விட்டு மெண்டிஸோடு அப்துல்லாவும் ஓடினான். பொன்னம்பலத்தார் சந்திக்கு வந்துவிட்டார். அது கண்டி வீதியைத் தொடும் சந்தி. சந்தியில் பெரியதொரு புத்தர்சிலை. தமிழ் பிரதேசங்களின் பெரும்பான்மை மக்கள் குடிறேம் இடமெல்லாம் பகவான் புத்தரும் அமர்ந்து விடுவார். அந்தப் பெரிய சிலை இராணுவத்தாரால் தொண்ணூறில் வைக்கப்பட்டதாகும். அந்த இடத்தைப் பதின்மூன்றாம் கட்டைச் சந்தி என்றுதான் இன்னமும் சொல்வார்கள். சந்தியில் பெரிய கூட்டம் நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலத்தாரோடு பேசுவதற்கு யாருக்கும் தைரியம் வரவில்லை.

மெண்டிஸ் பொன்னம்பலத்தார் பக்கத்தில் நின்றான். அப்துல்லாவும் வந்து விட்டான். ''ஐயா என்னையா நீங்க. அவங்கதான் அப்படி என்றால் நீங்களுமா?'' மெண்டிஸ் குழைந்தான். பொன்னம்பலத்தார் ஒரு பார்வை பார்த்தார். அவரது பார்வை அவனைப் பொசுக்குவதுபோல இருந்தது. அப்துல்லாவும் சேர்ந்து கொண்டான்.

''ஐயா நாங்க பொறுமையாக இருக்கவேண்டிய காலம் இது. யோசித்துப் பாருங்க'' அப்துல்லாவைத் திரும்பி அதே பார்வையைத் திருப்பினார். அந்தப் பார்வையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவரது உள்ளக் குமுறலை அவன் நன்கு தெரிந்தவன். அவர் பதறினார். அழுகையும் கண்ணீருமாகக் கதறினார்.

''எதைப் பொறுப்பது. எதை யோசிப்பது? என்ர பிள்ளையைப் பறிகொடுத்தேனே! அதைப் பொறுப்பதா? இவங்கட அட்டகாசத்தைப் பார்த்தும் பொறுமையாக இருக்கிறேனே! அதை யோசிப்பதா? இருக்கிறது ஒரே உயிர். நல்ல காரியத்துக்கு அதுவும் போகட்டும்.'' ஆவேசத்தோடு பேசினார். அனுபவப் பட்டவர்களுக்குத்தான் அதன் தாற்பரியம் தெரியும். உணர்ச்சி வசப்பட்டு அழத்தொடங்கி விட்டார். அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''பேய் மெண்டிஸ்! உனக்கு தெரியாதாடா? பேச்சு வார்த்தை என்று ஏமாந்து போனோமே! அப்ப என்ன நடந்தது? ஊர்மனைகள் அழிந்தன. அகதிகளாகி எங்கெல்லாம் அலைந்தோம். எங்கட பிள்ளைகள் சொந்த நாட்டை விட்டு வெளிநாடுகளில் தவிக்குதுகளே. எல்லாத்தையும் தொலைத்து விட்டோம். எத்தனை இளைஞர்களைப் பலிகொடுத்து விட்டோம். இந்த முறையும் தவறினால் அந்த அழிவை யாராலும் தடுக்க முடியாது. இவங்க தங்களது பிள்ளைகளையும் போர் முனைக்கு அனுப்பட்டும். அனுப்புவாங்களா? அவங்களும் போகட்டும். போவாங்களா? செய்ய மாட்டாங்கள். அப்பாவிக் கிராமத்து ஏழைகளின்ர பிள்ளைகளைப் பலிக் கடாக்களாக்கி உல்லாசமாக வாழ்வாங்க. சுயநலத்துக்காக எதையும் செய்வாங்க. இவங்க செய்யிறதப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறதா? பொது மக்கள்தான் இவங்களைத் தட்டிக் கேட்கணும்.'' அவரின் உள்ளத்தின் அடியிலிருந்து சொற்கள் பாய்ந்து வந்தன. அவரது கண்களில் இருந்து தாரைதாரையாகக் கண்ணீர் ஊற்றெடுத்து வந்தது. மெண்டிஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்தான். பொன்னம்பலத்தாரின் மனவேதனையையும் எண்ணிப் பார்த்தான். அவன் மனதில் அந்த நிகழ்வு இறுகிக் கனத்தது. அன்று அவனும் பொன்னம்பலத்தாரோடுதான் இருந்தான்.

பொன்னம்பலத்தாரின் ஒரே மகன் அருட்செல்வம். பெயருக்கேற்ற பிள்ளை. எந்த நேரமும் சிரித்த முகம். படிப்பிலும் கெட்டிக்காரன். உயர்தரப் பரீட்சை எடுத்து விட்டு வீட்டுக்கு வந்திருந்தான். அந்தக் கொடிய போர்க் காலம் தமிழ்க் கிராமங்களை அழித்துக் கொண்டிருந்தது. தம்பலகாமம் மட்டுமல்ல திருகோணமலையின் தமிழ் கிராமங்கள் அனைத்தும் பயத்தில் மூழ்கிக் கிடந்தன. இளைஞர்கள் இரவு நேரங்களைக் காடுகளில் கழித்தனர். பகலில் வீட்டுக்கு வந்தாலும் சுற்றி வளைப்புக்களால் வதைக்கு உள்ளானார்கள். அன்றும் அப்படித்தான். கோழிகள் கூவின. மெல்ல இருள் கலையத் தொடங்கி இருந்தது. அருட்செல்வம் நேரத்தோடு விழித்துக் கொண்டான். அவனுக்கு வயலைப் போய்ப் பார்த்து வரவேண்டும்போல் இருந்தது. முதல்நாளே பார்த்திபனோடு பேசி வைத்திருந்தான். விடிந்ததும் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு புறப்பட்டான். பொன்னம்பலத்தார் கண்டுவிட்டார்.

''தம்பி! எங்க புறப்படுறாய், இன்னும் நல்லா விடியல்ல''

''அப்பா, நான் வயலைப் பார்த்துத் தண்ணியைக் கட்டி விட்டு வாறன். வயலைப் பார்க்க ஆசையாகக் கிடக்கு. பார்த்திபனும் என்னோட வாறான். எட்டு மணிக்கு முதல் வந்திருவன்.'' கூறிக்கொண்டே அம்மா கொடுத்த தேநீரைக் குடித்தான். பொன்னம்பலத்தாரின் வயல், வீட்டில் இருந்து சற்றுத் தூரத்தில் இருந்தது. அவருக்கு மகனை அனுப்ப மனமில்லைதான். அவனைத் தடுத்து நிறுத்தவும் முடியாது. அவரது மனம் கலங்கியது. என்ன செய்வதென்று தெரியாது தடுமாறினார். அவனின் செயல்களை மனதார ஏற்று ரசிப்பவர். அவனது செயல்கள் புத்திசாலித்தனமானவை. அவனது எதிர்காலம் பிரகாசிக்கும் என்று இறுமாந்து இருப்பவர். மகனின் முகத்தைப் பார்த்தார். அவனுக்கே உரித்தான அந்தச் சிரிப்பை உதிர்த்து விட்டான். பொன்னம்பலத்தார் கிறங்கிப் போனார்.

''தம்பி! உன்னை என்னால் தடுக்கவும் முடியாது. இப்ப ஊர் முன்போல இல்லை. எங்க என்ன நடக்குமென்று தெரியாது. சரி சரி கெதியா வந்திரு சரியா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி அப்பா.... அம்மா!.... நான் போய்வாறன்.'' உரத்துக் கூறிவிட்டு புறப்பட்டு விட்டான்.

பொன்னம்பலத்தார் கிணற்றடிப்பக்கம் போய் வந்தார். அவரது அலுவலகம் வீட்டோடுதான் இருந்தது. தனது அன்றாட வேலைகளுள் ஆழ்ந்து விட்டார். மெண்டிஸ் வந்து அவருக்கு வேலைகளில் உதவினான்.

பார்த்திபன் வழியில் எதிர்ப்பட்டான். இருவரும் சேர்ந்து வயல் பக்கம் பறந்தார்கள். பரீட்சை முடிந்ததும் வயலில் காலாற நடக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தான்.

''டேய் பார்த்திபன் திருகோணமலை நகரில் இந்தச் சுகமும் சுதந்திரமும் கிடைக்காது. பாடசாலை விட்டால் ரியூசன். ரியூசன் விட்டால் பாடசாலை. அந்த வாழ்க்கை வட்டத்திலிருந்து 'விட்டு விடுதலையாகி' தம்பலகாமம் வயல்வெளி வரம்புகளில் நடந்து திரிவது சுகமானது'' போகும்போது அருட்செல்வம் பார்த்திபனோடு பேசிக் கொண்டு சென்றான்.

வயலைப் பார்த்ததுமே மெய்மறந்து ரசித்தான். வேளாண்மைப் பயிர் இளங் காற்றில் பட்டாம் பூச்சிகளாகப் படபடத்தன. சைக்கிளை வயலிலுள்ள மாலினுள் கப்பில் சரித்துச் சாத்திவிட்டு வயல் வரம்புகளில் சுற்றிப் பார்த்து வந்தான். பின்னால் பார்த்திபன் சிரித்துக் கதைத்து வந்தான். எதிர்பாராத விதமாக அது நடந்தது. அருட்செல்வும் கதிகலங்கிப் போனான். வயலருகில் இருந்த புதர்கள் அசைந்தன. அதனுள் பதுங்கி இருந்த இராணுவச் சிப்பாய்கள் இவர்களைச் சூழ்ந்து விட்டனர். அவர்கள் கைகளில் துப்பாக்கிகள். துப்பாக்கிகள் இவர்களைக் குறிபார்த்த வண்ணம் இருந்தன. பயத்தால் நடுங்கினர் ஓடவும் முடியாது.

''அடோவ் என்னடா பார்க்கிறது. கொட்டி வறேன்லா...'' இராணுவச் சிப்பாய்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் நிறை போதையில் இருந்தனர். சிலர் இவர்களைப் பார்த்து நக்கலாகச் சிரித்தனர். சிங்களத்தில் கதைத்துக் கொண்டனர். அருட்செல்வம் அவர்களிடம் கெஞ்சினான்.

''நாங்க ஸ்ருடன்ஸ். ஏ.எல். எக்சாம் எடுத்துட்டு வயல் பார்க்க வந்தனாங்க. எங்கள விட்டு விடுங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்க ஸ்ருடன்ஸ்.. வறேன்லா... கொட்டிலா... ஒக்கமட்ட... பாடமக் தென்னம்'' முரட்டுச் சிப்பாய் நக்கலடித்தான். கிட்ட வந்து ஓங்கி இருவருக்கும் கன்னத்தில் அறைந்தான். முன்னால் நின்றவன் திருப்பித் துப்பாக்கியின் அடிப் பாகத்தால் அடித்தான். அருட்செல்வம் கீழே விழுந்தான். அவனைப் பார்த்திபன் தாங்கிப் பிடித்தான். அடுத்த அடி இருவருக்கும். அடிமேல் அடி விழுந்தது. துடித்துப் போனார்கள். எழுந்த அருட்செல்வத்துக்கு அதிர்ச்சிமேல் அதிர்ச்சி. அவன் கண்முன்னே பல இளைஞர்கள். பின்புறமாகக் கைகளைச் சேர்த்துக் கட்டப் பட்டிருந்தனர். இன்னும் பலரைத் தள்ளிக் கொண்டு வந்தனர். சுமார் இருபது இளைஞர்கள். எல்லோரும் மாணவப் பருவத்தினர். நகரில் படிப்பவர்கள். வயலைப் பார்ப்பதற்காக வந்தவர்கள்.

''அடோவ்... நடங்கடா... அந்தப் பக்கம்.'' ஒருவன் வழியைக் காட்டினான். அது ஒரு திடல்வெளி. வயலில் அருவி வெட்டு முடிந்ததும் அந்தத் திடலில்தான் சூடு மிதிப்பார்கள். வேலிக் கட்டைகள் தெரிந்தன. அந்தப் பெரிய வேலிக் கட்டைகளைக் காட்டினான் ஒருவன்.

''டேய் அதைப் பிடுங்கித் தூக்கிட்டு வாங்க.'' ஓடவும் வழியில்லை. சுற்றி இராணுவம். பிடுங்கித் தூக்கிக் கொண்டு நடந்தார்கள். இப்படிப் பல இளைஞர்கள். யேசுவைப் போல் வேலிக்கட்டைகளைச் சிலுவைகளாகச் சுமந்துகொண்டு வந்தனர். தங்களை விட்டுவிடுவார்கள் என்ற நப்பாசையில் சொல்வதை எல்லாம் செய்தார்கள். சிலுவையை தாங்கிச் சுமந்து வந்த யேசுவை அந்த சிலுவையில் அறைந்ததும் மனிதர்கள்தானே. தூக்கி வந்த கட்டைகளைக் குவிக்கும்டி துப்பாக்கி முனையில் கட்டளை இட்டனர். அடிமைகள்போல் சொன்னதைச் செய்யும் துர்ப்பாக்கிய நிலை தமிழ் இளைஞர்களுக்கு வந்து சேர்ந்து விட்டதை உணர்ந்து கொண்டனர். தடியன் ஒருவன் ஓடி வந்தான்.

''அடோவ்... மெத்தன போலிம இன்ட... இப்பிடி நில்லுங்க....'' என்று சொல்லி அவர்களைப் பிடித்து வரிசையில் நிற்கப் பணித்தான். அப்படியே அவர்கள் நின்றார்கள். ''அடோவ் முன்னால் பார்த்து நில்லுங்கடா'' கட்டளை வந்தது. இந்த அப்பாவிகள் முன்னால் பார்த்தபடி நின்றார்கள். அவர்களுக்கு முன்னால் தம்பலகாமத்தின் வயல்வெளி பரந்து கிடந்தது. இப்போது இராணுவத்தார் அவர்களின் பின்புறமாக நின்றனர். அந்த இளைஞர்கள் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்காதது நடந்து விட்டது. பின்புறம் இருந்த அந்த இனவாதிகளின் துப்பாக்கிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்தன.

''ஐயோ... அம்மா....''

இளைஞர்களின் ஜீவமரணப் போராட்ட ஒலி காற்றில் கரைந்து வானில் பரந்தது. துடிதுடித்து வீழ்ந்து புரண்டனர். இளம் இரத்தம் சீறிப் பாய்ந்து அந்த மண்ணைக் குளிரச் செய்தது. மண்ணில் ஊறி உரமாகி ஊன்றி விதையாகி விட்டது. அவர்களது உடல்கள் சிதறிக் கிடந்தன. வெடிச் சத்தங்கள் ஊரைக் கலங்கச் செய்தது. எங்கும் நாய்களின் ஊளைச் சத்தம். வெடிச்சத்தம் கேட்டு பொன்னம்பலத்தார் பதறித் துடித்தார். ஓடோடி வந்தார். தொடர்ந்து ஊர்ச் சனங்களும் வந்தனர். இராணுவத்தினர் ஒருவரையும் அந்த இடத்திற்கு அனுமதிக்கவில்லை. வீழ்ந்த சடலங்களில் இருந்து ஜீவமரணப் போராட்ட ஒலிகள் எழுந்தன. முனகல் சத்தம் மெதுவாகக் குறைந்தது. உடல்களை இராணுவத்தார் இழுத்து வந்தனர். சடலங்களையும் வேலிக் கட்டைகளையும் கலந்து அடுக்கினர். கூடவே கொண்டுவந்த பழைய ரயர்களையும் போட்டு பெற்றோலை ஊற்றித் தீ இட்டுக் கொழுத்தினார்கள். இராணுவச் சிப்பாய்கள் நிறை போதையில் ஆடிப் பாடிக் ''கொட்டியா இவறாய்'' எனச் சத்தமிட்டனர். இனவெறியுடன் அனுப்பப்பட்ட இராணுவத்துக்கு கண்ணில் படும் தமிழ் இளைஞர்கள் அனைவரும் புலிகள்தான்.

தீ சுடர்விட்டு எரிந்தது. மனித உடலில் தீ பற்றிக் கொண்டால் என்னமாதிரி எரிகிறது. இராணுவத்தார் தங்கள் வேலைகளை முடித்த பின்னர்தான் அவர்களது வாகனம் வந்தது. காவலுக்கு நின்ற இராணுவத்தினரும் வாகனத்தில் ஏறிக் கொண்டனர். இராணுவம் சென்று விட்டது. சனங்கள் ஓடிப்போனார்கள். பொன்னம்பலத்தார் ஓடிப் போகுமுன் அப்பாவி இளைஞர்களது உடல்கள் எரிந்து விட்டிருந்தன. ஊர்ச் சனங்கள் திரண்டு வந்தனர். எத்தனையோ பெற்ற மனங்கள் துடித்தன. அருட்செல்வத்தின் ஒரு கால்பாதம் மட்டும் மிச்சமாகி எரிந்து கொண்டிருந்தது. காலையில் வயலுக்கு அனுப்பிய மகன் மதியமாவதற்கு முன் சாம்பராய் போவான் என்று பொன்னம்பலத்தார் நினைத்திருக்கவில்லை. அவர் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

இந்த நாட்டு தமிழ் இளைஞர்களுக்கு இந்த நாட்டு அரசு கொடுக்கும் பரிசு இது. அவர் மட்டுமல்ல பிள்ளைகளைப் பறிகொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற மனங்கள் துடித்த துடிப்பு நெஞ்சைப் பிளந்து இதயத்திலிருந்து இரத்தத்தை கசிய வைத்தது. அன்றிலிருந்து அவர் நடைப்பிணமாகி விட்டார். மகனை இழந்த சோகத்தில் தாய் மாணிக்கம் கொஞ்ச நாட்களில் சாவை அணைத்து விட்டாள். பார்த்த அரசாங்க வேலையையும் பொன்னம்பலத்தார் உதறித் தள்ளி விட்டார். இன்று அவர் தன்னை மறந்து உடலால் உலாவுகிறார். இன்று இலங்கையில் பேரினவாதிகளினால் எத்தனை தாய் தந்தையர் செத்துக் கொண்டிருக்கிறார்கள். மெண்டிஸ் உள்ளம் வெந்து கொண்டிருந்தது. அவனது கண்களிலும் கண்ணீர் அலைமோதியது. பொன்னம்பலத்தாரைப் பார்த்தான்.

அவரைப் பார்க்கும் திராணி அவனிடம் இல்லை. அவரது அந்தச் செயல் சரியாகவே பட்டது. 'இந்த நாட்டில் பேரினவாத ஜனநாயக ஆட்சி ஒழிக்கப்பட வேண்டும். அது இருக்கும்வரை சுயநலக் கும்பல்களின் அட்டகாசம் தொடரத்தான் செய்யும்.' இப்போது அவனும் பொன்னம்பலத்தாரோடு சேர்ந்து அணிதிரண்டுவிட்டான். அப்துல்லாவும் இணைந்து விட்டான். பெரியதொரு கூட்டம் புரிந்துணர்வுக் கண்டன ஊர்வலத்தைத் தடுக்கத் திரண்டு விட்டது.

''இங்கே நடந்துகொண்டிருப்பது ஜனநாயகத்தின் பெயரால் நடக்கும் பித்தலாட்டம். அரசியலை வைத்து வியாபாரம் நடத்தும் முதலாளிகளின் அடாவடித்தனம். மக்கள் அரசியல் முதலைகளை அடையாளம் கண்டு விரட்டும் நாள்தான் இந்த நாட்டின் 'சுதந்திர நாள்.' அதுவரை அருட்செல்வங்கள் மட்டுமல்ல அரவிந்த, அமானுல்லா போன்ற எல்லா இளைஞர்களும் பலிக் கடாக்களாகத்தான் வேண்டும்."

மெண்டிஸ் மனதில் சம்மட்டியால் ஓங்கி அடிப்பது போன்ற ஒலியலைகள் ஒலித்தன. அவன் வேதனையுள் சிக்கி விட்டான். ஓடிப்போய் பொன்னம்பலத்தாரைக் கட்டிப்பிடித்துத் தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டான். அவனைப் பார்த்து அனைவரது கண்களும் கலங்கின. பொன்னம்பலத் தாரின் உணர்வுகள் நியாயபூர்வமானது என ஏகோபித்து நின்றனர்.

திருகோணமலையில் இருந்து தம்பலகாமம் நோக்கி வஸ்வண்டி வந்தது. அதிலிருந்து செல்லையா இறங்கி பொன்னம்பலத்தார் பக்கம் ஓடோடி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘நான் இப்பதான் திருகோணமலையில் இருந்து வாறன். புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிரான கண்டனப் பேரணியை பொலிஸார் கலைத்து விட்டார்கள். ஒரு நாலைந்து பேர்களின் சதி நாடகமிது.” ஒரு ஏளனத்தோடு சொன்னான். பொன்னம்பலத்தாரின் ஆத்திரம் அடங்கிப் போய்விட்டது.

‘‘இனிமேலும் நாங்கள் பொறுத்திருந்தால் தவித்த முயலடிக்கும் பச்சோந்திகள் மடம் பிடுங்கி விடுவார்கள். இந்த நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற அணிதிரள வேண்டும்.” கூறிக்கொண்டு தம்பலகாமம் சந்தியிலிருந்து புதுக்குடியிருப்பை நோக்கி நடந்தார். அவர் பின்னால் மெண்டிஸ் தொடர்ந்தான். கூட்டம் அமைதியாகச் சென்றது. வீட்டுக்குள் சென்றதும் அமைதியாகித் தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

தினக்குரல் 31.08.2003

மனிதர்கள் யாவரும் சமமே
மரணமும் ஜனனமும் சமமே.
புனிதர்கள் சொன்னவை கேட்போம்.
புனிதராய் மனிதராய் வாழ்வோம்.

யுத்தம் இல்லாத உலகம்
நித்தம் நமக்கிங்கு வேண்டும்.
சித்தம் தெளிந்துநாம் வாழ்ந்தால்
சொர்க்கம் அதையிங்கு காட்டும்.

- கேணிப்பித்தன்.-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரன்போர்.



"ஏய் .. பரமசிவம்.. உன்னைத்தான்.. நில்லு.." சைக்கிளில் போய்க் கொண்டிருந்த பரமசிவம் சைக்கிளை நிறுத்தினான். சத்தம் வந்த பக்கம் பார்த்தான்.

"அட.. சங்கரன். எப்படி.. சுகமாய் கிடக்கிறாயோ."?.

"ஏதோ கிடக்கிறன். கனநாளாக் காணேல்ல. எங்க கந்தோருக்கா".?

"ஓம்.. சங்கரன் .. நேரமில்ல. நின்று கதைக்க.. எங்கட ஏ.ஓ. ஒரு கொதியன். சிவத்தக் கோடு கீறிப்போடுவான். நான் வரட்டா.."

சைக்கிளில் ஏறப் போனவனைச் சைகையால் நிறுத்தி "உங்கட கந்தோரைப் பற்றி போன கிழமை ஒரு கதை படிச்சனான்."

"எங்கட கந்தோரைப் பற்றியா..? அப்படி இருக்காதே."

"பொதுவா எல்லாக் கந்தோருக்கும் பொருத்தமானதுதான். உங்கட கந்தோருக்கு மிகப் பொருத்தமனது."
சங்கரன் கூறி முடிக்க வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்படி என்ன கதை..? பேப்பரிலயா.. எப்ப பார்த்தநீ..? எந்தப் பேப்பர்ல?”

பரமசிவம் விபரம் கேட்டான். அவனுக்கு அதை அறிய ஆசை. ‘‘போன கிழமையென்றுதான் நினைக்கிறன்..ஒரு ஞாயிற்றுக் கிழமைப் பேப்பர்லதான்.. பேப்பர் நினைவில்லை. பிறகு பார்த்துச் சொல்லுறன்” சங்கரன் கூறமட்டும் பரமசிவம் காத்துக் கொண்டு நிற்கவில்லை. சைக்கிளைத் தள்ளி ஏறிக் கொண்டான்.

“இஞ்ச சங்கரன் கோவிக்காத .. நான் வாறன்.” சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

கையெழுத்துப் போட்டதும் நேராக ‘நூலகம்’ என்று எழுதியிருந்த அறையுள் நுழைந்தான். அறை சிலந்தி வலையால் சோடிக்கப் பட்டிருந்தது. இடைவேளை நேரத்தில் இங்கு எப்போதாவது ஒருசிலர் பத்திரிகை படிக்க வருவார்கள். அவ்வளவுதான்.

அடிக்கியிருந்த பேப்பர் கட்டைத் தேடிப் பிரித்தான். ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியாகும் பத்திரிகைகளை வேறாக எடுத்தான். ஒவ்வொன்றாக விரித்துப் பார்த்துக் கொண்டு வந்தான். ஒரு கதை கண்ணில் பட்டது. இரண்டு கிழமைக்கு முன் வந்திருக்கு. ‘இதாத்தான் இருக்கவேண்டும்.’ அவன் மனம் துணிந்து கொண்டது. அதை எடுத்துக் கொண்டான். பெரியதொரு கண்டு பிடிப்பை கண்டுவிட்ட சாதனையில் அவன் இருந்தான். அவனுக்கு வாசிக்கப் பொறுமையில்லை. நேரே ஏ.ஓ. விடம் வந்தான். ஏ.ஓ. சிங்காரம் கோவைகளுள் மூழ்கி இருந்தார். அவரைக் கோவைகள் திரையிட்டு மூடியிருந்தன.

எந்தக் கோவை வந்தாலும் அதில் ‘பிளீஸ் ஸ்பீக்’ என்று எழுதுவது பணிக்கப் பட்ட கடமையாகி விட்டிருந்தது. ‘பிளீஸ் ஸ்பீக்’ என எழுதுவதில் ஈடுபட்டிருந்தார். அதன் கீழ் எம்.டி.கையெழுத்தை மட்டும் போடுவார். கோவைகள் உறங்கி விடும் மக்களின் கோரிக்கைகளும் சேர்ந்து முடங்கிவிடும். பரமசிவம் கொண்டுவந்த பேப்பரை சிங்காரத்தின் மேசையில் பரத்தி விட்டான். குனிந்திருந்த சிங்காரம் கோபாக்கினியில் மூழ்கி மூக்குக் கண்ணாடி ஊடாக நக்கீரப் பாரவையை வீசினார். “என்ன விளையாடுறாயா? உங்களுக்குக் கொழுப்பு மெத்திப் போச்சு என்ன? இப்ப பேப்பர் பார்க்கிற நேரமா?” சிங்காரம் கோபக் கனல் வீசிக் கொட்டித் தீர்த்தார். அந்தப் பார்வை அவனைச் சுட்டெரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படிப் பார்க்காம.. இந்தப் பேப்பரைப் பாருங்க.. இதில என்ன எழுதிக் கிடக்கு.."

சிங்காரத்தின் பார்வை தணிந்து பேப்பரை நோக்கி நகர்ந்தது. ஒரு வெற்றிப் புன்னகையுடன் அந்தக் கதையைச் சுட்டு விரலால் குத்திக் காட்டினான். கதைக்கேற்ற படமும் தெரிந்தது. கதையைப் படிக்கச் சிங்காரத்தின் இதயம் துடித்தது. கண்கள் கதையை மேய்ந்தன. அலுவலக நேரத்தில் அவர் பேப்பர் படிக்கிறதே இல்லை. அந்த நேரம் பார்த்து தொலைபேசி மணி ஒலித்தது. திடுக்குற்று றிசீவரை எடுத்தார். அதில் பிரதி மனேஜிங் டிரெக்ரர் சுந்தரேசனின் குரல் ஒலித்தது.

"ஏ.ஓ. கொஞ்சம் வாறீங்களா?"

பேப்பரையும் கையில் எடுத்துக் கொண்டு விரைந்தார்.

"மோர்ணிங் சேர்." சிங்காரம் பணிவாகக் குழைந்தார்
"மோர்ணிங்.. வாங்க .. என்ன பேப்பரும் கையுமாய் ..ஏதும் விஷேசமா?"

சுந்தரேசன் ஒரு புன்னகையோடு பீடிகை போட்டார்.

"இதைப் படித்துப் பாருங்க. "

பரமசிவத்தின் பாணியில் பேப்பரை சுந்தரேசன் மேசையில் பரத்தினார். சுட்டு விரலால் கதையைக் குத்திக் காட்டினார். சுந்தரேசனுக்கு ஒன்றும் புரிய வில்லை. அவரது கண்கள் விரிந்து சுழன்றன. மேலோட்டமாகக் கதையை கண்கள் மேய்ந்தன. வாசிக்கும் போது அவரது முகத்தில் மாற்றம் உருவாகியது. அதனை சிங்காரம் அவதானிக்கத் தவறவில்லை. அவரது கண்கள் சிவந்தன. நிமிர்ந்து சிங்காரத்தைப் பார்த்தார்.

"ஏ.ஓ.. இவங்கள சும்மா விடக்கூடாது. இதைப் போட்டோப் பிரதி எடுத்து வாங்க .. ஒரு கை பார்ப்போம். எம்.டி. யிடம் கூறி இவர டிஸ்மிஸ் செய்ய வேணும். எம்.டி. யைத்தான் கூடாம எழுதியிருக்கிறாங்க."

பேப்பரை ஏ.ஓ. விடம் நீட்டினார். ஏ.ஓ.. வின் உள்ளத்தில் குதூகலிப்புக் கும்மாளமிட்டது. விரைவாக நடந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏ.ஓ .." சுந்தரேசன் குரல் ஒலித்தது.

ஏ.ஓ நின்று திரும்பினார்.

"அப்படியே டிஸ்மிஸ் கடிதத்தையும் ஒழுக்கக் கோவையைக் காட்டித் தயாரியுங்க."

கட்டளையிட்டு விட்டு நிமிர்ந்தார். அவரது உதடுகளில் வெற்றிப் புன்னகை கூத்திட்டது.

சிற்றூழியன் சின்னத்தம்பி அழைக்கப்பட்டான். "சின்னத்தம்பி.. இந்தக் கதையைப் போட்டோப் பிரதி எடுத்திட்டு வா."

பேப்பர் சின்னத்தம்பியின் கைக்கு மாறியது. அவன் விரைந்தான். அவனுக்கு நேரே கந்தப்பு வந்து கொண்டிருந்தான்.

"சின்னத்தம்பி என்னடா.. பேப்பரோட .." இடைமறித்த கந்தப்பு கேட்டான்.

"இதைப் போட்டோப் பிரதி எடுக்கப் போறன்." பேப்பரைக் காட்டிக் கூறினான்.

"அதில என்னடா கிடக்கு.."

"எனக்கென்ன தெரியும்.. சொன்னதச் செய்ய வேண்டியது என் கடமை."

"காட்டு பார்ப்பம்." கந்தப்பு கேட்டான். சின்னத்தம்பி பேப்பரை விரித்துக் காட்டினான்.

"அட போனவாரச் சிறுகதை. இரண்டு மூன்று பிரதிகள் கூட எடு. படித்துப் பார்ப்பம்."

கந்தப்பு கூறிவிட்டுத் தன் வேலையில் ஈடுபடச் சென்றுவிட்டான்.

சின்னத்தம்பி போட்டோப் பிரதியையும் பேப்பரையும் ஏ.ஓ. சிங்காரத்தின் மேசையில் வைத்தான். சிங்காரம் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கொண்டு சுந்தரேசன் அறைக்குச் சென்றார். சுந்தரேசன் அறையில் பிரிவுத் தலைவர்கள் கூடியிருந்தனர். அவர்களை சுந்தரேசன் அழைத்திருந்தார்.

"என்ன பிட்டிசமா.. இஞ்ச பிட்டிசத்துக்கு மட்டும் குறைவில்லை."

சத்தமிட்டவாறு கணக்காளர் கதிரவேல் பதறியடித்துக் கதவைத் திறந்து கொண்டு ஓடிவந்தார். சுந்தரேசன் தலைமையில் கதை விமர்சிக்கப் பட்டுக் கொண்டிருந்தது.

"எங்கட கந்தோரப் பற்றித் தாறுமாறாக இந்தக் கதையில கிடக்கு. இதுக்கு ஒரு முடிவுகட்ட வேணும். இந்தாருங்க.. இதைப் படித்துவிட்டு என்ன செய்ய வேணும் என்டு சொல்லுங்க..".

சுந்தரேசன் எல்லோருக்கும் போட்டோப் பிரதியைக் கொடுத்தார். வாசிக்கத் தொடங்கினார்கள். காசு கொடுத்துப் பேப்பர் வாங்கிப் படிக்காத அற்புதப் பிறவிகள். இன்றுதான் சிறுகதையைப் படிக்கிறார்கள்.

சுந்தரேசன் தொலைபேசி அலறியது. கையிலெடுத்துக் காதில் பொருத்தினார். அது வரவேற்பாளர் வனிதாவின் குரல்.

"சேர்.. எம்..டி.யைச் சந்திக்கச் சனங்கள் காத்து நிக்குதுகள். அனுப்பவா சேர்.."

"எம்.டி..லீவு என்று சொல்லும்"

" சொன்னேன் ..சேர்.. அவங்க.. அடம் பிடிக்கிறாங்க..".

சுந்தரேசன் குரலில் கடுமை தெரிந்தது.

"இப்ப.. இங்க.. முக்கியமான கூட்டம் நடக்குது. சந்திக்க ஏலாது என்று சொல்லி அனுப்பி விடும்."

சுந்தரேசன் தொலைபேசியை வைத்துவிட்டார். வனிதாவுக்கு ஆத்திரமாத்திரமாக வந்தது. இந்தச் சனங்கள் எவ்வளவு தொலைவில் இருந்து வாறாங்கள். எத்தனை சோதனைச் சாவடிகளையும் 'தடவுதல்களையும்' தாண்டி வந்திருக்கிறார்கள். அவர்களது குறைகளைக் கேட்டு ஒரு ஆறுதலாவது கூறாமல் இப்படிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்நெஞ்சர்களாக இருக்கிறார்களே. அவளது மனம் கேட்கவில்லை. மீண்டும் தொலைபேசி அழைப்பை முடுக்கினாள். மணி ஒலித்தது.

கணக்காளர் கதிரவேல் றிசீவரைத் தூக்கினார். மீண்டும் வனிதாவின் குரல்.

"சேர்.." அவளைத் தொடர்ந்து பேச கணக்காளர் அனுமதிக்கவில்லை.

"ஹலோ.. வனிதா.."

"சேர்.."

"எம்.டி. இன்றைக்கு யாரையும் சந்திக்க மாட்டார். அவர் கந்தசஷ்டி விரதம் என்று உமக்குத் தெரியும்தானே.. சந்திக்க முடியாது என்று சொல்லி அனுப்பி விடும். சொன்னதச் செய்யும்."

தொலைபேசியை அப்படியே வைத்து விட்டு ஒரு வெற்றிப் புன்னகையை ஓடவிட்டுக் கண்சிமிட்டினார்.

"இதுக்கெல்லாம் நீங்கதான் சரி."

பின்னணி பாடினார் ராமசாமி. அவர் இந்த நிறுவனத்தின் ஒருபிரிவுத் தலைவர். கதை பற்றிய வாதப்பிரதி வாதங்கள் தொடர்ந்தன.

"இந்தக் கதை இரண்டு கிழமைக்கு முதல் வந்தது. நான் அப்போதே இதப் படித்துப்போட்டன். இந்தக் கதையைப் பற்றி ஏன் கவலைப்படுறீங்க."

நிர்வாகக் கட்டமைப்புக்குப் பொறுப்பான தலைவர் மொஹிதீன் வினா எழுப்பினார்.

"ஏனா.. நல்ல கேள்வி ..இது.. எங்களக் குற்றஞ்சாட்டி எழுதின கதை இது. சும்மா விடலாமா.?"

கணக்காளர் கதிரவேல் கோபாக்கினி வீச்சோடு சாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தக் கதையில யாரையும் பெயர் குறிப்பிட வில்லை. எந்தக் கந்தோர் என்றும் இல்லை. கந்தோரில வேலை நடைபெறுவதில்லை. அலுவலர்கள் கடமை நேரத்தில ஊர்சுத்தி வருவதைச் சுட்டிக் காடடினால் நாம் ஏன் கோபம் கொள்ள வேணும். தொப்பி அளவுள்ளவங்க போடட்டும். நமக்கென்ன?".

தொடர்ந்து மொஹிதீன் கூறினார். பக்கத்தில் இருந்த சேனாதீரவும் ஆமோதித்தார்.

"என்ன.. ஐசே.. நீங்க இரண்டு பேரும் அந்தப் பக்கம் பேசுறீங்க." சுந்தரேசன் இடைமறித்தார்.

"நீங்க சும்மா இருங்க.. எங்களயும் எங்கட கந்தோரையும் பற்றித்தான் எழுதியிருக்கு.. அது எனக்கு நன்றாகத் தெரியும். பேர் போடாட்டி எங்களுக்குத் தெரியாதா? அவர் ஆருக்குக் கதை விடுறார்."

கணக்காளர் விளாசினார். அமைதியாக இருந்து அவதானித்த மேலாளர் சுந்தரம் நிதானமாக நிமிர்ந்து இருந்தார்.

"நாம் எல்லோரும் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கிறோம். எடுக்கிற சம்பளத்துக்காக மக்களுக்குச் சேவை செய்தால் எந்தக் குழப்பங்களும் வராது. எங்கட குறையச் சுட்டிக் காட்டினால் அதைப் பெருந்தன்மையோடு ஏற்றுத் திருந்த வேணும். எழுத்துச் சுதந்திரம் இருக்குது. எழுதுறார்கள். எங்கட கடமையை நாங்க செய்வதை விட்டுப் போட்டு இதுகளப் பெரிது படுத்துவதில பயனில்லை. எங்கட மண்ணுக்காக எத்தன பிள்ளைகள் தங்கட உயிரக் கொடுத்து வீரச் சாவை அணைக்குதுகள். இத யாரும் யோசிக்கிறீங்க இல்லை. நீங்களெல்லாம் என்ன பிறவிகள்." கூறிவிட்டு எழுந்து வெளியேறிவிட்டார். பின்னால் மொஹிதீனும் சேனாதீராவும் தொடர்ந்து தங்கள் அறைகளுக்குச் சென்று விட்டார்கள். அவர்களை எரித்து விடுவது போல் பார்த்தார்கள்.

"இவங்கள் விசரங்கள். நாங்க எங்கட வேலையைப் பார்ப்போம்."

கதை விவாதம் தொடர்ந்தது. அதே நேரம் இன்ரகொம் ஒலித்தது. எம்.டி.யின் குரல் ஒலித்தது. "ஹலோ.. எம்.டி.. ஹியர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.டி.யின் குரலைக் கேட்டதும் சுந்தரேசன் எழுந்து நின்று கொண்டார்.

"மிஸ்ரர் சுந்தரேசன். பிளீஸ்."

"யேஸ்.. சேர். சுந்தரேசன்... கதைக்கிறன்.."

"கொஞ்சம் மேலே வாறீங்களா.. ஏ. ஓ.வையும் கோவைகளோட வரச் சொல்லுங்கோ.."

இன்ரகொம் உறங்கிக் கொண்டது. ஏ.ஓ.வை அழைத்தார். வேண்டிய கோவைகளோடு கதையின் போட்டோப் பிரதியையும் மறக்காமல் எடுத்துக் கொண்டார்.

"மிஸ்ரர் கதிரவேல் நாங்கபோய் ஐந்து நிமிசத்தால அங்க வந்திருங்க"

இருவரும் மாடியில் எம்.டி.யின் அறைப் பக்கம் போனார்கள். சிற்றூழியன் சின்னத்தம்பி ஓடி வந்தான். அறைக் கதவைத் திறந்து விட்டான். உள்ளே சென்றார்கள்.

எம்.டி. இளைத்திருந்தார். கந்தசஷ்டி விரதம் உடலை மெலியச் செய்திருந்தது. மழித்தலும் நீட்டலும் இல்லாத முகம். இந்த விரத காலங்களில் எப்போது கந்தோருக்கு வருகிறார் போகிறார் என்பது சின்னத்தம்பியைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அவரது தவத்துக்கு இடஞ்சல் வராது பாதுகாப்பதில் அனைவரும் ஒத்துழைத்தனர். கந்தோரில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றிக் கவலைப்படாது எப்படி இவரால் தவம் செய்ய முடிகிறது.? பொது மக்களைப் பற்றிய சிந்தனை இல்லாத இந்த மனிதர்களை எப்படி மன்னிப்பது.? வனிதாவின் உள்ளத்தில் வினா விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருந்தது.

இன்று கந்தசஷ்டி விரதம் நிறைவு நாள். சூரனை வதம் செய்யும் நாள். இவர்களை அவரது கண்கள் கண்டு கொண்டன. ஒரு புன்னகையை உதிரவிட்டார்.

"வாங்க...."

வரவேற்றார். கைகளால் இருக்கைகளைக் காட்டினார் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர். கையை நீட்டியதும் கோவைகளை ஏ.ஓ. ஒப்படைத்தார். கோவைகளைப் பிரித்து ஏ.ஓ. 'பிளீஸ் ஸ்பீக்' என்று எழுதியதற்குக் கீழ் ஒப்பமிட்டுக் கொண்டே

"ஏதும் பிரச்சினைகள்...இல்லையோ? வேலைகள் எப்படிப் போகுது?"

எம்.டி. அவர்களிடம் கேட்டார். சின்னத்தம்பிக்குச் சிரிப்பு வந்தது. அவன் பழைய நாடகங்களைப் பார்த்திருக்கிறான். அதில் வரும் அரசர் அமைச்சரைப் பார்த்து "அமைச்சரே! நம் நாட்டில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?" என்று கேட்பதை நினைந்து கொண்டான்.

"அப்படி ஒன்றும் இல்லை.. சேர்."

ஏ.ஓ. மெதுவாக வாய்மலர்ந்தார். எம். டி.யின் கடை வாயில் மெல்லிய இளநகை ஓடியது. மெதுவாக நிமிர்ந்தார்.

"ஒருமாதிரி கந்தசஷ்டி முடிஞ்சுது. இன்டைக்குச் சூரன் போர். வீட்டுக்குப் போய் பிறகு கோவிலுக்குப் போகவேணும்."

இறுதியாக இருந்த கோவையிலும் கையெழுத்துப் போட்டுவிட்டு கோவையைத் தூக்கிப் போட்டார். மேசையில் கதையின் போட்டோப் பிரதி கிடந்து அவரைப் பார்த்துச் சிரித்தது.

"என்ன இது.."

நிமிர்ந்து சுந்தரேசனைப் பார்த்தார். சுந்தரேசன் வேறெங்கோ பார்வையைச் செலுத்தினார்.

"கதையின் போட்டோப் பிரதி. நமது கந்தோரைப் பற்றித் தாறுமாறாக எழுதிக் கிடக்குது."

ஏ.ஓ.கூறிக்கொண்டே இருந்தார். எம்.டி.யின் கண்கள் கதையை மேய்ந்தன. சந்தர்ப்பம் பார்த்துக் கதிரவேல் வந்து விட்டார். எம்.டி.வாசித்துக் கொண்டே கேட்டார்.

"ஆர் எழுதினது.."?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ வேறு ஆர்..எங்கட ‘சி’ ஏரியா மனேஜர்தான்.” கதிரவேல் வந்து கொண்டே கூறினார்.

“ ம் .. அவரே எழுதினவர்.” .

“உவர் இப்படித்தான். உவங்கள இப்படியே சும்மா விட்டால் தலைக்கு மேல ஏறுவாங்கள். இவங்களப்போல ஆக்கள டிஸ்மிஸ் செய்ய வேணும். நானென்டா அதத்தான் செய்வன்.”

கதிரவேல் தொடர்ந்து கொண்டே இருந்தார். எம்.டி. கதையை வாசித்தார். அதே நேரம் ஆழமாக யோசித்தார். அவரது முகம் விகாரம் அடைந்து வருவதை அவதானித்தனர்.

“சேர்.”

“ம். சொல்லுங்க.” வாசித்துக் கொண்டே பதில் கூறினார்.

“உங்களப் பற்றித்தான் கூடாமல் எழுதிக் கிடக்கு. இந்த கந்தசஷ்டி விரதத்தைக் கூட உங்கள நிம்மதியாகப் பிடிக்க இவங்க விடல்ல.”

கதிரவேல் தூபமிட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு அந்த ‘சி’ ஏரியா மனேஜர் மேல் சரியான கோபம். உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யவில்லை. அந்த மனேஜரின் அவசரம் கணக்காளருக்குப் புரியவில்லை. அதைக் கேட்கப் போய் கணக்காளரின் பகைவராகி விட்டார். இதுதான் வஞ்சம் தீர்ப்பதற்கான சரியான சந்தர்ப்பம். கதிரவேல் குழைந்து கொண்டு நின்றார். எம்.டிக்குக் கோபம் வந்ததற்கான சாயல் தெரிந்தது. கதிரவேலுவை இடைமறித்தார்.

“சரி..சரி.. போதும். கையை உயர்த்திக் காட்டினார். கண்களை மூடிக்கொண்டார். அப்படி அவர் கண்களை மூடினார் என்றால் கதை முடிந்தது என்று அர்த்தம். அவரது மனதில் பெரிய சூரசம்ஹாரப் போராட்டம். மெதுவாக அங்கிருந்து நகர முயன்றனர்.

“சேர்.. எடுக்க வேண்டிய முடிவை எடுங்க.. நாங்க வாறம் ..சேர்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கொண்டு ஒரு அடியெடுத்து முன்னே வைத்தனர். எம்.டி. மூடிய கண்களைத் திறந்தார்.

"சரி.. உங்கட முடிவு என்ன வென்று சொல்லேல்ல."

எம்.டி.யின் குரல் அவர்களை இழுத்தது. மெல்லத் திரும்பினர்.

''சேர் .. உங்களப் பற்றியும் கந்தோரைப் பற்றியும் எழுத இவர் ஆர். என்ன தைரியம் இவருக்கு?"

கதிரவேல் துள்ளினார்.

"சேர்.. உங்களுக்கு ஒன்றெண்டா.. அது எங்களுக்கும் தான் சேர். எங்களால பார்த்திட்டுச் சும்மா இருக்கேலாது. தானாடா விட்டாலும் தன் தசை ஆடும் சேர். இவரை உடனே நிப்பாட்ட வேணும். அதைச் செய்யுங்கோ."

ஏ.ஓ. சிங்காரம் அழுத்திச் சொன்னார். சுந்தரேசனைப் பார்த்தார். அவரிடமிருந்து பதிலை எதிர்பார்த்தார்.

"என்ர முடிவும் அதுதான் சேர்." சுந்தரேசன் தனது முடிவை அறிவித்தார்.

" சரி.. உங்கட முடிவுதான் என்ர முடிவும். முதலில் ஒழுக்கக் கோவையைப் பாருங்கள். அவரை எந்தப் பிரிவுக்குள் டிஸ்மிஸ் செய்யலாம் என்று தீர்மானியுங்கள். கடிதத்தை அடித்துக் கொண்டு வாருங்கள்."

எம்.டி. இறுக்கமான குரலில் கட்டளையிட்டார். ஒரு கணம் அவர்களுக்கு அதிர்ச்சியான இன்பமாக இருந்தது. மகிழ்ச்சியால் வானைத் தொட்டு வந்த உணர்வைப் பெற்றனர். தங்களைச் சுதாகரித்துக் கொண்டனர்.

"கடிதம் இதோ ரெடி.. சேர்.. உங்களப் பற்றி இப்படி எழுதின பிறகு டிஸ்மிஸ் செய்யாமல் எங்களால வேலை செய்ய ஏலாது. அதனால்தான் கடிதத்தை தயார் செய்தம்."

சுந்தரேசன் ஒரு உருக்கத்தோடு கூறிக் கடிதத்தைக் கொடுத்தார். மெல்லிய சிரிப்போடு கடிதத்தைப் பெற்றுக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.டி. படித்தார். சந்தோச ரேகைகள் அவர் முகத்தில் தாண்டவமாடின. கடிதத்தில் ஒப்பத்தை இட்டுக் கொடுத்தார்.

"உடனே இத அவருக்கு அனுப்பி விடுங்க." கொடுத்து விட்டுப் பெரியதொரு சாதனையைச் செய்த மகிழ்ச்சியில் படியிறங்கிப் போய்க் கொண்டிருந்தார் எம்.டி.

எம்.டி.யைச் சந்திக்க வந்த சனங்கள் காத்திருந்தனர். அவர்களுக்குச் சாட்டுச் சொல்ல இயலாமல் வனிதா களைத்துப் போய்விட்டாள். எம்.டி. சனங்களைக் கண்டும் காணாதவாறு போய் விட்டார். சனங்கள் ஏமாற்றத்துடன் வந்த வழியே திரும்பி விட்டனர்.

மாலை ஐந்துமணி. கோயில் வீதியில் சனக்கூட்டம். எங்கும் சிறுவர்களின் கொண்டாட்டம். வீதிகளின் ஓரங்களில் வாகனங்கள். அரச, அரசசார்பற்ற நிறுவன வாகனங்களும் தனியார் வாகனங்களும் நீக்கமற நிறைந்து நின்றன. இருக்குமட்டும் அனுபவிப்பது ஒருகலைதான். அந்த வகையில் எல்லா அதிகாரிகளும் கொடுத்து வைத்தவர்கள். சாதாரண மக்கள் தலைமேல் கைகூப்பியவாறு கண்களில் கண்ணீர் மல்கிப் பெருக்கெடுத்தோட சன்னதமாகி நின்றனர். பட்டு வேட்டியும் திறந்த மேனியைப் பட்டும் படாமலும் சால்வையால் போர்த்தியபடி கழுத்தில் தடித்த தங்கச் சங்கிலி மின்ன அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் வாகனங்களில் இருந்து இறங்கி வந்தனர். கண்ட பொதுமக்கள் மரியாதைக்காக வழிவிட்டு விலகி நின்றனர்.

சூரன் போருக்கு ஆயத்தமாகி விட்டான். கட்டுமஸ்த் தானவர்கள் சூரனைச் சுமந்து நின்றனர்.

சூரனின் தோற்றம் சிறுவர்களைப் பயமுறுத்தியது. சூரன் போருக்கு வந்து ஒரு புறமாக நின்றான். இன்னொரு புறம் கந்தன். இருள் பரந்து சூழத்தொடங்கியது. போர் தொடங்கி விட்டது. சூரனின் அம்பு வரும்போது கந்தன் குனிந்து மாறுவதும் கந்தனின் அம்பு வரும்போது சூரன் குந்தி நிமிர்ந்து ஓடுவதும் சிறுவர்களுக்குக் கொண்டாட்டமாக இருந்தது. சூரனையும் கந்தனையும் சுமந்து ஒரு உண்மைப் போராகவே நடத்திக் கொண்டிருந்தனர்.

கந்தனைச் சுமந்து வருபவர்கள் விரைவாக ஓடுவார்கள். அந்த நேரம் சூரனைச் சுமந்து வருபவர்கள் குனிந்து நிமிர்ந்து மறைந்து ஓடுவார்கள். கந்தன் வாளைச் சுழற்றி வீசுவார். அவை கீழே விழச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் பொறுக்கி எடுத்து மகிழ்வது பார்க்க வேடிக்கையாகவும் சந்தோசமாகவும் இருக்கும். கீழே விழும் அம்பு வாள் ஆகியவற்றைப் பொறுக்குவதில் சிறுவர்களுக்கு இடையில் ஒரு போட்டியே நடக்கும். ஒரு அம்பைக் கந்தன் வில்லில் தொடுத்துவிட அது சூரனின் தலையைத் துண்டிக்கும். சூரனைத் தாங்கியவர்கள் ஓடுவார்கள். சற்று நேரத்தின் பின் சூரன் தலையை மாற்றி வேறு தலையோடு வருவான். தலைகள் அறுபட அறுபட புதுப்புதுத் தலைகளோடு சூரன் தோன்றுவான்.

எம்.டி. கைகூப்பி நின்றார். தன்னைக் கந்தனாகப் பாவனை செய்து கொண்டார். அவரது 'சி' ஏரியா மனேஜரைச் சூரனாகப் பாவனை செய்து விட்டார். கந்தன் வீசும் ஆயதங்களைத் தான் வீசும் ஆயதங்களாக எண்ணிக் கொண்டார். சூரன் தலை அறுபடும் போது சந்தோசத்தால் ஆர்ப்பரிப்பார். வேறு தலையோடு சூரன் வரும்போது 'சி' ஏரியா மனேஜர் வருவதுபோல் நினைத்துக் கோபத்தில் தவிப்பார். அவர் தன்னைப் பற்றி எழுதிய ஒவ்வொரு சொல்லும் மனக்கண் முன் சுழன்று சிரிக்கும். இப்போது சூரன் வருகிறான். கந்தன் இறுதியாக தனது வேலை எறிகிறான். கந்தன் எறியும்போது எம்.டி.யின் வாயிலிருந்து 'தொலைந்தான்' என்ற சொல்லும் பறக்கிறது. சூரனின் தலை அறுபட்டு வெற்றி கண்டபோது தான் 'சி' ஏரியா மனேஜரை டிஸ்மிஸ் செய்து வீழ்த்தி விட்டதாக வெற்றிப் புன்னகை செய்தார். அவருக்கு மனம் நிறைந்து இருந்தது.

சூரன்போர் முடிந்து விட்டது. கோயில் வீதி வெறிச்சோடிப் போய்க் கிடந்தது. வீடு போய்ச் சேர்ந்ததும் எம்.டி தனது அறையினுள் நுழைந்தார். கந்தசஷ்டி விரதம் தொடங்கிய நாளில் இருந்து இன்றுவரை அறையுள் போகவில்லை. அலுவலகத்தோடு வீட்டுக்கும் ஈ மெயில் தொடர்பு வசதி இருந்தது. 'லைற்றைப்' போட்டு கொம்பியூட்டரை முடுக்கினார்.

"எனது அந்தரங்கங்களைக் கதையாகவா எழுதினாய். உனது கதையை நான் எழுதி முடிச்சிட்டன்." மனதில் சொல்லி அட்டகாசமாய் சிரித்தார். ஈ மெயிலின் 'இன்பொக்ஸைக்' கிளிக் செய்தார். கடிதங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து விழுந்தன. அவரைப் பார்த்து ஒரு கடிதம் சிரித்தது. அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் அவருக்குத் தலை சுற்றியது. அது அவரது உடனடியான இடமாற்றக் கடிதம். கூடவே கணக்காளர் ஏ.ஓ. டி.எம்.டி.க்கும் மாற்றம் காத்திருந்தது. கொம்பியூட்டர் மேசையில் தலையைக் குப்புறக் கிடத்தி கண்மூடிக் கிடந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நூல்கள்

**சிறுவர் பாடல்கள்**

1. இன்பக்கனிகள்
2. பாட்டுப் பாடுவோம்
3. பாடி ஆடுவோம்
4. காகமும் தம்பியும்
5. கடலும் காவிரியும்
6. சின்னச் சின்னப்பாட்டு
7. மனதுக்கினிய பாட்டு
8. ஆனந்தமான பாட்டு

**சிறுவர் கதைகள்**

1. பூஞ்சிட்டுக்கள்
2. தங்க மாம்பழம்
3. ஆடி மகிழ்வோம்

**சிறுவர் நாவல்கள்**

1. பளிங்குத்தீவு
2. காட்டில் கலவரம்
3. பயங்கொள்ளலாகாது பாப்பா
4. உல்லாசப்பயணம்
5. மனதில் உறுதிவேண்டும்.

**சிறுகதைகள்**

1. அந்த ஆவணி ஆறு
2. வம்மிப்பூ
3. கேணிப்பித்தன் கதைகள்

**கவிதை**

1. கேணிப்பித்தன் கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை இலக்கியம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ததாகக் கூறுவதை நான் ஏற்பதில்லை. நமது சங்ககால இலக்கியங்களில் அற்புதமான சிறுகதை வடிவங்களைக் காணலாம். அதேபோல் வெளிநாட்டுச் சிறுகதை எழுத்தாளர்களைப் போல், புதுமைப் பித்தனைப்போல் எழுத வேண்டும் என்பதையும் என்னால் ஏற்க முடியாது. ஒரு காலத்தில் அவை தேவைப்பட்டன. ஈழத்தவர் கள் எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு கொழுந்து விட்டெரியும் உணர்ச்சிப் பிளம்புகளோடு நித்தம் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது இதயத்துடிப்பை நாடிபிடித்துப் பார்க்க வேண்டும். அந்த அனுபவங்களை அனுபவித்தும் உள்வாங்கியும் கருவூலங்கள் பிரவா சிக்கின்றன. ஈழத்து எழுத்தாளர்களது ஒவ்வொரு ஆக்கத்திலுள்ளும் பற்றாத புதிய தீக்குச்சுகளாக அவை உள்ளன. அந்த ஆக்கங்கள் படிப்பவர்களின் உள்ளத்தில் உரைஞ்சும்போது நிச்சயம் பற்றும். எத்தனை நாட்களுக்குப் 'போல' இருந்து பொறுப்பது. அந்தக் கட்டுமானங்களைத் தகர்த்தெறிந்து 'போல' இருப்பதை விடுத்துச் சுயங்கள் வெளிவரவேண்டும். அதற்கு நமது திறனாய்வாளர்கள் உந்து சக்திகளாக மாறவேண்டும்.

**கேணிப்பித்தன்**



ISBN 955 - 98211 - 4 - 8

90000>

9 789559 821144

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org